SUPPLEMENT

TO

# The Ceylon Government Gazette,

## FRIDAY, JANUARY 11, 1907.

[Proclamation regarding the By-laws of the Municipal Council of Kandy.]

**தேசாதிபதி யவர்களின் பிரசித்த விளம்பரம்.**

---

சந்மைக்கல் அன் சந்ஜோஜ் என்னும் மகா மேன்மை பொருந்திய ஓடரின் கிருஸ் குரோஸ் தயிற்பட்ட வர்த்தனரும், இலங்கைக்கும் அதைச்சார்ந்த தேசங்களுக்கும், தேசாதிபதியும், சேனுபதியுமாகிய உத்தமனுர் சேர் ஹென்றி ஆர்தர் பிளேக் அவர்களால் செய்யப்படும் விளம்பரமாவது.

ஹென்றி ஆ. பிளேக்.

௧௮௮௭ ம் ஆண்டின் ௭ ம் இலக்க கட்டளைச்சட்டத்தின் கொள்கைகளை ஒப்பேற்றுவதற்காகவும் அவசரமான ஆணைச்சட்டங்களை நகரசங்கமானது காலத்திற்குக் காலம் செய்யவும், செய்தபின் அவைகளை அழிக்க, திருத்த அல்லது மாற்றவும் ௧௯௦௧ ம் ஆண்டின் ௮ ம் இலக்க கட்டளைச் சட்டத்தின் ௪ ம் பிரிவினுல் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கின்றது மேலும் குறித்த சட்டத்தின் ௯ ம் பிரிவின் (௧ ம்) (௨ ம்) கீட் பிரிவுகட்கமைய, (1) யாதாமொரு ஆணைச்சட்டம் அல்லது அவற்றின் அழித்தல் திருத்தம் அல்லது மாற்றம், அரசாட்சிச் சங்கத்தின் சம்மதத்துடன் தேசாதிபதியவர்களால் உறுதிப்படுத்தினுல் அன்றி பெலன்பெற மாட்டாது. (2) அன்றியும் இவ்விதமாய் உறுதிபண்ணிய ஆணைச்சட்டங்கள் யாவும் அடுத்துவரும் இரண்டு அரசாட்சி "கசற்" பத்திரிகைகளில் இங்கிலீஸ், சிங்களம், தமிழ் பாஷைகளில் பிரசுரம் பெற்ற அன்னேரத்தில் சட்ட திருபணச் சங்கம் கூடுமாகில் அச்சங்கத்திலும் அல்லது அடுத்துக்கூடும் சங்கத்தின் முன் சீக்கிரத்தில் வைக்கவேண்டியது. இவ்வண்ணம் குறித்த சட்ட திருபணச் சங்கத்தின் முன்வைத்த நாற்பது நாட்களுக்கு முன்னர் அப்படிப்பட்ட ஆணைச்சட்டங்களில் யாதாமொன்றை குறித்த சங்கமானது தடைபண்ணுங்கால், மேற்சொல்லிய சங்கம் அதின் தீர்மானத்துடன் அத்தணைச் சட்டங்களை திருத்த அல்லது அழிக்கவும் அவ்வண்ணம் திருத்தப்பட்ட ஆணைச் சட்டங்கள் அரசாட்சியின் அடுத்துவரும் இரண்டு "கசற்" பத்திரிகைகளில் பிரசுரம்பெற்றதின் பின்னர் சொல்லிய கட்டளைச் சட்டத்திலவை அடங்கியதுபோல், ஞாயமும், உறுதியும், பெலப்பும், கட்டுப்பாடு உள்ளனவாவுமாக ஒப்பேறும்

மேற்கூறிய ௧௯௦௧ ம் ஆண்டின் ௮ ம் இலக்க கட்டளைச்சட்டத்தின் ௪ ம் பிரிவின் கொள்கைகட்கமைய செய்யப்பட்டு இத்துடன் அணைத்திருக்கும் டாப்பில் காணப்படும் ஆணைச்சட்டங்கள் மேற்சொல்லிய கட்டளைச்சட்டத்தின் ௯ ம் பிரிவின் (௧ ம்) (௨ ம்) கீட்பிரிவுகட் கடங்க அரசாட்சி சங்கத்தின், ஆலோசனையுடன் தேசாதிபதியவர்களால் உறுதிபண்ணப்பட்டு ௧௯௦௬ ம் வருஷம் ஆவணிமாசம் ௩ ம் ௧௦ ம் திகதிகளின் முறையே அடுத்த இரண்டு அரசாட்சி "கசற்" பத்திரிகைகளில், இங்கிலீஸ், சிங்களம், தமிழ் பாஷைகளில் பிரசுரம்பெற்ற அன்னேரத்தில் கூடும் சட்டதிருபணச் சங்கத்தின் முன் வைக்கப்பட்டுள்ளன.

மேற்கூறிய சட்டதிருபணச் சங்கத்தால் குறித்த ஆணைச்சட்டங்கள் திருத்தப்படவாவது அழிக்கப்படவாவது மில்லை.

1

மேற்சொல்லியபடி தேசாதிபதியவர்களாகிய நமக்கு அளிக்கப்பட்ட தத்துவத்தின் பெலப்பைக்கொண்டு இத்துடன் அணைக்கப்பட்டிருக்கும் டாப்பிலுள்ளபடி குறித்த துணைச்சட்டங்களை இந்தத் தேதி முதலாகவும் அதன் பின்பும் பெலப்புடையவைகளாமென இத்தால் விளம்பரம் செய்கின்றோம்.

இலங்கைத்தீவில் எங்கள் கர்த்தருடைய 1906 ம் வருஷம் டிசம்பர் (மார்கழி)மாதம் 18 ந் தேதி கொழும்பிலே கொடுக்கப்பட்டது.

மகோத்தமரவர்களினது கட்டளைப்படி,

ஜீ. எம். பவுவர்,
கொலோனியல் சக்கிர்த்தாரின் வேலைபார்ப்பவர்.

மன்னரைத் தேவன் காப்பாற்றுவாராக!

---

## கண்டி நகர்ச்சங்கத்தின் துணைப்பிரமாணங்கள்.

### 1 ம் அதிகாரம்.

#### உத்தியோக நியமனம்.

*உத்தியோகங்களுஞ் சம்பளங்களும்.*

1. காலத்துக்குக் காலம் சங்கத்தார் சங்கத்தில் நிர்ணயங்கொண்டு புதிதாய் உத்தியோகங்களை உண்டுபண்ணவும் அப்படி உண்டுபண்ணிய ஒவ்வொரு உத்தியோகத்துக்குந் தமக்குச் சரியென்று தோற்றுகிற அளவு சம்பளத்தை ஏற்படுத்தவும் நீதியாகவிருக்கும். சபாநாயகர் ஞாயப்பிரமாண முறையாகத் தான் நியமிக்க அதிகாரமுள்ள உத்தியோகஸ்தனுக்குக் கொடுக்குஞ் சம்பளத் தொகை இன்னதென்று குறிக்கலாம். ஆனாலத்தொகை அவ்வுத்தியோகத்துக்குச் சங்கமேற்படுத்திய தொகைக்கு அதிகப்படக்கூடாது.

இதிலடங்கிய எதுவுஞ் சங்கமப்பிரகாரங் கற்பிக்குமாகில் ஒராள் ஒரு உத்தியோகத்துக் கதிக உத்தியோகத்தைக் கொண்டிருக்க அல்லது சபாநாயகர் யாதொரு அவசர காலத்தில் காரிய சங்கத்தாரின் சம்மதியோடு தேவையான வேறு உத்தியோகஸ்தர்களை காரிய சங்கத்தார் தகுதியென்று காண்குஞ் சம்பளத்துக்கு வேலைகொடுக்கவுந் தடை செய்யாதிருக்கும்.

*உத்தியோகஸ்தர் கடமைகள்.*

2. நகர்சங்கத்தின் சக்கிரத்தார், மறு உத்தியோகஸ்தர் பணிவிடைகாறர்களுஞ் சபாநாயகர் காலத்துக்குக் காலங் கற்பிக்கும் மணித்தியாலங்களளவுக்குக் கடமைகள் செய்யவேண்டியது.

---

### 2 ம் அதிகாரம்.

#### நகர்சங்கம் பணிவிடை முதலியது நடத்தும் விபரம்.

*அங்கத்தவர்களின் முதன்மை முறை.*

3. நகர்சங்கத்தைச்சேர்ந்த சகல கருமங்களில் அங்கத்தவரின் முதன்மையும் மூப்பும் பின்னூற் சொல்லிய முறையே ஒழுங்குபற்றி நடைபெறவேண்டும். முதல் சபாநாயகர் அவரின் பின் முதல் ஏற்படுத்திய அல்லது தெரிந்துகொண்ட அங்கத்தவர் அந்தந்த நிரையாகவும் முன்னிருந்த அங்கத்தவரெவரையுந் திரும்பத் தெரிந்த அல்லது திரும்ப ஏற்படுத்தியிருந்தபோதில் சங்க அங்கத்தவராக முன் நீடித்திருந்த வழி நிரையாக முதன்மை கொண்டிருப்பார்கள்.

*சபா நாயகரின் கடமைகள்.*

4. சங்கங் கூடியிருக்கும்போது சபா நாயகர் காரியங்களை முறையே நடப்பிப்பதும் ஒழுங்கு முறையிலப்பிசகு வருகையில் அதில் தன் தீர்மானஞ்சொல்லி முடிவாக்குவது மவர் கடமை.

*பணிவிடை நடத்தும் ஒழுங்கு.*

5. நகர்சங்கக் கூட்டங்களில் பணிவிடைகள் பின்வருகிற ஒழுங்குப்படி நடத்த வேண்டும், அதாவது :—

*மினிற் என்னுஞ் சங்கப் பொழிப்புகள்.*

(a) முன் நடந்த கூட்டத்தின் வர்த்தமானப் பொழிப்புகளை வாசித்து தேவையாகில் திருத்திப் பெலப்படுத்த வேண்டும்.

*கணக்குகள்.*

(b) மாதாந்த வரவு செலவுக் கணக்கு, வங்கியின் பாஸ்ப் புஸ்தகம், அறவிட்ட வருமானத்தினதும் வேலைகளினதும் செல்வகை றிப்போட்டுகள், நகர் நீதி விசாரணைத் துறையின் வேலையின் கணக்கு, சவுக்கிய விசாரணை உத்தியோகஸ்தரின் றிப்போட்டும், மறு நகர்சங்க உத்தியோகஸ்தர்களின் றிப்போட்டுகளும், நகர்சங்கத்தில் கொடுக்கவேண்டும்.

*விண்ணப்பம் மன்றாட்டுக் கடதாசி முதலியவைகள்.*

(c) நகர்சங்கத்துக் கெழுதப்பட்ட விண்ணப்ப பத்திரங்கள், மன்றாட்டுக் கடதாசிகள், முறைப்பாடுகள், சம்பாஷணைகளுஞ் சங்கத்து முன்பதாக வைக்கப்படவும் அதுகளில் கட்டளைகளிடவும் படும்.

*கேள்விகள்.*

(d) நகர்சங்கத்துக்கு இன்ன கேள்வியென்று முன்தெரியக் கொடுத்திருக்குங் கேள்விகள் கேட்கலாம்.

*மோஷன் என்னுங் குறித்த அறிவித்தல்கள்.*

(e) இன்ன மோஷன்கள் போடுகிறதென்று நகர்சங்கத்துக்கு அங்கத்தவர் தெரிதல் செய்யவேண்டும்.

*மோஷன்கள்.*

(f) மோஷன்கள் செய்யலாம்.

*நகர்சங்கம் கொம்மிற்றியாகுதல்.*

6. நகர்சங்கம் தம்முடைய அங்கத்தவர்களையும் எந்தச் சமையத்திலும் ஒரு கொம்மிற்றியாகக் கிரகித்துக் கொள்ளலாம். திரும்பியுஞ் சங்கங் கூடுகையில் அக்கொம்மிற்றியின் தீர்மானங்களைக் குறித்துப் பணிவிடை நடத்திக் கொள்ளலாம்.

*மன்றுட்டுப் பத்திரங்கள் மரியாதி முறையாக விருப்பது.*

7. ஓர் மன்றுட்டுப்பத்திரம் அல்லது வேறு சம்பாஷணையைக் கொடுக்கிற ஏதொரு அங்கத்தவர் அதன் வாசகமல்லது உள்வடங்கியிருப்பதுகள் முற்றுக மரியாதி முறையாக விருக்க உத்தரவாதியாக விருப்பார்கள்.

*மன்றுட்டுப் பத்திரங்கள் கொடுப்பது.*

8. ஓர் மன்றுட்டுப் பத்திரம் அல்லது மற்ற சம்பாஷணையை நகர்சங்கத்துக்குக் கொடுக்கும்போது அதன் பொருளைச் சுருக்கத்தில் சொல்லி ஒரு அங்கத்தவர் கேள்விக்கு இன்னொரு அங்கத்தவர் முறைமையாக ஆம் சொல்லியபின் அப்பத்திரத்தை வாசிக்கலாமோவென்ற கேள்வி போடலாம்.

*மன்றுட்டுப் பத்திரகாறரை விசாரணை செய்தல்.*

9. நகர்சங்கத்தின் ஏதொரு செய்கை, கட்டளை அல்லது நடக்கையால் ஒருவன் உருத்து அல்லது நயசுகங்கள் தாக்கலடைந்திருக்கும் எக்காரியத்திலும் அப்படித் தாக்கலடைந்த எல்லாத் திறத்தவர்களுந் தாமாக அல்லது ஓர் ஞாயதுரந்தரர் வழியாக மன்றுட்டுப் பத்திரங் கொடுப்பதின் பேரில் நகர்சங்கந் தமது கொம்மிற்றி முன்பு கேள்வி விசாரணை செய்வார்கள்.

*சாட்சி இடாப்பு.*

10. சாட்சிகள் விளங்க வேண்டுமாகில் அப்படிச் சாட்சிகள் தேவையென மன்றுட்டுப் பத்திரகாறன் அல்லது அங்கத்தவர் விளக்கத்துக்கு நியமிக்கப்பட்ட நாளுக்குக் குறைந்த கணக்கில மூன்று நாட்களுக்கு முன்னிதாக அச்சாட்சிகளின் பெயர்கள் இருக்குமிடங்கள் தொழில் அடங்கிய ஒரு இடாப்புச் சக்கிறெத்தாருக்குக் கொடுக்கவேண்டும்.

*சாட்சிகளை அழைத்தல்.*

11. அதன்பேரில் சக்கிறெத்தார் சபா நாயகர் அனுமதியோடு ஒவ்வொரு சாட்சிக்காறனுக்கும் சம்மன்ஸ் என்னும் அழைப்புப்பத்திரம் இதன் அனுபந்தத்தில் A. அட்சர மாதிரியில் அனுப்ப வேண்டும். சபாநாயகர் அவ்வித பணிவிடைக்கு நியமித்திருக்கும் ஆள் ஒருவர் சாட்சிக்கு அச்சம்மன்சைக் கொடுக்கவேண்டும். சம்மன்ஸ் கொடுப்பது கொப்பியைச் சாட்சிக்காறனிடமே கொடுப்பது அல்லது அவர் குடியிருக்குமிடத்தில் விட்டுவைப்பதாக விருக்கும். அப்படிச் சம்மன்ஸ் கொடுப்பது சாட்சி வரவேண்டிய தினத்துக்குக் குறைந்த பட்சம் 48 மணித்தியாலங்களுக்கு முன்னிதாகக் கொடுக்கவேண்டியது.

அழைக்கப்பட்ட ஒவ்வொரு சாட்சியும் சம்மன்சுக்கு அமைதலாக நடக்கக் கட்டுப்பட்டவராக விருப்பார்.

*மன்றுட்டுப் பத்திரங்களின் சாட்சிகள்.*

12. ஒவ்வொரு சாட்சிக்காறன் சொல்லுஞ் சாட்சியைச் சக்கிறெத்தார் எழுதிச் சாட்சிக்காறனுக்கு வாசித்துக் காட்டவேண்டியது. அச்சமையமே சாட்சியில் யாதொன்று திருத்தவேண்டியிருக்கில் சொல்லித் திருத்திக்கொள்ள வேண்டியது, திருத்திக்கொள்ளாமலிருக்கில் சாட்சி எழுதியபடியேயிருக்கும். பின்பு மாறுதல் செய்படக்கூடாது.

*மோசன்களையுங் கேள்விகளையுங் குறித்த அறிவித்தல்கள் கொடுத்தல்.*

13. ஒரு கேள்விகேட்க அல்லது மோஷன் போடவென்று விருப்பமுள்ள யாதொரு அங்கத்தவர் அக்கேள்வி அல்லது மோஷனைக்குறித்து அறிவித்தல் கொடுக்கவேண்டும். இந்த அறிவித்தல் நகர்சங்கம் உத்தரவு செய்தாலொழிய மற்றும்படி சங்கங் கூடியிருக்கும் கூட்டத்தின் ஏதொரு முதல் கூட்டத்தில கொடுக்கவேண்டும் அல்லது கேள்விகேட்க அல்லது மோஷன்போட எண்ணியிருக்கிற தினத்துக்குக் குறைந்தபட்சம் மூன்று நாளுக்குமுந்தி ஒரு காகிதவழியாக அங்கத்தவர் சக்கிறெத்தாரிடங் கொடுக்கவேண்டும்.

*அறிவித்தல்கள் எப்படிக் கொடுப்பது.*

14. அப்படி அறிவித்தல் கொடுக்கும் ஒவ்வொரு சங்க அங்கத்தவர் கேட்குங்கேள்வி அல்லது போடும் மோஷனின் ஒரு கொப்பியைச் சக்கிறெத்தாரிடம் ஒப்படைத்தல் வேண்டும்.

*கேள்வி கேட்டல்.*

15. ஏதொரு கேள்வி கேட்கும்போது அக்கேள்வியை விளங்கச்சொல்லுகிற அளவுக்கு மேற்பட யாதாமொரு உத்தரிப்பு அல்லது அபிப்பிராயம் சொல்லப்படாது. யாதொரு அங்கத்தவர் கேள்வியைக்குறித்த காரியங்களைத் தர்க்கஞ் செய்யவும்படாது.

*கேள்விகளைக்குறித்துத் தீர்மானித்தல்.*

16. அங்கத்தவர் ஒருவர் ஒரு மோஷனைச்சொல்லி அத்தை இன்னொரு அங்கத்தவர் சம்மதமல்லது ஆம் சொல்லி அதையிட்டு அங்கத்தவர்களுள் தர்க்கமானால் அது முடிந்தபின் அக்கேள்வியைச் சபாநாயகர், அங்கத்தவர்கள் அதனட்பெயர்கள் சம்மதமறிய விடவேண்டியது.

*இன்னுமொரு அங்கத்தவர் சம்மதஞ்சொல்லி இரா மோசன்.*

17. இன்னுமோர் அங்கத்தவர் சம்மதஞ் சொல்லாத மோஷன் எதுவுந் தர்க்கத்தில் விடுபடாதசங்க (மின்ற்) பொளிப்பில் பதியவும்படாது.

*கிரமமாயுள்ள தீர்மானங்கள்.*

18. காலத்துக்குக் காலங் கொடுப்பதான கணக்குகள் பதிவுசெய்தல் அல்லது சங்கத்தின் வர்த்தமானங்களைப் பெலப்படுத்துகிற பொளிப்புகள் முதலானதைப் போலொத்த கிரமமாயுள்ள தீர்மானங்களை அங்கத்தவர் எவியும் ஆமென்று சம்மதஞ் சொல்லாமலுஞ் சபாநாயகர் கூட்டத்துக்குத்தெரியப்படுத்தலாம். சபாநாயகரிருக்காத சமையம் முகாமையாகவிருக்கும் பொருட்டு சபாநாயகர் ஒருவரைத்தெரிதல், எதுவுங் குறிப்பான பணிவிடை மற்றவைகளில் முந்தி நடத்தல் சங்கக் கூட்டத்தைத் தவணைவைத்தல் இதுகளைப்போலொத்த கருமங்களைக்குறித்த மோஷன்களை அங்கத்தவர் ஒருவர் சம்மதஞ் சொல்லவேண்டு, அதுகள் எழுத்துமூலமாக விருக்கத் தேவையில்லை.

*மோசனை எடுத்துப்போடல்.*

19. மோஷன்செய்த ஒரு அங்கத்தவர் சங்கத்தவரின் உத்தரவுபெற்றுத் தமது மோஷனை எடுத்துப்போடலாம்.

*தர்க்கம் நடத்துவதைக்குறித்த ஒழுங்குகள்.*

20. ஒவ்வொரு அங்கத்தவரும் பெசுகையில் எழுந்து நின்று அக்கிராசனரை நோக்கிப் பேசவேண்டும். பேசுகிறவர் தன் குறிப்புகளைப் பார்வையிட்டுக் கொள்ளலாம். ஆனால் எழுத்தில் அல்லது அச்சிட்டுவைத்திருந்து பேச்சு நடத்த விடங் கொடுபடாது.

*இரண்டு அங்கத்தவர் ஒரே சமையம்பேச எழும்புகையில்.*

21. முதல் எழும்புகிற அங்கத்தவருக்கே பேச உருத்துண்டு. இரண்டு அல்லது அதன் அங்கத்தவர்பேச ஒரேசமையம் எழுந்து நின்றால் சபாநாயகர் தன்னெண்ணத்தில் எவரைப்பேசவிட உருத்துண்டென்று தீர்மானித்து அவரைப் பேசும்படி சொல்லவேண்டும்.

*அங்கத்தவர் ஒரு மோசனைக் குறித்து ஒரேமுறை மாத்திரம் பேசுதல்.*

22. எதுமொரு மோஷனைக் குறித்துத் தர்க்கம் நடக்கும்போது யாதொரு அங்கத்தவருக்கும் ஒரு முறைக்குமேல்பேச இடமில்லை. தாம் சொன்னதை விளங்கப்படுத்தலாம். யாதொரு காரியத்தைக் கொம்மிற்றியில் தர்க்கமிடும்போது ஒரு முறைக்குமேல்படப் பேசலாம் ஆனால் திருத்திய மோஷனுக விருக்காமல் உறுதியான மோஷனைக்கொண்டு வந்திருக்கும் அங்கத்தவருக்கு மறுமொழி பெற இடமுண்டு. அந்த மறுமொழி பெற்றவுடன் அம்மோஷன் போடப்படும்.

*தகாத நோக்கச் சார்புறச்சொல்லல்.*

23. ஒரு அங்கத்தவர் இன்னொரு அங்கத்தவரில தகாத நோக்கங்களுண்டெனச் சார்புபெறச் சொல்லல் யாவும் அதிகம் ஒழுங்கின நடையாகக் கவனிக்கப்படும். அப்படி நடையைச் சங்கத்தின அதிகப்பெயருக்குத் தேவையென்று தோற்றுமாகில் சங்கத்தின் பொளிப்புகள் குறிப்புப்பண்ணும் புஸ்தகத்தில் குறிப்புப்பண்ணப்படும்.

*தர்க்கத் தவணை போடல்.*

24. யாதொரு விஷயத்தைக்குறித்துத் தர்க்கம் நடக்கும் என்னேரமாவது அதை ஒரு அங்கத்தவர் தவணைப்போடக் கேட்கலாம். அதற்கு இன்னொரு அங்கத்தவர் சம்மதஞ்சொன்னால் தவணை போடவேணுமென்ற கேள்வியை அங்கத்தவர்கள் அதனட்பெயரின் தீர்மானத்துக் குடனே விடவேண்டும்.

*மோஷன்களும் திருத்திய மோஷன்களும் எழுத்தில்.*

25. ஒவ்வொருமோஷன் அல்லது திருத்திய மோஷனை இயற்ற அங்கத்தவர் அத்தை எழுத்தில் சக்கிறெத்தாரிடங் கொடுக்கவேண்டும்.

***திருத்திய மோஷன் ஒன்றின்மேல் இன்னொரு திருத்திய மோஷனில்லை.***

26. ஒரு திருத்திய மோஷனில் தர்க்கம் நடக்க இன்னொரு திருத்திய மோஷனிடப்படாது. ஆனால் தர்க்கமிட்ட மோஷன் உறுதி மோஷனாகியவுடன் திருத்திய மோஷன் ஒன்று போடலாம். அதனை அங்கத்தவர் ஒருவர் சம்மதிசொல்லத் தர்க்கிக்கவிடலாம.

***அங்கத்தவர்கள் சம்மதஞ் சம்மதவீனஞ்.***

27. யாதொரு கேள்வி சங்கத்தில் கொண்டுவந்திருக்கில் அந்நேரஞ் சமுகமாயிருக்கும் அங்கத்தவர் கடைசியாக நியமனம்பெற்றவர் துவக்கம் மற்றைய சகலரும் அதன்பேரில் தமது சம்மதம், சம்மதவீனத்தைச் சொல்லக்கடமைப் பட்டிருப்பார்கள். சக்கிறித்தார் ஒவ்வொரு சம்மதம, சம்மதமில்லாமையைக் குறிப்புப் பண்ணிக்கொள்வார். அதன்பின்பு சபாநாயகர் அம்மோஷனுக்குச் சம்மதஞ் சொன்னவர்கள் எத்தனை பெயர்கள் சம்மதஞ்சொல்லாதவர்கள் எத்தனை பெயர்கள் என்று சொல்லவேண்டும்.

***குறைந்த பக்ஷத்தின் அங்கத்தவர் சம்மதவீனத்தைப் பதிய வைக்கலாம்.***

28. குறைந்த பக்ஷத்து அங்கத்தவர் எவருக்கும் அதன் பக்ஷத்தவர்களுடைய எண்ணத்துக்கு தாம் சம்மதியில்லாதிருக்கிற ஞாயங்களை எழுதிக்கொள்ளத் தத்துவமுண்டு அந்தப்படி எழுதிய சம்மதவீனத்தை ஒரு கிழமைக்குள்ளாகச் சக்கிறித்தாருக் கனுப்பவேண்டும். சக்கிறித்தார் அதைக்கட்டி வைத்திருக்கவும் வேண்டும்.

***கொம்மித்தியில் எத்தனைபெயர்களுக்குக் குறையாமலிருக்கவேண்டும்.***

29. விசேஷமாக எத்தனை பெயர்கள் கூடவேண்டுமென்று குறித்தாலொழிய மற்றப்படி விசேஷ கொம்மித்தியானது அல்லது கீள்க்கொம்மித்தியான ஒவ்வொன்றுங் கூடும்போது மூன்று பெயர்களுக்குக் குறையாமல் கூடியிருக்கவேண்டும்.

***கொம்மித்திகளின் கூட்டங்கள்.***

30. ஒரு விசேஷ கொம்மித்தி அல்லது கீள்க்கொம்மித்தியை நியமித்திருக்கையில் அதில் சங்கத்தின் சபாநாயகர் அங்கத்தில் ஒருவராகவில்லாதிருக்கிலும் அல்லது அவர் கொம்மித்திக் கூட்டத்துக்கு வராதிருக்கிலும் கொம்மித்தி அங்கத்தவர் தங்களுக்கொரு அக்கிராசனரைத் தெரிந்துகொள்ளலாம், கொம்மித்தியின் அக்கிராசனர் கூட்டங்கட்ட ஏற்கனவான ஒரு தினத்தை நியமிக்கலாம். பிந்தி நடக்கிற கூட்டம் ஒவ்வொன்றும் அடுக்க நடக்கிற கூட்டத்தினத்திலிருந்து தவணைபோட்டு நடத்தலாம் அல்லது அப்படித் தவணைபோடாதிருக்கில் கொம்மித்தி அக்கிராசனர் நியமிக்கிற நாளில நடத்தப்படும்.

***கொம்மித்தியின் சம்பவங்கள்.***

31. ஒரு விசேஷ கொம்மித்தி அல்லது கீள்க்கொம்மித்தியின் அங்கத்தவர் இணங்கி ஒரு றிப்போட்டு எழுதிக்கொண்டால் அதைக் கூட்டத்தின் அக்கிராசனர் அல்லது அதைக் கொண்டுவர நியமிக்கப்பட்ட அங்கத்தவர் ஒருவர் நகர்சங்கத்திடங் கொடுக்கவும் அங்கு சக்கிறித்தார் அதை வாசிக்கவும் வேண்டும் அல்லது சங்கம் அந்நேரங் கற்பிக்கிறபடிக்கு அதை நடத்திக் கொள்ளலாம். காலத்துக்குக் காலம் விசேஷ கொம்மித்தி அல்லது கீள்க்கொம்மித்தி நகர்சங்கத்தின் உத்தரவைக்கொண்டு தமது எண்ணங்கள், கவனிப்புகள் அல்லது எடுத்த சாட்சி விளக்கங்களை மாத்திரம் அல்லது முழு வர்த்தமானங்களை அறிவிக்கலாம்.

***கொம்மித்தியில் சம்மதப் பிரிவினையாகில்.***

32. விசேஷ கொம்மித்தி அல்லது கீள்க்கொம்மித்தி ஒரு றிப்போட்டு எழுதும் வகைக்குச் சிலர் சம்மதியுஞ் சிலர் சம்மதமில்லாமலுமிருக்குங்காலம் கொம்மித்தியின் பொளிப்புக் குறிப்பில் அதைப்பதியவேண்டும், அத்துடன் கொண்டுவந்த மோஷன் அல்லது நிர்ணயத்தீர்மானம் இன்னது அதைக் கொண்டுவந்தவர் பெயர் கொம்மித்தியில் சமுகமாகவிருந்த அங்கத்தவர்களில் சம்மதித்த பெயர்கள் சம்மதியாத பெயர்களுங் காட்டிக் குறிப்புகள் பண்ணவேண்டும். அவ்வகைப் பொளிப்புக் குறிப்புகளுங் கொம்மித்தியின் றிப்போட்டும் நகர்சங்கத்துக்கு ஒப்புக்கொடுக்கவேண்டியது.

***சாட்சிகளைக் குறித்துக் கொம்மித்திக்குள்ள தத்துவம்.***

33. நிலையான காரியக்கூட்டம் எல்லா விசேஷ கொம்மித்தியும் கீள்க் கொம்மித்திக்கும் இந்த அதிகாரத்தில் துணைப்பிரமாணம் 9 ம் வசனத்தில ஏற்படுத்திய பிரகாரம் சாட்சிகளை அழைக்க நகர்சங்கத்துக்குள்ள அவ்வகைத் தத்துவங்களுடையதாக விருக்கும். அழைக்கும் ஒவ்வொரு சாட்சியும் அழைப்புச் சீத்தாசிக் கமைந்து நடக்கக் கடமையுண்டு.

***முறைப்பாட்டுப் புஸ்தகம்.***

34. முறைப்பாட்டுப் புஸ்தகம் என்று ஒரு புஸ்தகம் சக்கிறித்தார் வைக்கவேண்டும். அதை நகர்சங்கக்கூட்டம் ஒவ்வொன்றிலுங் கொடுக்கவேண்டும். அந்தப் புஸ்தகத்தில் முறைப்பாடு செய்கிற திறத்தவர் தாங்களாகவே அல்லது தாம் அதிகாரங் கொடுத்திருக்கும் காரியஸ்தர் செய்ய வேண்டிய முறைப்பாடெதுவையும் பதியலாம். ஞாயிற்றுக்கிழமை தவிர்த்து மற்றக்கிழமை நாட்களில் சனிக்கிழமையும் ஓய்வு நாட்களும் பிறநீங்கலாகவும் நகர்சங்கங் கூடியிருக்கும் நாட்கள் பிறநீங்கலாகவும் மற்றும் நாட்களில் காலை 11 மணியும் பின்னேரம் 4 மணிக்குமிடையிலுள்ள நேரங்களில் பதித்துக்கொள்ளலாம். நகர்சங்கத்தின் கந்தோரில் நகரத்தவர் போகக்கூடிய விடத்தில் புஸ்தகம் வைக்கவேண்டும். நகராதிபக் குடியானவன் ஒருவனும் தனது சரியான பெயரும் இருக்குமிடமும் சக்கிறித்தாரிடங் கொடுத்து அப்புஸ்தகத்திடம் போய்க்கொள்ளலாம்.

## 3 ம் அதிகாரம்.

### கணக்குகளையும் வரிகளையுங் குறித்து.

***கணக்குகளின் மாதிரி.***

35. நகராதிபத்தின் கணக்குகள் இரட்டைப்பதிவு ஒழுங்குமுறையே வைக்கப்படும். வரவு செலவுப் புஸ்தகம், தொகைக் கணக்குப் புஸ்தகம், தினவர்த்தமானக் கணக்குப் புஸ்தகம், செலவுகளுக்குக் கொடுக்குஞ் செக்குப் புஸ்தகம், வரவுகளுக்குக் கொடுக்கும் பற்றுச்சீட்டுப் புஸ்தகங்களும், வைக்கப்படும்.

***வங்கியின் பாஸ் புஸ்தகம் கொடுத்தல்.***

36. நகர்சங்கம் பொதுவாகக் கூடும் ஒவ்வொரு கூட்டப்பொழுது முதல் மாத முடிவும் வங்கியின் பாஸ் புஸ்தகம் எழுதி அதைக் கூட்டத்தார் கட்டியிருக்கும் மேசையில் விட்டுவைக்க வேண்டியது.

***138 ம் பிரிவில் கணக்குகள்.***

37. 1887 ம் ஆண்டின் நகர்சங்கக் கட்டளைச்சட்டத்தின் 138 ம் பிரிவின் கீழ்ச்சொல்லியபடி வீடுகள் கட்டிடங்கள் அல்லது தரை நிலங்களின் சொந்தக்காரர் அல்லது ஆசி பெறுகிறவர்கள் ஒப்புவிக்கவேண்டிய கணக்கு விபரம் இதன் அநுபந்தத்தில் B. அட்சரமாதிரிக் கடதாசியிலிருக்க வேண்டும். அம்மாதிரிக் கடதாசி நகர்சங்கம் இன்ன பெயருக்கென்றெழுதிக் கொடுத்துவைக்கும் அதில் விபரங்களை அந்தப் பெயர்வழிகாறன் எழுதி நகர்சங்கத்துக் கனுப்பிவைக்க வேண்டும்.

***144 ம் பிரிவில் கணக்குகள்.***

38. மேற்படி கட்டளைச்சட்டத்தின் 144 ம் பிரிவின் கீள் எழுதவேண்டிய செடூல் கணக்கு இதன் அநுபந்தத்தில் C. அட்சர மாதிரியிலிருக்க வேண்டியது.

***செடூல் எழுதிக் கொடுத்தபின் காத்தை முதலியது வாங்கியிருப்பவர்கள் விசேஷ அறிவித்தல் கொடுக்கவேண்டியது.***

39. மேற்சொல்லிய துணைப்பிரமாணத்தில் சொல்லிய செடூல் கணக்கெழுதி அனுப்பிய பின்பு யாதொரு ஆள் ஏதுங் காத்தை, வண்டில், ஜின்றிக்ஷா, ஒற்றைமாட்டுக் காத்தை, குதிரை, போனிக்குதிரை, கோவேறுகழுதை, எருத்துமாடு அல்லது கழுதை வாங்கி விட்டிருந்து அதுகள் முன் அனுப்பிய செடூலில் சேராமலிருந்தால அவ்வித காத்தை யிருகம் வாங்கிய ஒரு மாதத்துள் அதுகள் ஒவ்வொன்றையுங் குறித்து உண்மையானவுஞ் சரியானவும் விபரங்கள் காட்டி எழுதிய அறிவித்தல சக்கிறித்தாருக் கனுப்ப அவர் கடமையுள்ளவராயிருப்பார்.

**நொத்தாரிஸ்மார் கொடுக்கவேண்டிய விபரங்கள்.**

40. காலத்துக்குக் காலஞ் சபாநாயகர் கட்டளையிடும்போது சக்கிடுத்தார் இதன் அனுபந்தத்தில் D. அட்சர மாதிரிக் கடதாசிக் கொப்பி ஒன்று நகர்சங்க எல்லைக்குள்ளிருக்கும் நொத்தாரிசு ஒவ்வொருவருக்குங் கொடுத்தனுப்பி வைக்கவேண்டும். அப்படி அனுப்பிவைப்பது அப்போது நடக்கும் வருஷத்தில் அல்லது அதின் முன் வருஷங்களில் சங்கம் ஸ்தாபித்த பிறகு எத்தனை கிளார்க்குமார் உடன்படிக்கை எழுதிக்கொடுத்து அவர்களிடம் படிக்கிறார்களென்றும் உடன்படிக்கையின் திகதி என்னவென்றும் எத்தனை காலங் கிளார்க்குமாராகப் பணிவிடை பார்க்கிறார்களென்றும் அறியும் பொருட்டாகத்தான். நொத்தாரிஸ் ஒவ்வொருவரும் அம்மாதிரிக் கடதாசிக் கொப்பி கிடைத்த 15 நாட்களுக்குள் அதில் விபரங்கள் சரியாக எழுதிச் சக்கிடுத்தாரிடம் அனுப்பிவைக்க வேண்டும்.

**இரட்டை மாட்டுக் கரத்தைகளும் ஒற்றைமாட்டுக் கரத்தைகளும், லோகத்தினால் தகடுகளடித்திருக்கவேணும்.**

41. நகர்சங்க எல்லைக்குள் விட்டிருக்கிற அல்லது பாவிக்கிற இரட்டை மாட்டுக் கரத்தை அல்லது ஒற்றமாட்டுக் கரத்தை ஒவ்வொன்றும் அதற்கு ஞாயப்பிரமாண வழியாகத் தேவையான மறு தகடுகளையல்லாமல் ஒவ்வொரு வருஷமும் ஆடிமாதம் 1 ந் திகதியின் பிற்பாடு நகர்சங்கம் கொடுக்கும் லோகத்தினாலுண்டுபண்ணிய தகடும் தைத்துவைத்திருக்கவேணும். அவ்விதத் தகட்டில் K. எழுத்து அட்சரமும் அந்த வருஷ இலக்கமும் நகர்சங்கக் கந்தோரில் அந்த இரட்டைமாடு அல்லது ஒற்றை மாட்டுக்கரத்தை பதிந்திருக்கும் இலக்கமும் உள்ளதாகவிருக்கும். கூலிக்கு விடும்படி உத்தரவு பெற்றிருக்கும் இரட்டைமாட்டுக் கரத்தைக்கு அக்கரத்தையை இழுக்கிற எருத்து மாடுகளின் பேரால் 1887 ம் ஆண்டின் 7 ம் இலக்கக் கட்டளைச்சட்டத்தின் 128 ம் பிரிவின் கீழ்ப் போமதியான வரியைக் கொடுத்துவிட்டதற்கு அத்தாட்சியாகவிருக்கும். கடைசியாகச் சொன்ன தகடு கொடுக்குமுன் அந்த இரட்டை அல்லது ஒற்றை மாட்டுக்கரத்தையின் தெரியக்கூடிய ஒரு இடத்தில் வருஷத்தையும் அதன் பதிவு இலக்கத்தையும் பித்தாளிப்புச் செய்யும்படி சபாநாயகர் கேட்கலாம்.

**தகடில்லாத கரத்தை மறியல் படுத்தலாம்.**

42. மேல் வசனத்தில் தேவையென்று சொல்லிய தகடில்லாமல் இரட்டை அல்லது ஒற்றை மாட்டுக்கரத்தையை நகர்சங்கத்தின் எல்லைக்குள் யாதொரு ஆள் விட்டிருக்க பாவிக்க அல்லது ஓட்டப்படாது. தகடு தைத்திராமல் விட்டிருக்கிற, பாவிக்கிற அல்லது ஓட்டுகிற யாதொரு இரட்டை அல்லது ஒற்றை மாட்டுக்கரத்தையைத் தேவையான வரி இறுத்துத் தகடு தைக்கிற வரையும் நகர்சங்கத்து இன்ஸ்பெக்டர் அல்லது பொலிஸ் உத்தியோகஸ்தன் மறியற்படுத்திக் கொள்ளலாம்.

## 4 ம் அதிகாரம்.

**வீடுடையவர்கள் ரோட்டுகளின் சாக்கடைகளின் மேல்.**

43. எந்த வீதியினு அடுக்கவிருக்கும் யாதொரு வீடு அல்லது நிலங்களின் சொந்தக்காறன் அல்லது ஆட்சிக்காறன் அந்த வீதியின் அருகாக ஒரு சாக்கடை செய்திருக்கில் அல்லது வெட்டியிருக்கில் வீதியிலிருந்து வீடு அல்லது நிலங்களுக்குப் போகவரத் தேவையான ஒரு பாலம் கட்ட அல்லது வில்வளைவு அச்சாக்கடையின்மேல் கட்டல்வேண்டும். அப்பாலத் தட்டு அல்லது வில்வளைவு யாதோர் காரியத்தின் பேராலும் சாக்கடை நீளத்தில் நாலு அடிக்குக் குறையாது மூடியிருக்கவும் நகர்சங்க உத்தரவின்றிக் கட்டினால் ஆறு அடிக்கு அதிகப்படாமல் மூடியிருக்கவும் சபாநாயகர் விதிக்குஞ் சங்கேதங்களுக்குக் கீழ்ப்படக் கட்டல்வேண்டும். அவ்வகைப் பாலத் தட்டு அல்லது வில்வளைவு அச்சாக்கடையில் தண்ணீரோட இடைஞ்சலிருக்காதபடிக்குக் கட்டியும் அதுகளுக்குச் செங்கல் அல்லது கருங்கல்லுகளினால் கட்டி பாவி வைக்கவேண்டும். மேற்படி சொந்தக்காறன் அல்லது ஆட்சி பண்ணுபவன் அந்தப் பாலத் தட்டு வில்வளைவை நகர்சங்கத்தின் திருத்தியளவுக்கு நல்ல நிலைபரமாக வைத்துக்கொள்ள வேண்டும். மேலும் சாக்கடை வீதி அடுக்கவிருக்கும் வீடு அல்லது நிலங்களுக்கு மேற்சொல்லிய பாலம் தட்டு அல்லது வில்வளைவு கட்டாமல் ஆட்கள் போக்குவரவு செய்கிறார்கள், அல்லது மேற்சொல்லியபடி கட்டியிராத வேறு பாலம் தட்டு அல்லது வில்வளைவால் போக்குவரவு செய்கிறார்கள் என்பதாக நகர்சங்கம் அறிய வருகில் அதை உடனே கட்டும்படி அல்லது மாற்றும்படியுஞ் சாக்கடையை மேற்சொல்லியதுபோல் வைக்கவும் அதன் சொந்தக்காறன் அல்லது ஆட்சி பண்ணுகிறவனுக்கு நகர்சங்கம் அறிவித்தல் கொடுப்பது அல்லது அப்பாலம், தட்டு, அல்லது வில்வளைவை நல்ல நிலைபரமாக அவன் வைத்திருக்கத் தவறினால் அதை நல்ல நிலைபரமாக ஆக்கிவைக்கும்படி அறிவித்தல் கொடுப்பது முறைமையாகவிருக்கும். சொல்லப்பட்ட அறிவித்தல் கொடுத்த 14 நாட்களுக்குள் எந்த அறிவித்தலிலென்னும் கேட்டிருப்பதுகளைச் செய்துமுடிக்க அவன் தவறினால் சபா நாயகர் அந்த வேலையைச் செய்விக்கலாம். அதின் செலவுகளை அவ்வித சொந்தக்காறன் அல்லது ஆட்சி பண்ணுகிறவன் கொடுக்க வேண்டும்.

**கொல்லை, தெவுச்சி, முடுக்குகள், காலைகளுக்கு வாய்க்கால் கட்டல்.**

44. தேவையென்று சபாநாயகர் காண்பாராகில் குடியிருக்கும் வீட்டுக்கு அடுக்கவிருக்கும் யாதொரு கொல்லை அல்லது நிலத்தின் சொந்தக்காறன் முடுக்குவழி அல்லது தெவுச்சியைச் சேர்ந்த வீடுகளின் சொந்தக்காறர்கள் அல்லது யாதொரு கொட்டில்கள் காலைகள் அல்லது ஆட்டுப்பட்டிகளின் சொந்தக்காறர்களைச் சபாநாயகர் கற்பிக்கும் பிரகாரம் சொல்லப்பட்ட கொல்லை நிலம் அல்லது தெவுச்சி, கொட்டில் காலை அல்லது ஆட்டுப்பட்டிக்குத் தனிவிசை பதித்து வைக்கும்படியும் அதுகளின் ஊத்தைகள் கிட்டாகவிருக்கும் சாக்கடைக்குக் கழுவிப்போகும்படியாகப் பொருந்திய வாய்க்கால் அல்லது குளாய்கள் வைக்கும்படியும் எழுத்து மூலமாக அறிவித்தல் விட்டுக் கேட்கலாம். அப்படிக்கொத்த வாய்க்கால்கள் அல்லது குளாய்கள் சபாநாயகர் நியமிக்கிறதான தளபாடங்களைக் கொண்டும் அத்தனை பருப்பமாகவும், மட்டமும் பதிவு சாய்வையு முள்ளதாக நகர்சங்கத்தின் சாக்கடைச் சந்திவரையுஞ் செய்யவேண்டும். ஆகிலுஞ் சொந்தக்காறன் தரும்படி கேட்கில் அவன் வைக்கவேண்டிய வாய்க்கால் குளாய்களுக்குத் தேவையான தளபாடங்களைக் கொள்விலைப்படிக்கு நகர்சங்கம் அவருக்குக் கொடுக்கும் குறித்த காலத்துக்குள் அறிவித்தலில் கேட்டிருக்கிறதுகளுக்கிசையச் சொல்லிய சொந்தக்காறன் தவறுங்காலம் சபாநாயகர் அவரால் தத்துவங் கொடுபட்ட எந்த உத்தியோகஸ்தன் வேலைகாறர்களும் அந்த இடங்களில் உட்சென்று வேண்டிய வேலையைச் செய்விக்கலாம். அதற்கான செலவுகள் சொந்தக்காறன் இறுக்கவேண்டும்.

**இறைக்குடியானவன் மதவுகள்.**

45 இறைக்குடியானவன் மதவு அல்லது வீட்டுவாய்க்கால் அவன் வீட்டுக்குக் கீழிருக்கினுமல்லது வீட்டுக்கு வெளியாவிருக்கினும் அந்த மதவு வாய்க்காலால் காற்றுச் சரியாகப் போகவரத்தக்க தேவையானதென்று சபாநாயகர் தீர்மானம்பண்ணுகிற குளாய்களைப் பதிக்கும்படி அவர் வீட்டுக்காறனுக்கு எழுத்தில் அறிவித்தல் கொடுப்பது முறையாகவிருக்கும். காற்றுப் போக்குவரவுசெய்யப் பதிக்கின்ற குளாய்கள் சபாநாயகர் கற்பிக்கிறபடிக்கு அளவு பருப்பம் அவ்வகைத் தளபாடங்களாலும் அத்தனை உயரத்துக்குங் கொண்டுபோயிருக்கச்செய்ய வேண்டியது. சொந்தக்காறன் அறிவித்தலில் கேட்கப்பட்ட பிரகாரங் குறித்த காலத்துக்குள் செய்யத்தவறினால், சபாநாயகர் அவர் தத்துவங் கொடுத்திருக்கும் உத்தியோகஸ்தர் வேலைகாறர்கள் அந்த இடங்களில் உட்சென்று தேவையான வேலையைச் செய்துவைக்க வேண்டும். அதன் செலவுகளை அந்தச் சொந்தக்காறன் இறுக்கவேண்டியது. இந்தத் துணைப்பிரமாணம் அல்லது இந்த அதிகாரத்தில் இதற்கு முந்திய துணைப்பிரமாணங்களாலும் இறுக்குமதியான செலவுகளின் தொகையை 1887 ம் ஆண்டின் நகரசங்கங்களின் கட்டளைச்சட்டத்தின் 281, 282 ம் பிரிவுகளால் விதித்த பிரகாரம் நிதார்த்தம்பண்ணித் தீர்மானமாகும் அந்தச் செலவுகள் சொல்லப்பட்ட கட்டளைச்சட்டத்தால் இறுக்குமதியென்று கற்பித்த செலவுகள் அறவிடுவதுபோல் அறவிடப்படும்.

விருக்கும். அப்படியான வேலிகள், அடைப்புகள், குளிகள், அல்லது அணைகளை அவைகளுக்கு அடுக்கவிருக்கும் காணிகளின் சொந்தக்காறர்கள் அல்லது ஆட்சிக்காறர்கள் நல்ல உறுதியான சீராகவும் ஒழுங்காகவும் வைத்துக்கொள்ளும்படி இத்தால கேட்டுக்கொள்ளப்படுகின்றது.

*குளிகள் முதலியவைகளை உண்டுபண்ண திறந்துவைக்க குழாய் முதலியது வைக்க.*

54. வேலைகளின் அதிகார உத்தியோகஸ்தரும் சபாநாயகர் எழுத்தில் தத்துவங் கொடுத்திருக்கும் ஒவ்வொரு ஆளும் சகல குளிகள், நீர்வாய்க்கால், சாக்கடைகள், பீலிகளையும் உண்டுபண்ண அடைக்க அப்பரவாக்கத் திறந்துவைக்கவும் யாதொரு வீதி அல்லது ரோட்டு அல்லது செய்யவேண்டியிருக்கிற வீதி அல்லது ரோட்டுக்கு அருகான அல்லது சமீபமான நிலத்தில் அல்லது அதற்குள்ளாகப்போகின்ற மேற்சொல்லிய வீதி அல்லது ரோட்டைப் பாதுகாக்க, பலுத்தரப்படுத்த, சீர்பண்ண, பழுதுபார்க்க அல்லது கட்டும்படியாகத் தேவையென்று அவருக்குத் தோன்றுகிற துரும்புக்குழல், குழாய், தகம் அல்லது பாலங்களை உண்டுபண்ணவும் வைக்கவுந் தத்துவமுடையவர்களாயிருப்பார்கள்.

*ரோட்டில் கருங்கல் முதலானது போட்டுவைத்தல்.*

55. யாதொரு வீதி அல்லது ரோட்டைப் பழுதுபார்க்கையிலும் பழுதுபார்க்குமுன் அப்பழுதுபார்க்கத் துவக்கவாக்கவும் பழுதுபார்த்தபின் புதிதாகப் பழுதுபார்த்த வீதி அல்லது தெருவுக்கு நட்டமுண்டுபடாது தடைசெய்வதற்குமாக வேலைகளின் அதிகார உத்தியோகஸ்தன் அல்லது முன் சொல்லியபடி தத்துவம்பெற்ற ஒவ்வொரு ஆளும் மேற்படி வீதி அல்லது ரோட்டின்மேல் யாதொரு கருங்கலும் அல்லது மணற்குவியல் அல்லது மரக்குத்தியை விட்டுவைக்கத் தத்துவமுண்டு, ஆனால் தெருவின்மேல போக்குவரத்துச்செய்கிற சனங்களுக்கு அபாயம் அல்லது தீங்கு நேரிடாதபடிக்கு நேரானவும் நியாயமானவும் முன் எச்சரிப்பு அவர் செய்துவைக்கவேண்டும்.

*சேதங்களுக்கு பணமிறுக்குதல்.*

56. இந்த அதிகாரத்தின் ஆணைப்பிரமாணங்களால் வேலைகளின் அதிகார உத்தியோகஸ்தன் அல்லது சபாநாயகர் அதிகாரங் கையளித்த மற்றையோர்களுக்குக் கொடுத்திருக்கும் யாதொரு தத்துவங்களைச் செலுத்துகையால் எதுவுஞ் சேதமாவது நஷ்டமடைந்த ஒவ்வொரு ஆளும் அதற்குக் கைமாறாகப் பணம் வாங்கிக்கொள்ள உரித்துண்டு, அவ்வகைப்பணங் கேட்டு நிற்பவர் சபாநாயகரிடம் கேள்விக்கடுதாசி கொடுக்கவேண்டும். கேள்விக்கடுதாசு கொடுப்பது பணங்கேட்டு உரித்துச்சொல்லுகிற சேதமுண்டாகின் அல்லது உண்டுபட்டதென்று சொல்லுகிற செய்கை ஏதுவை அல்லது காரியம் நடந்து மூன்று மாதங்களுக்குள் கொடுக்கவேணும். முன்சொல்லிய காலத்துக்குள் அக்கேள்விக்கடுதாசி கொடுக்க அவர் தவறினால், நடந்ததென்று சொல்லப்பட்ட சேதத்துக்குப் பதில் பணம் வாங்க அவர் உரித்துக்கு அடங்கமாட்டாது அதை அறவிடவும் அவரை விலக்கியிருக்குது. பதிற்பணத்தொகைக்கு அவர் சம்மதித்துக்கொள்ளாதபோதில் சபாநாயகர் ஒரு நடுவனையும் பதிற்பணம் உரித்துச்சொல்லுகிறவர் ஒரு நடுவனையும் வைத்து நடுவிலகத் தீர்த்துக்கொள்ளலாம். இரண்டு நடுவர்களும் ஒரு தொகைக்கு இணங்காதிருக்கில், மேல்மத்தியஸ்தன் ஒருவனை வைத்து இருபக்கத்தாருந் தாங்கள் சம்மதித்துப் போகவேண்டும் அவர்களிடம் ஒப்புக்கொடுத்ததற்கு இசைய அவர்களின் தீர்மானமே முடிவானதாயிருக்கும்.

---

## 6 ம் அதிகாரம்.

### சந்தைகள்.

*பிரசித்தசந்தைகள்.*

57. போகம்பறையில் ஸ்தாபிக்கப்பட்ட சந்தையை ஒரு பிரசித்த சந்தையாக இதனால் கூறப்பட்டிருக்கின்றது. பிரசித்த சந்தைகளைக் குறித்து இந்த அதிகாரத்தில் சொல்லப்படுகிற ஆணைப்பிரமாணங்கள் மேல் சொல்லப்பட்ட சந்தைக்கும் சபாநாயகர் நிலையான காரியக்கூட்டத்தவரின், சம்மதியுள்பட ஒரு பிரசித்த சந்தையென்று இதன் பிற்பாடு கூறுகிற மற்ற எந்த இடத்துக்கும் தகைபெற்று வரவேண்டும்.

*பணிவிடைகள் நடக்கும் நேரம்.*

ஒவ்வொரு பிரசித்த சந்தையும் விற்பனவுசெய்ய ஒவ்வொரு நாளும் காலையில் 5.30 மணியில் திறந்து இரவு 9.30 இல் பூட்டிவைக்கவேண்டும்.

*சந்தையில் ஸ்தலங்களைக் குத்தகை கொடுத்தல்.*

58. 1887 ம் ஆண்டின் நகரசங்கக் கட்டளைச்சட்டத்தின் 227 ம் பிரிவின் கீழ்யாதொரு பிரசித்த சந்தையில் காலத்துக்குக்காலம் இருப்பனவு பண்ணவேண்டியதான வாடகைகள், கடமைகள், சலார்கள், எல்லாவற்றையு மல்லது எதுவையும் யாதொரு தவணைக்குக் குத்தகையாகக் கொடுக்க அல்லது பராதீனப் படுத்தக்கொடுக்க நகரசங்கத்துக்கு நியாயமாகவிருக்கும்.

*வாடகைகளைப்பற்றிய பிசகுகள் எப்படித் தீர்மானித்தல்.*

59. அப்படிக்கொடுத்த ஏதொரு வாடகைகள் கடமைகள் அல்லது சலார்களைக் குறித்து எதுவும் பிசகுண்டாகுமாகில் நிலையான காரியக் கட்டடத்தலைவர் தங்களுக்குச் சரியென்று தோற்றுகிறபடி அதைத் தீர்மானஞ்செய்யவும் அதின்பேரில் கட்டளைகொடுக்கவுந் தகுமையாகவிருக்கும்.

*குத்தகைகளின் இடாப்பு.*

60. அவ்வித சந்தையில் காலத்துக்குக்காலம் இறக்குமதியாகவுள்ள பற்பல வாடகைகள், கடமைகள், சலார்களின் ஒரு இடாப்பை நகரசங்கம் அல்லது அவர்களுடைய குத்தகைகாறர்கள் ஒவ்வொரு பிரசித்த சந்தையிலும் காலத்துக்குக்காலம் தோற்றப்படத்தக்கதாக ஒட்டிவைக்கச்செய்யவேண்டும்.

*வாடகை யறவிடுதல்.*

60a. பிரசித்த மார்க்கெற்றைப் பாவிப்பதற்காகக் கொடுக்கவேண்டிய ஆயம், வாடகை, சலார் முதலியவை அந்தந்தக் காலத்தில் கேட்கும்போது நகரசங்கத்துக்குக் கொடுத்தல் வேண்டும், அல்லது நகரசங்கத்தாரிடம் குத்தகைவாங்கியிருப்பவனுக்காவது நகரசங்கத்தாரது அதிகாரம்பெற்ற வேறு யாருக்காவது, அல்லது அப்படி அதிகாரம்பெற்றவனிடத்தில் குத்தகைவாங்கியிருப்பவனுக்காவது மேற்படி வாடகை முதலியவற்றைக் கொடுத்தல் வேண்டும்.

*விதிக்கப்பட்ட வாடகைக்கு மேற்பட வாங்குவது குற்றம்.*

60b. நகரசங்கமானது அறவிடலாமென்று விதித்த வாடகை, ஆயம், சலார் முதலியவைகளை அப்படி விதிக்கப்பட்ட தொகையிலும் மேற்பட்ட தொகையைத் தரும்படி கேட்கிற அல்லது வாங்குகிற ஒவ்வொருவருங் குற்றவாளிகளாவார்.

*சாமானை விற்று அறவிடல்.*

60c. மேற்படி ஆயம், வாடகை, சலார் முதலியவை கொடுக்கவேண்டிய ஒருவனுக்கு கேட்கும்பொழுது அவ்வாடகை முதலியவற்றை இறுத்துப்போடாதிருந்தால், அப்படிக் கொடாதவன் மார்க்கெற்றில் வைத்திருக்கும் சாமான்களையாவது பிடித்து விற்று அறவிடுதற்கு நகரசங்கத்துக்காவது, அல்லது அதனிடத்திலிருந்து குத்தகை வாங்கியவனுக்காவது, அல்லது அதன் அதிகாரம்பெற்ற வேறு எவனுக்காவது, அல்லது அப்படி அதிகாரம்பெற்றவனிடத்தில் குத்தகைவாங்கிய எவருக்காவது அதிகாரமுண்டு.

*அதிகாரம்பெற்ற காரியகாரரைத் தடுத்தல்.*

60d. பிரசித்த மார்க்கெற்றுகளை மேற்பார்வை பார்க்கவாவது, ஆயம், வாடகை, சலார் முதலியவை அறவிடவாவது, அம்மார்க்கெற்றுகளை ஒழுங்காகச் சுத்தமாய் வைத்திருக்கும்படிச் செய்யவாவது நகரசங்கத்தவரிடமதிகாரம்பெற்ற எவனையாவது அல்லது ஆணைக்கட்டளைச் சட்டப்படிக்கு ஆயம், வாடகை, சலார் முதலியவை அறவிடுதற்கு நகரசங்கத்தால் அல்லது அதனிடத்திலிருந்து குத்தகை வாங்கியவனிடத்தால உத்தரவுபெற்ற எவனையாவது தடுத்தல், எதிர்த்தல், பின்போடச்செய்தல், தொந்தரவுசெய்தல் முதலியவை யாதாமொருவர் செய்தல் குற்றமாகும்.

பிரசித்த சந்தையைவிட வேறிடங்களில் இறைச்சி முதலியது விற்பனவு செய்வதைத் தடைபண்ணினது.

61. நகரசங்கம் ஏற்படுத்திய பிரசித்த சந்தையிலல்லாது நகராதிபத்தன் ஏதும் இடம் அல்லது வீதியில் யாதொருவன் மாட்டிறைச்சி ஆட்டிறைச்சி அல்லது வேறு இறைச்சி அல்லது மீனை விற்க அல்லது விற்கவைத்திருக்க அல்லது விற்கக் கொண்டுதிரியப்படாது. நகரசங்கத்திடம் விசேஷ உத்தரவின்றி அல்லது உத்தரவின் தாற்பரியத்துக்கு எதிராக அப்படிச் செய்யப்படாது

ஒழுங்கீனமாக விற்க வைத்திருக்கிற இறைச்சி முதலியதைப் பரிசோதனை உத்தியோகஸ்தர் தடைப்படுத்தலாம்.

62. முன் சொல்லிய துணைப்பிரமாணத்தின் வரைவுபாடுகளுக்கு எதிராக விற்கவைத்திருக்கிற அல்லது விற்க கொண்டுதிரிகிற யாதொரு மாட்டிறைச்சி ஆட்டிறைச்சி அல்லது மறு இறைச்சி அல்லது மீனை நகரசங்கத்தின் பரிசோதனை உத்தியோகஸ்தர் அல்லது பொலிஸ் உத்தியோகஸ்தர் எவரும் தடைப்படுத்தவும் அதை நகரசங்கத்தின் கந்தோருக்குக் கொண்டுபோகவும் முறைமையாகவிருக்கும். அங்கே சபாநாயகர் அல்லது மஜிஸ்திரேத்துக் கட்டளையிடுகிறபடி அதை நடத்தவேணும்.

விசேஷ உத்தரவுக்குச் சலார்.

63. இந்த அதிகாரத்தில் துணைப்பிரமாணத்தில் சொல்லிய விசேஷ உத்தரவு ஒவ்வொன்றுக்கும் ஒரு மாதத்துக்கு ஐம்பது சதத்துக்கு அதிகப்படாத ஒரு சலாரை அறவிட நகரசங்கத்துக்கு முறைமையாகவிருக்கும்.

இறைச்சியும் மீனும் அதற்கதற்கென்று பிறம்பாக விட்டிருக்கிற ஸ்தாலையிலவிற்கவேண்டும்.

64. பிரசித்த சந்தையில் இறைச்சிக்கென்று பிறம்பாக விட்டுவைத்திருக்கிற ஸ்தாலையில் இறைச்சியைவிட மறு சாமானையும் மீனுக்கென்று பிறம்பாக விட்டுவைத்திருக்கிற ஸ்தாலையில் மீனைவிட வேறு சாமானையும் யாதொருவரும் வைத்திருக்க அல்லது விற்கப்படாது.

பிரசித்த சந்தை உத்தரவில்லாமல் ஆட்சிபெறக் கூடாது.

65. யாதொரு பிரசித்த சந்தையில் ஒரு ஸ்தாலையை உத்தரவில்லாமல் ஒருவனுங் கைக்கொள்ள பாவிக்க அல்லது ஆட்சியாகவிருக்கப்படாது. அல்லது உத்தரவின் பொருத்தனைகளுக்கு எதிர்மாறாகவுஞ் செய்யப்படாது. உத்தரவு இதன் அநுபந்தத்தில் E அட்சரமாதிரியில் சந்தைத்தார் கையெழுத்துப்போடவேண்டியது.

66. ஒவ்வொரு பிரசித்த சந்தையிலும் மரக்கறி காய்கனியும் மறு சாமான்களும் விற்பனவு செய்ய ஆறு அடி நீளம், நாலு அடி அகலம் இடங்கள் அல்லது சதுரங்க அடி இருபத்திநாலுக்குக் குறையாது கொண்ட இடங்கள் அடையாளப்படுத்தி இலக்கம்போட்டுப் பிறம்புடன் வைத்திருக்கும் நகரசங்கம் காலத்துக்குக்காலம் ஒவ்வொரு இடத்துக்குக் கொடுக்கவேணுமென்று நிர்ணயிக்கிற சலார்களை இறுத்து மரக்கறி காய்கனி மறு சாமான்களை விற்பனவுசெய்யலாம். சந்தைக்குள் அல்லது வெளிப்பக்கத்தில் பின்னால் சொல்லிய றோட்டுகளுக்குள் அடங்கிய ...... அவ்வகை இடத்தில் அல்லது மறு இடத்தில் விற்பனவுசெய்யும்படியாய் யல்லது மறுவிலைக்காக யாதொரு சாமான்களையு பொருவனுஞ் சேமித்துவைக்கப்படாது. அப்படியான இடம் அடையாளப்படுத்தி அல்லது இலக்கம்போட்டிருந்தாலுஞ் செய்யப்படாது, அவ்வகை இடத்துக்கு நகரசங்கம் விதித்த விதப்படி சலாரை இறுத்துச் சீட்டுத்துண்டு பெற்றுக்கொண்டு செய்யலாம்.

வடக்கு.—வாட் வீதியின் மேற்கு அருதம மறியல்வீட்டு றோட்டுச் சந்தியிலிருந்து.
கிழக்கு.—வாட் வீதியிலிருந்து பள்ளிவாசல் றோட்டுமட்டும் மறியல்வீட்டு றோட்டு.
தெற்கு.—மறியல்வீட்டு றோட்டிலிருந்து கெந்தான் றோட்டுக்குப் போகிற றோட்டில் குறுக்குத்தெரு மறியல்வீட்டுச் சந்திக்கிறமட்டும் பள்ளிவாசல தெருவின் ஒரு பங்கு.
மேற்கு.—கெந்தான் றோட்டிலிருந்து வாட் வீதிமட்டும் சந்தைவீதி.

சொல்லிய சலாரை இறுக்கிற ஒவ்வொரு ஆளுக்கும் நகரசங்கம் வேலை கொடுத்திருக்கிற சந்தையை நடப்பிக்கிறவர் கையெழுத்துப்போட்டுத் துண்டு கொடுக்கலாம்.

இடத்தை ஒருவனும் அடைக்கப்படாது.

67. யாதொரு அவ்வகை யிடத்தை அல்லது அதின் யாதொரு பகுதியை ஒருவனும் அடைக்கப்படாது, அல்லது அதில் ஒரு மறைவு அல்லது யாதொரு நிலையான ஊன்றுகம்புகள் நாட்டப்படாது, அல்லது ஒரு அடி உயரத்துக்கதனமான பெட்டி கட்டுதல் வைத்திருக்கப்படாது. சந்தைமுடிய நியமித்த மணிநேரத்தின் பிறகு அந்த இடத்தில் யாதொரு சாமானை ஒருவனும் விடப்படாது.

உத்தரவு மறுபேருக்கு மாறிக்கொடுக்கக் கூடாது.

68. ஒரு பிரசித்த சந்தையில் ஸ்தாலை அல்லது இடத்துக்கு ஒருவனுக்குக் கொடுத்த உத்தரவை அல்லது துண்டை அவன் இன்னொருவனுக்குக் கொடுக்கப்படாது. அல்லது அவ்வித ஸ்தாலையை அல்லது இடத்தை அவன் இன்னொருவருக்குக் கீழ்க்குடிமானுஞ் செய்யவும்படாது. நகரசங்கத்தின் உத்தரவில்லாமல் உத்தரவு அல்லது சீட்டுப்பெற்றவனைவிட வேறொருவன் யாதொரு ஸ்தாலை அல்லது இடத்தைப் பாவினைசெய்யக் கைக்கொண்டிருக்க அல்லது ஆட்சிபண்ணப்படாது.

69. ஒரு பிரசித்த சந்தையில் யாதொரு ஸ்தாலையை அல்லது இடத்தை அல்லது ஸ்தாலையின் ஒரு பகுதி அல்லது இடத்தின் ஒரு பகுதியை உத்தரவு அல்லது சீட்டுப்பெற்ற ஆளல்லாமல் மற்றொரு ஆள் பாவிக்க அல்லது ஆட்சிபெறப்படாது. உத்தரவுகாரனுக்கு அல்லது சீட்டுடையவனுக்குப் பதிலாக விற்பனவு செய்ய உத்தரவு அல்லது சீட்டுப்பெற்றுக்கொண்டு செய்யலாம்.

உத்தரவை உடையவனும் சீட்டை உடையவனும் பதிவுபட்ட ஏஜண்டுகளும்மே கொட்டில்களில் சாமான்களை விற்கலாம்.

70. பிரசித்தமான சந்தையில் கொட்டில்போட் அல்லது ஒரு வெளிநிலத்தை வைத்திருக்க உத்தரவு அல்லது சீட்டைவைத்திருக்கிற ஒவ்வொருவனும் (முன்னேற்படுத்திய துணைச்சட்டத்தினால் அதிகாரம்பெற்றவனேயன்றி) இன்னுமொருத்தரை ஏதொரு சாட்டோடு அப்படிப்பட்ட கொட்டிலை வெளிநிலத்தை அல்லது அதின் வேறொரு பகுதியை பாவிக்க, ஆட்சிபண்ண ஆகுதல் விடக்கூடாது, அல்லது எத்தன்மையுள்ள சாமான்களை சரக்குகளை சங்கத்தாரினது உத்தரவின்றி விற்கவாகுதல் செலவிடவாகுதல் விடப்படாது.

உத்தரவும் உத்தரவுச் சீட்டுகளும் திருப்பிக் கொடுபடவேண்டும்.

71. இந்த அதிகாரத்தின் 65 ம் 66 ம் துணைச்சட்டத்தால் கொடுக்கப்பட்ட எல்லா உத்தரவுகளையும் சீட்டுகளையும் கொட்டிலை அல்லது அந்த இடத்தை விட்டுப் பிறப்படும்பொழுது சந்தைக் காவற்காரனுக்கு திருப்பிக் கொடுத்துப்போடவேண்டும்.

குறிக்கப்பட்ட எல்லைக்கப்பால் ஆட்சிபண்ணல் தடைபண்ணப்படுகிறது.

72. பிரசித்த சந்தையிலுள்ள கொட்டிலுக்கு அல்லது இடத்துக்கு உத்தரவு அல்லது உத்தரவுச்சீட்டுப் பெற்றிருக்கும் ஒவ்வொருவனும் அதைப் பாவிக்கவாகுதல் அதிலிருக்கவாகுதல் கூடாது. அப்படிப்பட்ட உத்தரவை அல்லது சீட்டை உடைய ஆளின் ஒரு ஊழியக்காரனும் அதைப் பாவிக்கவும் அதிலிருக்கவும் கூடாது. கொட்டில் அல்லது இடம் வாடகையாகக் கொடுக்கப்பட்டிருக்குமேயாகில் அதையும் பாவிக்கக் கூடாது.

வக்குகள்.

73. பிரசித்த சந்தையிலுள்ள கொட்டிலுக்கு உத்தரவு வைத்திருக்கும் ஒவ்வொருவனும் சபாநாயகர் ஒப்புக்கொள்ளத்தக்கதாயொரு ஏனத்தை சந்தைக்குக் கிட்டதாக வைத்துக்கொள்ளவேணும், அதில் எல்லாக் குப்பை கழிகடையும் புதைக்கப்படவேண்டும்.

குப்பை கூளம் கழிவதைப்பற்றி.

74. ஒருவனும் குப்பை, கூளம், எலும்பு, மிருகங்களின் தோல் அல்லது அவைகளைப்போலொத்தவைகளை இவைகளுக்கென் றேற்படுத்தப்பட்ட ஏனத்தில் போடுவதன்றி பிரசித்த சந்தையில் அல்லது அதற்குச்சேர்ந்த நிலங்களில் போடப்படாது.

*கொட்டில் நாள் வீதம் கூட்டப்பட வேண்டும்.*

75. பிரசித்த சந்தையிலிருக்கும் கொட்டிலுக்கு லைசன்ஸ் வைத்திருக்கும் ஒவ்வொருவரும் தனது கொட்டிலை ஒவ்வொரு நாளும் கூட்டித் துப்பரவாய் வைத்திருக்க வேண்டும். அதுவுமல்லாமல் கொட்டிலுக்கு எதிராயிருக்கும் குடிபிராத வெளிநிலமும் துப்பரவாயிருக்கவேண்டும்.

*ஆடுமாடு அடிக்கிறவர்கள் இறைச்சியில் எண்ணெய் பூசப்படாது.*

76. இங்கே பின்னால் சொல்லப்படுகிறவைகளைத்தவிர யாதாமொரு செத்த மிருகத்தின் உடலையாகுதல் அல்லது அந்த மிருகத்தின் எந்தப் பகுதியையாகுதல் நகரசங்கத்தாரா லேற்படுத்தப்பட்ட இடத்தில் கொல்லப்படாவிட்டால் அதைப் பிரசித்தமான அல்லது வேறவர்களுடைய சந்தையில் விற்கப்படாது. இந்த துணைச்சட்டத்தின் ஏற்பாடு இந்தத் தீவுக்குள் கொண்டுவரப்பட்ட மீன்கள் வேட்டை இறைச்சி நகரத்திலடைபட்டுவரும் இறைச்சிக்கு ஒப்பிடப்படக் கூடாது.

*ஆடுமாடு அடிக்கிறவர்கள் இறைச்சியில் எண்ணெய் பூசப்படாது.*

77. உத்தரவுபெற்றிருக்கிற எந்த மாடு அடிக்கிறவனும் அல்லது அவனுடைய ஏசண்டு வேலையக்காரன் அல்லது எந்த மனுஷனும் கள்ளமாய் நகரவிசாரணை எல்லைக்குள் எண்ணெய்பூசி மாமிசத்தின் அல்லது மிருகத்தின் உடலின் எந்தப் பகுதியையும் விற்கப்படாது.

*கொட்டில்கள் வேலைச்சனத்துக்குத் திறபட்டிருக்கப்பட வேண்டும்.*

78. பிரசித்த சந்தையில் காவல்பண்ணல் அல்லது கொட்டிலில் ஆட்சிபண்ண உத்தரவுபெற்றவன் அல்லது இந்த அதிகாரத்தின் 5 ம் துணைச்சட்டத்துக்குள் பிரதான உத்தரவுபெற்றவன் எவனும் தொடர்ச்சியான இரண்டு நாளுக்கும் பிரஜைகளுக்குக் கொடுக்காதபடி அசட்டைசெய்ய அல்லது அல்லத்தட்டச் சம்பவித்தால் அவ்வித உத்தரவை நிறுத்த அல்லது திரும்ப அழைக்க சங்கத்தவர்களுக்கு நியாயமுண்டு.

*களவுக்குக் குற்றவாளியான ஆட்களை வேலைக்கு வைக்கப்படாது.*

79. களவுக்கு அல்லது அவ்விதமான குற்றச்சாட்டுக்குக் குற்றவாளியாக ஆக்கப்பட்ட ஒருவனும் ஒரு கொட்டிலை அல்லது ஒரு துண்டு நிலத்தை ஆட்சிபண்ணப்படாது. அல்லது பிரசித்த சந்தையின் கொட்டிலுக்கு, துண்டு நிலத்துக்கு உத்தரவு அல்லது உத்தரவுச்சீட்டை வைத்திருக்கிற எவனும் அவ்வித ஆட்களை வேலைக்கு வைத்திருக்கப்படாது.

*சந்தையில் பிடிபடும் போகடி நாய்களைப்பற்றி.*

80. சொந்தக்காறரோடு கூடிச்செல்லாமல் போகடிபோக்காய் பிரசித்த சந்தையில் அலைந்து திரியும் நாய்கள் சபாநாயகரால் அதிகாரம்பெற்ற ஆட்களால் பிடிக்கப்படும். அவ்வித நாய்களுக்கு அவைக்குரிய வரிப்பணத்தோடு மேலதிக 50 சதம் கொடுபட்டால் திரும்ப நாய்களின் உருத்தாளிகளுக்குக் கொடுபடும் அல்லது அந்த இராத்தொடங்கி முடிகிறவரையில் வரிப்பணத்துக்கு மேலாக ஒரு ரூபாய் கொடுபடவேண்டும். நாய்க்கு சொந்தக்காரன் இல்லாத வரையில் 1893 ம் ஆண்டில் ஏற்படுத்திய கட்டளைச்சட்டத்தின் 7 ம் இலக்கத்தில் காட்டிய பிரகாரம் நகரவிசாரணைத் தொழுவத்துக் கனுப்பப்படும்.

*கோழிவாத்துப் பிடிபடுதல்.*

81. நாய்களைத் தவிர பிரசித்த சந்தையில் அல்லது அதற்குச்சேர்ந்த நிலத்தில் போகடிபோக்காய் அலைந்துதிரியும் கோழி வாத்து மிருகங்கள் எதுவோ சபாநாயகரால் அதிகாரம்பெற்ற எவனாலும் பிடிக்கப்படும், பிடிக்கப்பட்ட நேரந்தொடங்கி 6 மணித்தியாலத்துக்குள் உருத்தாடவந்தால் 25 சதங் கொடுத்துப் பற்றிக்கொள்ளலாம், அந்த நேரத்துக்குள் உருத்தாடப்படாவிட்டால் நகரவிசாரணைச்சங்கத் தொட்டிலில் தாமதப்படுத்தப்படும், 12 மணித்தியாலத்துக்குள் உருத்தாடப்படாவிட்டால் விற்கப்படும். அந்த வருமானத்திலிருந்து ஒரு ரூபாய் செலவுக்கெடுக்கச் சங்கத்துக் குரித்துண்டு, சொச்சம் சொந்தக்காரனுக்குக் கொடுபடும்.

*அலுவல்கள் நடைபண்ணப்படுகிறது.*

82. பின்னால் காட்டப்படுங் கருமங்களைச் செய்துமுடிக்க ஒருவருக்குந் தத்துவமில்லை :—

*தாமதத்தினுல்கோபம் மூட்டுதலினும் உரும் தொந்தரவுகள்.*

(a) பிரசித்த சந்தையின் கொட்டிலுக்கு அல்லது ஒரு துண்டு நிலத்துக்கு உத்தரவு அல்லது உத்தரவுச்சீட்டுப் பெற்றவனாயிருந்தாலும் அல்லது வேலைக்காரனாய் அல்லது காரியக்கத்தனாயிருந்தாலும் சந்தைக்கு வருகிற ஒருவனையும் தாட்சணியமாய்ப் பேசவும் அல்லது தாமதத்தினால் அவசியமில்லாமல் கோபம் மூட்டவுங் கூடாது.

*பிரசித்த சந்தையில் சமைப்பதைப் பற்றி.*

(b) பிரசித்த சந்தையில் சமைக்கப்படாது.

*விதிக்கப்பட்டதினும் அதிகமாய் அறவுபண்ணுவதைப் பற்றி.*

(c) பிரசித்த சந்தையின் காவல்காரனாய் அல்லது குத்தகைக்காரனாயிருந்தாலும் அல்லது தன் கீழ் வேலைக்காரனாயிருந்தாலும் அறவுபண்ண அதிகாரம்பெற்ற தொகைக்கு மிஞ்சி அதிக வாடகையை அல்லது கூலியை வாங்கப்படாது, அல்லது மிதமிஞ்சிய அதிகாரங் கொடுக்கப்பட்டிருக்கின்ற வெறுஞ் சாட்டோடு அவசியமில்லாமல் ஒருவரையுந் தொந்தரவுசெய்யப்படாது.

*குளத்தில் மீன் பிடிப்பதைப்பற்றி.*

(d) பிரசித்த சந்தைக் கருகிலிருக்கும் போகம்பறு என்கிற குளத்தில் மீன் பிடிக்கக்கூடாது. அல்லது அதற்குள் அழுக்கு மலம் தூசி அல்லது வேறொரு பதார்த்தத்தையும் எறியக்கூடாது.

*ஒழுங்கீனமாய் நடப்பதைப்பற்றி.*

(e) பிரசித்த சந்தையிலும் அவ்விதிக்குட்பட்ட நிலங்களிலும் ஒழுங்கீனமாய் நடக்கவும் படாது, இடங்களை அசுத்தப்படுத்தவுங் கூடாது.

*நாடோடிகள்.*

(f) ஒருவன் சரியான நியாயஞ் சொல்ல ஏலாதபடி வேலை நடப்பித்தொழியும் இரா 9½ மணி நேரத்துக்குப் பின் பிரசித்த சந்தைகளில் வீண் பொழுதுபோக்கக் கூடாது.

*சந்தைச்சேதம், தண்ணீரை அசுசிப்படுத்தல்.*

(g) பிரசித்த சந்தைக்குக் கிட்டவாகவிருக்கும் கட்டிடங்களின் ஏதொரு பகுதியையாகுதல் கொட்டாய்கள் விளக்குகள் அல்லது சங்கத்துக்குச்சேர்ந்த ஏதொரு சாமான்களையும் பழுதுபடுத்தக்கூடாது, அல்லது பிரசித்த சந்தையின் பாவிப்புக்காக வைக்கப்பட்டிருக்குந் தண்ணீரை அழுக்குப்படுத்த அல்லது கீட்டுப்படுத்தவுங் கூடாது.

*தொத்துவியாதிகாரர் சந்தை கொட்டிலில்நின்று விலற்றல்.*

(h) அருவருப்பான வியாதிக்குட்பட்டிருக்கிறவர்கள் அல்லது தொத்து வியாதிக்காரர் ஒருவரும் பிரசித்த அல்லது சொய சந்தைகளில் கொட்டில்களில் ஆசனங்களில் வீதிகளிலிருக்கப்படாது. அல்லது சந்தையில் அல்லது நகரவிசாரணைக்குரிய வீதிகளில் வியாபாரஞ் செய்யக்கூடாது. மேலும் அவ்வித வியாதிக்குட்பட்டிருக்கிற ஒருவனையும் பிரசித்த அல்லது சொந்த சந்தைகளில் யாதொரு வேலைக்கும் ஏற்படுத்தக்கூடாது.

*கூலிக்கு வேலை செய்யுமாட்கள் உத்தரவுபெறவேண்டியது.*

83. பின்னால் குறிக்கப்பட்ட உத்தரவின்படி சபாநாயகரால் அல்லது சந்தைக்கூலிகளுக்கு உத்தரவுகொடுக்கும்படி அதிகாரம்பெற்ற எந்த உத்தியோகஸ்தராலும் இவ்வித முகாந்தரத்துக்காக கிரமமாய் உத்தரவுபெற்ற கூலிக்காரரையன்றி சந்தைக்கூலியாக வேறொருவனும் பிரசித்த சந்தையின் எல்லைக்குள் வேலைசெய்யப்படாது.

*பெயர்டாப்பு வைக்கப்படவேண்டும்.*

84. உத்தரவுபெற்ற கூலிகளுடைய பேர்வழிடாப்பு சந்தைக்காவற்காரனுடைய ஆபிசில் வைக்கப்படவேண்டும். ஓய்வுநாட்களிலும் பிரசித்த லீவுநாட்களிலுந் தவிர மற்றெல்லா நாட்களிலும் ஆபிஸ் நேரத்தில் தற்சமையக் கொம்மிற்றியாரால் டாப்பு பரிசோதிக்கப்படும்.

*உத்தரவுபெற்ற கூலி முத்திரையை அணியவேண்டும்.*

85. உத்தரவுபெற்றிருக்கிறவன் என்பதை சந்தைக்கு வருகிறவர்கள் அறியும்படிக்கு ஒவ்வொருவனும் முத்திரையையும் வேற்றுமைகாட்டுகிற உடுப்பையும் அணிவதுமன்றி கூலி உத்தரவுடாப்பில காணும் இலக்கத்துக்கு ஒத்திருக்கக்கூடிய இலக்கம் ஒன்றை அவர் அவர்களுடைய புயங்களில் அல்லது விளக்கமான இடத்தில் அணியவேண்டும்.

*வேறொருதரும் முத்திரையை அணியக்கூடாது.*

86. முன்வரும் துணைச்சட்டத்தில் காட்டியபடி உத்தரவுபெற்ற கூலியையன்றி வேறொருத்தரும் முத்திரையையாகுதல் வேற்றுமைகாட்டுகிற உடுப்பையாகுதல் இலச்சினையாகுதல் அணியக்கூடாது.

*முத்திரையும் உடுப்பும் பெறும் விலை.*

87. தற்சமயக் கொம்மிசிநிமார் காலத்துக்குக்காலம் நிருபித்தபடி உத்தரவுபெற்ற கூலியாட்களுடைய முத்திரைக்கும் வேற்றுமையான உடுப்புக்கும் இன்ன தொகை கொடுக்கவேணுமென்று விதிக்கப்படும்.

*உத்தரவு திரும்ப ஒருக்கினை கூப்பிடப்படும்.*

88. சபாநாயகர் தகுதியென்று காண்கிறவேளைகளில் கூலிகளுக்குக்கொடுத்த உத்தரவுகளை திரும்ப அழைக்க தன்ன அதிகாரமுண்டு. இந்தப் பிரமாணங்கள் சந்தைக்குப்போகிற தங்கள் வேலைக்காரருடைய கொள்வனவுக்கு தடையாயிருக்கமாட்டாது.

---

## 7 ம் அதிகாரம்.

*மனுஷிக சாப்பாட்டுக்கென்று எண்ணப்படுகிற மாடுகளும் மற்ற மிருகங்களும் யாவரும் காணத்தக்கதாக வைக்கப்படவேண்டும்.*

89. இந்த அதிகாரத்தின் 9 ம், 10 ம், 11 ம், 19 ம் துணைச்சட்டத்தில் ஏற்படுத்திய பிரகாரம் மனுஷ சாப்பாட்டுக்குத் தேவையான எல்லா மிருகங்களையும் நகரவிசாரணை எல்லைக்குட்பட்ட இந்த புகாத்தரத்துக்கென்று ஏற்படுத்திய தொட்டியிலாகுதல் காலமே 7 மணிக்கும் 9 மணிக்குமிடையில கொண்டுவரப்பட்டு மாடு அடிக்குமுன் 24 மணித்தியாலத்துக்கு யாவரும் காண வெளியாக வைக்கவேண்டும்.

*தகுதியற்ற மிருகங்களைக் கூடாதென்று சோதனைகாறன் தள்ளவேண்டும்.*

90. தொழில் பார்க்கும் நகரவிசாரணை சோதனைகாரன் அல்லது சபாநாயகரா லதிகாரம் பெற்ற வேறொருத்தன் கொண்டுவரப்பட்ட மிருகங்களைச் சோதித்து ஈன்றுள்ள பசுக்களையும் குட்டியுள்ள செம்மறிகளையும், குட்டியுள்ள மறி ஆடுகளையும் அவ்வித குணங்களையுடைய மற்ற மிருகங்களையும் மனுஷிகப் போசனத்துக்குத் தகுதியற்றதென்று தள்ளுவார், அவ்விதமாய்த் தள்ளப்பட்ட மிருகத்தை உடையவன் உடனே கொண்டுபோய் விடவேண்டும்.

*ஏற்றுக்கொள்ளப்பட்ட மிருகங்களைக் கொல்ல அவர் உத்தரவுகொடுக்க வேண்டும்.*

91. மனுஷிக போசனத்துக்காக அடிக்கப்படுகிறதற்குத் தகுதியென்று நகரவிசாரணைச் சோதனைக்காறன் அல்லது அதிகாரம்பெற்ற ஆளினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட எல்லா மிருகங்களும் இந்தத் துணைச்சட்டத்தின் 1 ம் அதிகாரத்தில காட்டியபடி 24 மணித்தியாலம் செல்லும் வரைக்கும் மேற்சொல்லிய தொழுவத்தில கட்டப்படவேண்டும், அப்பொழுது F. என்ற மாதிரியுடைய அநுபந்த முறையாய் துணைச்சட்டத்தில் காட்டிய பணத்தைக் கொடுத்து நகரவிசாரணை சோதனைகாரன் அல்லது தத்துவம்பெற்றவர் அவ்விதமாய்க் கொல்லுகிறதற்கு சம்மதித்தவர்களுக்கு உத்தரவுச் சீட்டைக் கொடுப்பார். அவ்விதமான மிருகங்கள் சபாநாயகரால காலத்துக்குக்காலம் ஏற்படுத்தியபடி நகரவிசாரணைச் சங்கத்துக்குரிய ஆடுமாடு அடிக்கும் தொட்டியில் கொல்லப்படும்.

*உத்தரவுச்சீட்டு இரண்டு நாளைக்கு மாத்திரம் பெறும்.*

92. ஆடுமாடு அடிக்கிறதற்கு கொடுக்கப்படும் உத்தரவுச்சீட்டு கொடுத்த நாள்துவங்கி இரண்டு நாள் வரைக்கும் பெலட்புள்ளதாக விருக்கும்.

*கொண்டுபோகப்படாத மிருகங்களின் விற்பனவு.*

93. இந்த அதிகாரத்தின் 2 ம் துணைச்சட்டத்தின்கீழ் தள்ளப்பட்ட எந்த மிருகத்தையும் ஞாயமான காலத்துக்குள் கொண்டுபோகத் தவறினால் அல்லது அடிக்க உத்தரவுபெற்று செய்து முடிக்கத்தவறினால், அல்லது இந்தத் துணைச்சட்டத்தின் நிமித்தம் கொடுக்கவேண்டிய சலாரைக் கொடுக்கத்தவறினால், பறைபடிப்பித்து நோத்திசு கொடுத்த இரண்டு நாளைக்குப் பிற்பாடு சபாநாயகர் பிரசித்த வெந்திசில் அப்படிப்பட்ட மிருகங்களை விற்றுப் போடலாம். அந்த வருமானத்திலிருந்து வரவேண்டிய பணத்தையும் விற்பனவால் வந்த சகல செலவுகளையுந் தள்ளி மிகுதிப் பணத்தை மிருகத்தின் சொந்தக்காரன் கேட்கப் பிரகாரங் கொடுத்துப்போடுவார்.

*உத்தரவில்லாமல் ஆடுமாடு அடிக்கும் தொட்டியுக்குள் காணப்படும் ஆட்கள் குற்றவாளிகளாக்கப்படுவார்கள்.*

94. இந்த அதிகாரத்தின் துணைச்சட்டத்தின் பிரகாரம் உத்தரவுபெறாதபடி ஒருவனும் ஆடுமாடு அடிக்குந் தொட்டிக்கு போகவுங்கூடாது அல்லது அந்த இடத்துக்கு மிருகங்களைக்கொண்டுபோகவுங்கூடாது. அல்லது மாடடிக்கும் தொட்டிக்குள் அல்லது தோட்டத்துக்குள்ளாகுதல் அவைகளை வைக்கப்படாது. அப்படிப்பட்ட ஒவ்வொரு மிருகங்களையும் நகர விசாரணை சோதனைகாரன் வைத்திருப்பார் வியாதிக்குட்பட்டால கொல்லப்படும்.

*நோய்கொண்ட மிருகங்களைக்கொல்லப்படாது.*

95. மனுஷிக போசனத்துக்காக அடிக்கப்பட கொல்லப்படுமுன் வியாதிக்குட்பட்டிருக்கிறதென்றால் முன் கொல்லப்படுகிறதற்கு ஏற்றுக்கொள்ளப்பட்டாலும் பணிவிடை செலுத்தப்படுகின்ற நகரவிசாரணை சோதனைகாரனுக்கு அல்லது சபாநாயகரால அதிகாரம்பெற்றவனுக்கு மனுஷிக போசனத்துக்குக் கூடாதென்று ஒவ்வொரு மிருகத்தையும் தள்ளுகிறதற்கு ஞாயமிருக்கும்.

*பழுதான இறைச்சியைச் செலவிடும் மாதிரி.*

96. முன் ஏற்றுக்கொள்ளப்பட்டு கொல்லப்பட்ட மிருகத்தில் மனித போசனத்துக்கு உதவாமல் வியாதிப்பட்டு பழுதடைந்தபோதால் அதை விற்கப்படாதபடிக்கு அல்லது மனித போசனத்துக்கு ஆகாதபடி சொல்லப்பட்ட நகர விசாரணை டக்டெர், சோதனைகாறர் அல்லது சபாநாயகரால் அதிகாரம்பெற்ற எவரும் சொல்லப்பட்ட இறைச்சியை உடனேக்குடனே அழித்து அல்லது செலவிடப்படவேண்டும். அந்த இறைச்சி மனுஷிக போசனத்துக்குக் கூடாதென்று மறுதலிக்கப்பட்டால் சொல்லப்பட்ட நகர விசாரணைச் சோதனைகாறன் அல்லது தத்துவம்பெற்ற இன்னுமொரு வைத்தியனை அல்லது சங்கத்தின் ஒருத்தனையுடன் கூட்டிக்கொண்டு மாடடிக்குந் தொட்டிக்குப் போகவேண்டியது. அங்கே இறைச்சியைச் சோதித்துப்பார்க்கவேண்டியது. அந்த டெல்த் ஒப்பிசரினால் அல்லது சங்கத்தினது ஒருவரால் மனுஷிக சாப்பாட்டுக்குத் தகாதென்று தள்ளப்பட்டால இந்த துணைச்சட்டத்தில் ஏற்படுத்தியபடி அழிக்க அல்லது செலவழிக்க நகர விசாரணைச் சோதனைகாறனுக்கு அல்லது வேறொரு தத்துவகாறனுக்கு நீதியாயிருக்கும்.

*நகரவிசாரணை எல்லைக்குப்பால் கொல்லப்படும் மிருகத்தின் இறைச்சியை உத்தரவில்லாமல் கொண்டுவரப்படாது.*

97. சபாநாயகருடைய பிரதான உத்தரவின்றி நகர விசாரணைத் தொட்டியில் அடிக்கப்படாத ஒருமாவ செம்மறி வெள்ளாடுக்கடாயின் இறைச்சியை மாகாணத்துக்குள் கொண்டுவரப்படாது. இந்தத் துணைச்சட்டத்தை உட்பிட்டுக்கொண்டு வரும் இறைச்சிக்குத் தக்கதாக பாவிக்கப்படாது.

*சோதிக்கும் வரைக்கும் நகரவிசாரணை எல்லைக்குள் விற்கப்படாது.*

98. சபாநாயகரால் ஏற்படுத்தப்பட்ட உத்தியோகஸ்தரினால் மனுஷிக போசனத்துக்கு தகுதியென்று நகர விசாரணை ஆடுமாட்டுத் தொட்டியில் முன்னமே சோதிக்கப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டாலன்றி விசேஷ உத்தரவோடு கொண்டுவரப்பட்ட இறைச்சியை மாகாணத்துக்குள் விற்கிறதற்கு அல்லது பிரசித்தமாய்ச் செலவிட ஒருத்தருக்கு நியாயமல்ல.

*ஆடுமாடடிக்குந் தொழுவத்திலிருந்து இறைச்சி கொண்டுபோகும் பொழுது வழிப்பாதை அல்லது விடுதலைச் சீட்டு வேணும்.*

99. அவ்வித கொல்லுதல் சோதனையை நிட்சயப்படுத்தி அவ்வித விடுதலைச் சீட்டைக் கொடுக்க நியமிக்கப்பட்ட உத்தியோகஸ்தர் ஆடு மாடடிக்கிற வீட்டுக்காவற்காரனால் கையொப்பம் வைக்கப்பட்டு G. என்ற அநுபந்தம் முறையில் காட்டப்பட்டிருக்கும் மாதிரியில் முன் காட்டிய துணைச்சட்டத்தின் சோதனைப்பிரகாரம், நகர விசாரணை, மாடடிக்குந் தொட்டியிலிருந்து ஒருவரும் ஒரு மிருகத்தின் இறைச்சியைக் கொண்டுபோகக் கூடாது.

*மூடின கரத்தையில் இறைச்சி கொண்டுபோகப்படவேண்டும்.*

100. ஒருவனும் சொல்லப்பட்ட இறைச்சி மற்றும் வெயில் தூசி மழையிலிருந்து பாதுகாக்கும்படியும், மனுஷர் காணுதபடிக்கும் தகுந்த கூரைகட்டு அல்லது ஒவ்வொரு மூலையும் மூடப்பட்டு கரத்தையில் கொண்டுபோகப்படாவிட்டால் நகரவிசாரணை மாட்டுத் தொழுவத்திலிருந்து அல்லது மாடடிக்கும் வேறொரு இடத்திலிருந்து சந்தைக்கு அல்லது நகர விசாரணை எல்லைக்குட்பட்ட இடத்துக்கு 20 ருத்தலுக்கு மேலதிகமான இறைச்சியைக் கொண்டுபோகவும், உத்தரவு கொடுக்கவும் கொண்டுபோவதற்கு முகாந்தரப்படுத்தவுங் கூடாது. ஒருவனும் மனுஷர் காணும்படி பச்சைத்தோல் அல்லது காய்ந்த தோல்களை அல்லது பச்சைப் பதனிடப்படாத தோலை அல்லது தோல்களை இடத்துக்கிடங் கொண்டுபோகும்பொழுது காட்டவுங் கூடாது காட்டும்படி முகாந்தரப்படுத்தவுங் கூடாது.

*கரத்தைகள் நாள்விதம் கழுவப்பட்டு துப்பரவு பண்ணப்படவேண்டும்.*

101. இறைச்சி தோல்கள் பதனிடப்படாத தோல்கள் கொண்டுபோகிற கரத்தை, கரத்தைகள், முற்றாகக் கழுவித்துத் துப்பரவுபண்ணப்பட வேண்டும். நாள்வீத சோதனைக்கு மாடடிக்குந் தொட்டிக் காவற்காறனண்டை அல்லது நகரவிசாரணை சோதனைகாறனண்டை கொண்டுபோகப்பட வேண்டும்.

*சோதனைகாறன்மாட்டு டாப்பை வைத்திருக்கவேணும்.*

102. தொழில் செலுத்தும் நகரவிசாரணைச் சோதனைகாறன் அல்லது முன்சொன்னபடி அதிகாரம்பெற்ற எவனும் மாட்டின் விபரத்தோடும் குறிகளோடும் II. என்ற மாதிரியின் அனுபந்தத்தில் காட்டிய விசேஷ சங்கதியோடும் அவனால் சோதிக்கப்பட்ட மாடுகளின் பெயர் டாப்பை வைத்திருக்கவேண்டும். அப்படிப்பட்ட டாப்பு ஓய்வுநாட்களிலும் லீவுநாட்களிலும் தவிர பகல் 1 மணி தொடங்கி 4 மணி வரைக்கும் நகரவிசாரணை ஆபிசில் குடிசனங்கள் பார்வையிட வைக்கப்படும்.

*சொந்தக்காறன் தனக்குச் சொந்தமென்றதை அத்தாட்சிப்படுத்த வேணும்.*

103. அவ்வித நகர விசாரணைச் சோதனைகாறன் அல்லது அதிகாரம்பெற்ற எவனும் சோதனைக்குக் கொண்டுவரப்படுகிற ஒவ்வொரு மாட்டின் சொந்தக்காறன் வாங்கின அல்லது விலக்குக் கொண்ட ஆள் அல்லது ஆட்கள் தன் சொந்த பொருளுக்கு ஆட்சிபெற்ற சீட்டைக் காட்டும்படியும் அவ்வித ஆடுமாடுகளுடைய விபரத்தையும் சொந்தக்காறன் சொந்தக்காறர்கள் இருப்பிடத்தையும் அடக்கி இருக்கத்தக்கதாகவும் மிருகங்கள் கொண்டுவரப்பட்ட இடத்திலிருக்கிற பொலிசு விதானை அல்லது கொஸ்தாப்பல் அல்லது அந்த டிஸ்திரிக்கு டிவிசனிலிருக்கும் தலைமைக்காறராகிய இரண்டு சாட்சிகளினால் உறுதியாக்கப்பட வேண்டும். அவ்வித சாட்சிப்பத்திரங்களை வவுச்சர்களை முந்தின துண்டைச் சட்டத்தில் கற்பித்தபடி நாள் வீதம் பேர் டாப்பை நகரவிசாரணை ஒப்பிசுக்கு அனுப்பப்பட வேண்டும்.

*மிருகங்களைக் குறித்து உரித்தாடுகிறவர்களைப்பற்றி.*

104. முன் சொல்லப்பட்ட முறை வெளியில் விட்டப்பட்ட மிருகத்தை யாராகிலும் உரித்தாட வந்தால் அல்லது அடிக்குமுன் நகர விசாரணை மாட்டுத் தொழுவத்தில் கொண்டுவரும்பொழுது நகரவிசாரணைச் சோதனைகாறன் அல்லது அதிகாரம்பெற்ற ஆள் சொல்லப்பட்ட மிருகத்தை கொல்லாதபடி தடைசெய்து அதன் உருமைக்காறனை 24 மணித்தியாலத்துள்ளாக அவனுக்குள்ள உருத்தின் விபரங்களையும் அவனுடைய மேல் விலாசத்தையும் சோதனைகாறன் அல்லது இன்னுமொரு தத்துவத்தைப்பெற்ற ஆளுக்குத் தேவையான சமாசாரத்தைக் கொடுக்க வேண்டியது அவசியம்.

*உரித்தாடப்பட்ட மிருகம் மஜிஸ்திரேத்துக்குமுன் கொண்டுபோகப்படவேண்டும். உரித்தாடுகிறவன் தன்னுடைய உருத்தை திஷ்டாந்தப்படுத்தத் தவறுவதால் மிருகங் கொல்லப்படும்.*

105. அவ்வித விசேஷ சங்கதி கொடுக்கப்பட்டவுடன் சொல்லப்பட்ட நகர விசாரணைச் சோதனைகாறன் அல்லது தத்துவம்பெற்ற மற்றவனும் மஜிஸ்திரேத்துக்குமுன் சொல்லப்பட்ட மிருகத்தைக் கொண்டுவரப்பண்ண வேண்டும், அவர் அந்தப்பிரகாரம் உருத்தைப்பற்றி சுருக்கமாய் விசாரித்துத் தீர்ப்புச்சொல்லுவார். முன்னே கேட்டுக்கொண்டபடி உரித்தாளி தன் உரித்தின் விபரங்களைக் கொடுக்கத் தவறினால் 24 மணித்தியாலத்துக்குள் கொல்லுகிறதற்கு உத்தரவைக் கொடுக்கிறதற்குமுன் நகரவிசாரணைச் சோதனைகாறனுக்கு அல்லது மற்ற அதிகாரம்பெற்ற எவனுக்கும் நியாயமுண்டு.

*இறைச்சிக்காறர் மாகாணத்தை விடும்பொழுது சங்கத்துக்கு அறிவிக்கவேண்டியது.*

106. மாகாணத்தைவிட நினைக்கிறவனும் பிரசித்த சந்தையின் கொட்டிலுக்கு உத்தரவு வைத்திருக்கிற ஒவ்வொரு ஆளும் ஒவ்வொரு உத்தரவுபெற்ற இறைச்சிக்காறனும் தன்னுடைய எண்ணத்தை சங்கத்தவர்கள் எழுத்தில் இரண்டு நாளைக்குமுன் அறிவிக்கவேணும். அவ்வித தொழிலைத் தான் இல்லாதவேளையில் தனது வேலையை நடப்பிக்கிற காரியகாறர் அற்றொணித் தத்துவகாறருடைய முழுப் பெயரையும் இந்த முகாந்தரத்துக்காக நகரவிசாரணை ஆபிசில் வைக்கப்பட்டிருக்கிற டாப்பில அவ்வித காரியதத்துவகாறன் அல்லது அற்றொணித் தத்துவகாறனுடைய பெயர் அவனால் அல்லது அவர்களால் பதியப்படவேண்டும். அவ்வித டாப்பிற் சோக்கை கண்டி டிஸ்திரிக்கிட் விடுமுன் ஏழு நாளைக்குமுன் உத்தரவுபெற்ற இறைச்சிக்காறனினால் பதியப்படவேண்டும். அப்படிப்பட்ட ஒவ்வொரு காரியக்கத்தனும் அற்றொணித் தத்துவகாறனும் உத்தரவுபெற்ற மாடடிக்கிறவனும் கொட்டில் குத்தகைகாறனும் உடன்பட்டதுபோல, இதற்குட்படவும் வகை சொல்ல வேண்டியவராயிருக்கிறார்கள்.

*ஆடுமாடடிக்கிறவர்கள் தவறினால் நொத்திசு கொடுக்கவேண்டியது.*

பிரசித்த சந்தையிலிருக்கிற கொட்டிலுக்கு உத்தரவு வைத்திருக்கிற ஆட்டிறைச்சிக்காறன் அல்லது வேறொருவன் நொத்திசு கொடுக்கத்தவறினால், பிரசித்த சந்தையின் கொட்டிலில் இருக்க உத்தரவுபெற்ற இறைச்சிக்காறன் அல்லது வேறொரு ஆளின் உத்தரவை சபாநாயகர் திரும்ப அழைக்கக் கூடும்.

*செலவுகொடுக்க வேணும்.*

107. பின்வரும் பணங் கொடுபட வேண்டும்:—

| | ரூ. ச. |
|---|---|
| ஒவ்வொரு எருமை அல்லது எருதைக் கொல்ல உத்தரவு பெறுகிறதற்கு கொடுக்கவேண்டிய பணத்தொகை … … | 0 50 |
| ஒவ்வொரு செம்மறி வெள்ளாடு கொல்லுதல் … … | 0 12½ |
| ஒவ்வொரு பன்றி கொல்ல … … … | 0 25 |
| இருபத்துநாலு மணித்தியாலத்துக்கு அல்லது அதற்குட்பட அதற்குக் குடில்போட்டு சாப்பாடு கொடுக்கிறதற்கு … … | 0 25 |
| மேற்சொல்லிய நேரத்தில் பன்றிக்கு குடில்போட்டு சாப்பாடு கொடுக்க … … … … | 0 12½ |

காலத்துக்குக்காலம் மேற்சொல்லிய பணத்தை மாற்றுகிறதற்கு சங்கத்துக்கு நீதியாயிருக்கும், அப்படி மாற்றப்பட்ட பணத்தொகை கவண்மேந்து "கசற்" றில் பிரசுரஞ்செய்த பிற்பாடு முன்காட்டிய தொகைக்குப் பதில் இறுக்கவேண்டிவரும்.

*விசேஷமான உத்தரவுக்குச் சலார் கொடுக்கவேணும்.*

108. சபாநாயகரின் பிரதான உத்தரவின்றி அல்லது அப்படிப்பட்ட உத்தரவின் நோக்கத்திற்கு மாறாக ஒரு பன்றியை அல்லது ஒரு மிருகத்தை உத்தரவுபெற்ற ஆட்டிறைச்சிக்காறனை அல்லாது கொல்ல நியாயமல்ல.

சங்கத்தவர்களால் காலத்துக்குக்காலம் நிர்மாணிக்கப்படுகிற பணம் முத்திரைச் செலவுக்கு மேலாக அப்படிப்பட்ட ஒவ்வொரு உத்தரவுக்கு மேலதிக பணம் விதிக்கப்படும்.

109. மேற்குறித்த அதிகாரங்களில் "மிருகம்" என்ற சொல்லுக்கு ஆடுமாடுகள் என்ற அருத்தமுள்ளதாகும், இறைச்சிக்காறரைப்பற்றிய கட்டளைச்சட்டத்தில் காண்பித்திருக்கிற அருத்தங்களை "ஆடுமாடுகள்" என்றதற்கும் "உத்தரவுபெற்ற இறைச்சிக்காறன்" என்றதற்கும் வழங்கப்படும்

## 8 ம் அதிகாரம்.

### பிறர் எல்லைக்குட்படுத்தலுந் தடைசெய்தலும்.

*உரிமைச்சாதனங்களைக் காண்பிக்கும்படி சங்கம் சில சமயங்களில் கேட்கக்கூடும்.*

110. ஏதொரு தெருவில் கட்டிடம், அடைப்பு, தடைகள் இருக்கிறதாக சங்கத்தவர்களுக்குத் தெரியவந்தால், அல்லது நகர விசாரணைச்சங்கத்தின் எல்லைக்குளடங்கிய தரவை நிலங்களில் கட்டப்பட்டால் அல்லது சரியான உத்தரவின்றி எந்த வீதியின் எல்லையை மாற்றினால் அந்தக் கட்டிடங்கள் அடைப்பு தடைகளிருக்கிற நிலங்கள் வீதிகளுக்கு உருத்தாயிருக்கிற காணிக்காறரிலிருந்து ஏதொரு எழுத்துப்பத்திரத்தைக் காண்பிக்கும்படி கேட்கிறதுமிகு அல்லது அதற்குள் அல்லது மேலாக தெரு வீதியின் எல்லையை மாற்றச் சம்பவித்தால், அந்தக் காணிக்குரிய படத்தை அல்லது ஏதொரு உருத்தைக்காட்டும் உறுதியைப் பத்திரத்தைக் காட்டும்படி கேட்கவேண்டும்.

அந்த நிலங்களை ஆட்சிபண்ணுகிறவன் அவைகளின் சொந்தக்காறனுயிராவிட்டால், சபாநாயகரால் கேட்கப்பட்ட நேரம் சொந்தக்காறனின் பேரையும் இருப்பிடத்தையும் கொடுக்கக்கடமைப்பட்டவனுயிருக்கிறன். அவ்வித பெயர் உருத்தாளி கேட்கப்பட்ட பத்து நாளைக்குப்பிறகு அந்த நிலங்களுக்கு தன் உருத்தைக் காட்டிய படங்கள் உறுதிகள் சாதனங்களைக் காட்டக் கடமைப்பட்டிருக்கிறன்; அல்லது உறுதி, சாதனம், அதிகாரபத்திரம் அவனுடைய ஆட்சியிலில்லாவிட்டால், ஆர் வசம் இருந்ததென்பதைப்பற்றி சபாநாயகர் கேள்விப்படி அறிவிக்கவேணும், தன் வசம் உறுதிகள் சாதனங்கள் அதிகாரப்பத்திரங்கள் படங்கள் வைத்திருக்கிற ஒவ்வொருவனும் சபாநாயகர் கேள்விப்படி பத்து நாளைக்குப்பின் அவைகளை காண்பிக்கிறதற்குக் கடமைப்பட்டிருக்கிறன்.

*உறுதிகளைக் காண்பிக்க கேட்கிறதில் அவைகளைச் சோதிக்க அதிகாரத்தையும் அடக்கியிருக்கிறது.*

111. மேற்சொல்லிய பலமொழித்தொடர்பில் காட்டிய உறுதிகள் சாதனங்கள் உறுதிப்பத்திரங்கள் படங்கள் சபாநாயகர் கேட்ட நேரம் காண்பிக்கப்படவேணும், முன் காட்டப்பட்ட பலமொழித்தொடர்பில் சொல்லிய பத்திரங்களை காண்பிக்கும்படி அதிகாரம்பெற்றவர்களுக்கு அவ்வித உறுதிகள் சாதனங்கள் அதிகாரப்பத்திரம் படங்கள் தேவையானால், சோதிக்கவும் கொப்பிகள் எடுக்கவு மதிகாரமுண்டு. உறுதி உடையவர்கள் உறுதிகளைச் சோதிக்கவும் கொப்பி எடுக்கவும் சபாநாயகருக்கு இடங்கொடுக்கவேணும்.

*சபாநாயகர் நிலஅளவைக் கட்டளைசெய்யக்கூடும்.*

112. சபாநாயகருக்கு அல்லது அவரால் அதிகாரங்கொடுக்கப்பட்டவர்களுக்கு ஆட்சிபண்ணுபவர்க்கு எழுத்தில் நியாயமான கால அறிவித்தலின்பின் கட்டிடங்கள் அடைப்புகள் உள்ள நிலங்களில் பிரவேசிப்பது நியாயம், அல்லது துணைச்சட்டத்தின் 1 ம் அதிகாரத்தில் காட்டியபடி தெருவின் வரியை மாற்றவும் தான் அவசியமாய்க் காண்கிறதைச் சோதிக்க அல்லது அளந்து பார்க்கவும் சங்கத்தவர்களால் கொடுக்கப்பட்ட தெருவை அல்லது நிலத்தை ஏதொரு கட்டிடங்கள் அடைப்புகள் தடைசெய்யுமோ வென்பதை சபாநாயகர் அறிந்துகொள்ளவும் அல்லது தெருவின் வரி உண்மையாய் மாற்றப்பட்டதோ என்பதை அறியவரும்.

113. அவ்விதமான அளவின்பின் அந்தக் கட்டிடம் அல்லது அடைப்பு அல்லது முன்சொல்லிய தடைகள் தெருவுக்கு நெருக்குதலைக் கொடுக்குமென்று சங்கத்தவர்களுக்கு தெரியவந்தால், அல்லது சரியான தத்துவமில்லாமல் தெரு எல்லையை மாற்றினால் கட்டிடங்கள் அடைப்புகள் தடைகள் உள்ள நிலங்கள் தோட்டங்கள் ஆட்சிபண்ணுகிறவனுக்கு உடைய அல்லது தெரு எல்லை மாற்றினவனுக்கு சபாநாயகர் எழுத்தில் அறிவிப்பது என்னவெனில், சபாநாயகரின் உத்தரவின்படி தோட்டம் அளக்கப்பட்டதென்றும் அதை ஆட்சிபண்ணுகிறவன் சோதனைபண்ணிப்பார்க்கலாமென்றும் தெருவிக்கவேண்டும். நோட்டீசின் ஒரு மாசத்துக்குள் அவன் அல்லது காணிகளைத் தன்பேரில் வைத்திருக்கிறவன் தன் உரித்தை ஸ்தாபிக்கும்பொருட்டு அந்தக் கட்டிடங்கள் அடைப்புகள் எல்லைமாறுதலை தடைசெய்யவும் அல்லது ஞாயமினமாய் மாற்றின ஒரு எல்லையை திரும்ப மாற்ற இடங்கொடாதபடிக்குக் கேட்டால் வெளிப்பட்டு உத்தரவுபெற வேண்டியது. குறிக்கப்பட்ட நேரத்தில் வளக்காடப்படாவிட்டால் அல்லது வளக்காட எத்தனம்பண்ணப்படாவிட்டால் அவ்வித கட்டிடங்கள், தடைகள் அடைப்புகளை உடனே விலத்த அல்லது மாற்றப்பட்ட தெருமுந்தின நிலபரத்துக்குக் கொண்டுவரப்படச் சங்கத்தவர்களுக்கு அதிகாரமுண்டு. சங்கத்தவர்களுக்கு அல்லது அவைகளால் அதிகாரம்பெற்றவர்களுக்கு எந்த வீடுகளுக்குள்ளும் தோட்டம் அடைப்புகளுக்குள்ளும் தோப்புகளுக்குள்ளும் பிரவேசிக்கவும், அவ்விதபொருட்களைத் திரும்பப் பெற்றுக்கொள்ளத்தக்கதாக ஆயுத அணிகளோடு ஆட்கள் உட்பிரவேசிக்க நீதியாயிருக்கும். தான் தான் கட்டிடங்கள் அடைப்புகளுள்ள நிலங்களுக்கு உரித்தாயிருக்கிறவனுல் செலவுகள் இறக்கவேணும். அதுவும் 1887 ம் ஆண்டு நகரவிசாரணைச் சங்கத்திலுண்டான சட்டத்தின்படியும் சொல்லப்பட்ட சட்டத்தில் செலவுகள் இறக்க கட்டளைபெற்ற பிரகாரம் 281 ம் 282 ம் பிரிவில் காட்டப்பட்டபடியும் விளைவுதல்செய்து தீர்மானித்து அறவுபண்ணப்படும். மேற்சொல்லியவைகளுக்கு கோட்டு அதிகாரம்பெற்ற பிரியாடு சொல்லப்பட்ட கட்டிடங்கள் தடைகள் அடைப்புகளுள்ள நிலத்துக்கும் அல்லது தெருவின் எல்லை மாறுதலுக்கு உருத்தாயிருக்கிறவனும் தன் உருத்தைக் காண்பிக்க கடமைப்பட்டவனுயிருக்கிறன்.

---

## 9 ம் அதிகாரம்.

### நாய்களைப்பற்றிய துணை பிரமாணங்கள்.

114. இடாப்புக்கடுதாசி குடியிருப்பவரா லெழுதப்பட வேண்டியது. ஒவ்வொரு வீட்டிலுமல்லது அதைச்சேர்ந்த எப்பகுதியிலுமாவது வைக்கப்பட்டிருக்கும் நாய்களின் தொகையையும் இலட்சணங்களையு மவை யொவ்வொன்று மெவரெவர்க்குடையதென்றுங் காட்டும்பொருட்டு 1. அக்கர இடாப்பின்படி யோர் கடுதாசி யெழுத அவ்வீட்டில் குடியிருப்பவரை காலத்துக்குக்காலம் கட்டளையிடுதல் நகரசங்கத்தாருக்கு நியாயமாயிருக்கு மன்றியும், ஒவ்வொரு வீட்டின் குடியிருப்பவரு மவ்விடாப்புக் கடுதாசியை ஒப்புக்கொண்டதில் சரியான அறிவித்தல்களை முறையாயெழுதி தனக்குக் கிடைத்தோர் கிழமைக்குள் ளதைத் திருப்பிக்கொடுத்துவிடக்கடவர்.

115. நாயையுடையவர் சங்கத்துக்கறிவித்தல் கொடுக்கவேண்டியது. ஒரு நாயைப் பெற்றுக்கொள்ளும் வைக்கும் ஆட்சியாளரு மொவ்வொருவரும் அந்நாயைச் சம்பாதித்து அல்லது ஆட்சியாக்கி ஒரு மாதத்துக்குள் அம்மிருகத்தின் முழு இலட்சணத்தையும் குறித்துச் சங்கத்துக்கறிவிக்கவேண்டியது.

116. நாயைக்கொண்டுவந்தால் அல்லாமல் நிச்சயப்பத்திரம் கொடுபடமாட்டாது. பதிவுசெய்யக் கேட்கப்படும் நாய்களைப் பார்வையிடும் பல சங்கத்தலைவர் தனக்கு முன்பாகக் கொண்டுவரும்படி கேட்கக்கூடும். அப்படி கொண்டுவரப்படும் வரைக்கும் பதிவுசெய்யும் நிச்சயப்பத்திரம் கொடுக்கப்படமாட்டாது.

117. நிச்சயப்பத்திரம் கொடாவிட்டால் ஒரு நாய் ஏதும் விஷ அல்லது தொற்றுநோயுத்திருப்பதினிமித்தம் குடிசனத்துக்குத் தீங்கை யுண்டாக்கு மோர் கருவியென சுகசெனக்கிய ஆராய்வின் உத்தியோகஸ்தர் தீர்மானிப்பாரேயானல், அந்நாயையுடையவருக்கொரு நிச்சயப்பத்திரங் கொடாமல் சங்கத்தலைவரால் மறுத்துவிடப்படும்.

118. பதிவுக்குரிய முதல் நகரஎல்லைக்குள் வைக்கப்பட்டிருக்கிற ஒவ்வொரு நாயினது வருஷாந்தப் பதிவுக்குரிய முதல் ரூபாய் ஒன்று கொடுக்கப்படவேண்டும்.

119. பதிவினது நிச்சயப்பத்திரம் இத்துடன் அனைந்திருக்கும் J. அநுபந்தத்தையுடைய இடாப்பின் மாதிரியான ரிஜிஸ்டர் பதிவினது நிச்சயப்பத்திரம்.

120. சீவிக்க தகுதியற்ற நாயின் நிச்சயப்பத்திரம் தள்ளப்படும்.—வியாதிபிடித்த அல்லது நொன்தியாக அல்லது சுகப்படுத்தக்கூடாமல் அல்லது சீவிக்கத்தகுதியற்றதென நகரசங்கத்தலைவரால் அல்லது சுகசௌக்கிய விசாரணை உத்தியோகஸ்தரால் கவனிக்கப்பட்ட நாய்களுக்குக் கொடுக்கப்பட்ட நிச்சயப்பத்திரம் சங்கத்தலைவரால் தள்ளப்படும்.

121. நிச்சயப்பத்திரம் கொடாமல் மறுக்கும்போது நாய்களைக் கொல்லக் கட்டளையிடலாம்.—நிச்சயப்பத்திரம் கொடுக்கப்படாமல் விலக்கப்படும் ஒவ்வொரு நாயுடையவனும் கட்டளையிடப்பட்டவுடன் தனது நாயைக் கொன்றுபோடுகிறதற்காக நகரசங்கத்துக் கந்தோர் முன்பாக கொண்டுவந்து சேர்த்தல் வேண்டும்.

122. நாய்களின் கழுத்துப்பட்டி.—நகரசங்கத்து எல்லைக்குள் வைத்திருக்கப்பட்ட ஒவ்வொரு நாயின் கழுத்தில் நகரசங்கத்தின் முத்திரையும் ரிஜிஸ்டர் பதிவின் இலக்கமும் பதியப்பட்ட வருஷமும் பதிந்த ஓர் பட்டியை உடுத்தல்வேண்டும்.

123. கழுத்துப்பட்டி சங்கத்தால் கொடுக்கப்படுவதற்கு முதல் கொடுக்கவேண்டியது.—நாய்களின் கழுத்தில் போடுகிற பட்டி நகரசங்கத்துக் கந்தோரில் பெற்றுக்கொள்ளுகிறதாயிருந்தால், ஒவ்வொரு பட்டிக்கு ரூபாய் ஒன்று அறவிடுகிறதற்கு இத்தால் தத்துவம் கொடுக்கப்படுகின்றன.

---

## 10 ம் அதிகாரம்.

*மனுஷிக போசனத்துக்குக்கூடாத இறைச்சி விற்பனவு.*

124. பழுதான இறைச்சியைப் பிடித்தல்.—மனுஷிக போசனத்துக்குத்தகாதநும் பழுதானதுமான எந்த இறைச்சியையும் அதாவது கோழி, வாத்து, வேட்டை மிருகம், மாமிசம், மச்சம், மரக்கறி, பழங்கள் அல்லது நகரவிசாரணை எல்லைக்குட்பட்ட விற்பனவுக்குக் கொண்டுவரப்பட்ட எந்தச் சாமான்களையும் கெல்த் ஒப்பிசரண்டை கொண்டுவரப்படவேண்டும். அவரில்லாதவேளை வேறொரு உத்தியோகஸ்தரில்லாவிட்டால் மஸ்திருத்தண்டை கொண்டுபோகப்பட வேண்டும் சொல்லப்பட்ட இறைச்சி, கோழி, வாத்து, மீன், மரக்கறி, பழங்கள், அல்லது மற்றுஞ் சாமான்கள் மனுஷிக போசனத்துக்குத் தகாததாக கெல்த் ஒப்பிசருக்கு அல்லது மஸ்திருத்துக்குக் காணப்பட்டால், விற்பனவுக்குக் கொண்டுவராதபடி அதை அழித்துப்போடவும் அல்லது அவ்விதமாய்ச் செலவிட்டுப்போடவுங் கட்டளைபண்ணுவார்.

---

## 11 ம் அதிகாரம்.

*பயனைப்பண்டசாலைக்கு உத்தரவு வேண்டும்.*

125. மோசமான அல்லது வெடிநாற்றஞ் சாமான்கள் விற்பனவுக்கும் அல்லது இடங்கள் பண்டசாலைகள் சபாநாயகரால் உத்தரவுகொடுபடாவிட்டால், ஒருவனும் விற்பனவுக்கு அல்லது குவித்துவைத்தலுக்கும் உடும்பு அல்லது எலும்புத்துவளை அல்லது ஏதொரு பயனையையும், அல்லது நகரவிசாரணை எல்லைக்குட்பட்ட ஏதொரு பண்டசாலையிலும் தீங்கான அல்லது வெடிநாற்றஞ் சுற்ற ஏதொரு பொருளையும் ஒருவரும் வைக்கவும் அல்லது சேமித்துவைக்கவுங் கூடாது. அந்த உத்தரவு K. என்ற அநுபந்தத்தில் காட்டப்பட்டபடி வெளிப்பட்ட நாள் துவக்கம் அடுத்த மார்கழி 31 ந் தேதி வரைக்கும் பெலப்பாயிருக்கும்.

*1887 ம் ஆண்டின் கட்டளைச்சட்டத்தின் 259 ம் பிரிவின் உத்தரவுக்கு செலவு கொடுக்கவேணும்.*

126. சங்கத்தவர்களின் யோசனையின்படி 1887 ம் ஆண்டின் 7 ம் கட்டளைச்சட்டத்தின் 259 ம் பிரிவின் பிரகாரம் ஒவ்வொரு உத்தரவுகளுக்காக காலத்துக்குக்காலம் தீர்மானிக்கிறபடி ரூபாய் முப்பதுக்கு அதிகப்படாத ஒரு சிலவை வருஷாந்தம் அறவுபண்ண சபாநாயகருக்கு நீதியாய்க் காணும்.

*259 ம் பிரிவுக்கு அடங்கிய வேலைகள் சோதனைக்குட்பட்டிருக்கும்.*

127. 1887 ம் ஆண்டின் 7 ம் இலக்கச்சட்டத்தின் 259 ம் பிரிவின்படி நகரவிசாரணை எல்லைக்குட்பட்ட எந்த வேலை வேலைகளின் நடப்பித்தல் சபாநாயகரால் அல்லது அவருடைய அதிகாரத்துக்குக்கீழ் இருப்பவர்களால் அன்றி வேறொருவரால் சோதிக்கப்படக்கூடாது.

*உத்தரவு வைத்திருப்பவன் பொருத்தனைகளை காண்பிக்க வேணும்.*

128. சொல்லப்பட்ட பிரிவில் கொடுக்கப்பட்ட உத்தரவை வைத்திருக்கிற ஒவ்வொருவனும் உத்தரவுகாலம் முழுவதிலும் செய்கிற கொண்டுபோகிற சேர்க்கிற மாதிரியைக் காலத்துக்குக்காலம் சபாநாயகரால் கொடுக்கப்படுகிற பொருத்தம் அல்லது கட்டளைகளைக் காண்பிக்க வேணும், அல்லது தீங்குள்ள வெடிநாற்றஞ் சுற்று பதார்த்தங்களை வைப்பதில் அல்லது செய்கைபண்ணுவதில் கொண்டுபோவதில், குவிப்பதில் வைப்பதிலுள்ள காரணங்களை அல்லது உத்தரவுபெறக்கூடிய சாமான்களின் மாதிரியைக் குறித்தும் அல்லது காரியமிருக்கிறபடி கொண்டுபோக அல்லது சேர்த்துவைக்கத் தடைபண்ணப்பட்டால், அல்லது காலத்துக்குக்காலம் சொல்லப்பட்ட மோசமான பதார்த்தங்கள் காரியங்களின் சுபாபத்தை பெலத்தை சோதித்துப் பரீட்சித்துப் பார்க்க வேண்டியது.

*மாட்டுக்காலை அல்லது கொட்டடிப்பராமரித்துவருபவர்களைப்பற்றி.*

129. ஒவ்வொரு குதிரை லாயம் மாட்டுக்குடில் மாடு தங்கும் இடத்தை உடைய சொந்தக்காறன் அல்லது குத்தகைக்காறன் செங்கல் காட்டுக்கல் கொன்கிறீற் சீமேந்து நிலக்கீல் போட்டுக் கட்டி ஓடுபோட்டு விடவேண்டியது, ஜலம் அழுக்குத்தண்ணீரை சபாநாயகரால் கட்டளைபண்ணப்பட்டபடி கொண்டுபோவதற்கு மூடியுள்ள ஒரு வக்கை கட்டவேணும், ஏதொரு நாற்றம் உண்டாகாதபடி அங்குள்ள சப்புச்சவர் முழுதும் சொந்தக்காறன் அல்லது குத்தகைக்காறனுடைய செலவோடு கொண்டுபோகப்பட வேணும். அவ்வித கொட்டில்கள் மாட்டுக்குடில்கள் தங்குமிடங்கள் நாள்வீதம் கழுவப்படவேணும். எப்பொழுதும் சுத்தமாயிருக்கவேணும். மூன்று மாசத்துக் கொருமுறை வெள்ளை அடிக்கப்பட வேண்டும். எல்லாச் சாணியும் காய்ந்த மல அழுக்குகளும் சங்கத்தவர்களின் உத்தியோகஸ்தரால் கொண்டுபோகத்தக்கதாக குதிரை லாயம் மாட்டுக்குடில் தங்குமிடம் அல்லது காலைக்குப் பிறம்பாய் ஒரு வக்கில் போடப்பட வேண்டும்.

*வண்டில் நிலங்களிலிருக்கிற குப்பை கூளங்களை நாள்வீதம் எடுத்துப்போட வேணும்.*

130. 1887 ம் ஆண்டின் நகரவிசாரணைச் சங்கக் கட்டளைச்சட்டத்தின் 259 ம் பிரிவில் காட்டியபடி ஒவ்வொரு சொந்தக்காறனும் நகரவிசாரணை எல்லைக்குட்பட்டிருக்கும் ஆட்கிபண்ணுபவனும் ஒவ்வொரு சொந்தக்காறனும் கரத்தை நிலத்திலிருப்பவனும் ஆடுமாட்டின் நிலத்திலிருப்பவனும் அப்பஞ்சுகேற விடத்தி லிருப்பவனும் வண்டில அல்லது வேறே வேலைகளைச் செய்கிற இடத்திலிருப்பவனும் 24 மணித்தியாலத்தில் இரண்டு முறை 6 மணி தொடுத்து 8 மணி வரைக்கும், மறுபடி 4 மணி தொடுத்து 6 மணி வரைக்கும் சபாநாயகரின் உத்தரவின்றி எல்லா அழுக்கையும் குப்பை கூளங்களையும் அந்தந்த விடத்தில் குவித்து போடவேணும்.

*கரத்தை நிலத்தில் தண்ணீர் நில்லாமல் ஓடத்தக்கதாக வாய்க்கால்களை வெட்டிவிட வேணும்.*

131. ஒவ்வொரு வண்டில் நிலமும் ஆடுமாட்டிடமும் ஆட்டுப்பட்டியும் சபாநாயகரின் கட்டளைக்குத் தன்னிதில்லாமல் ஓடத்தக்கதாக வாய்க்கால் வெட்டிவிடப்படவேணும்.

## 12 ம் அதிகாரம்.

### நகராதிகார சங்கத்தார் தண்ணீர் கொடுத்தல்.

*தண்ணீர் அறவிடு முறை.*

132. கண்டி தண்ணீர் கொடுத்தலின் வேலைக்காகக் கடன் வாங்குதலைப்பற்றிய 1881 ம், 1891 ம் ஆண்டுகளின் கட்டளைச்சட்டத்தின்படி நகராதிகார சங்கத்தார் விதிக்கவும் அறவிடவும் அதிகாரங் கொடுக்கப்பட்ட தண்ணீர் வரியும் இந்த அதிகாரத்தின்படி இறுக்கவேண்டிய வேறெந்தப் பணமும் 1887 ம் ஆண்டின் நகராதிகாரசங்கக் கட்டளைச்சட்டத்தின்படி விதிக்கப்பட்ட வரியைப் போல அறவிடப்படவேண்டியது.

*உத்தியோகஸ்தரை நியமித்தல்.*

133. இந்த வேலைகளைச் செய்வதற்கும் இதன்பின் சொல்லப்படும் கடமைகளை நடத்துவதற்கும் வேண்டிய உத்தியோகஸ்தர்களை நியமிப்பதும் அவர்களுக்குத் தகுதியான சம்பளம் கொடுப்பதும் சங்கத்தார்களுக்கு நீதியாகும்.

*வரி அறவிடுதல் முதலியவற்றால் வருஞ் செலவுகள் தண்ணீர் வரியிலிருந்து இறுக்கப்படவேண்டியது.*

134. தண்ணீர் கொடுப்பதால் அல்லது அதைப்பற்றி வரும் சகல செலவுகளும் தண்ணீர் வரி அறவிடுவதால் வரும் செலவுகளும் தண்ணீர் வரிக்காக அறவிட்ட தொகையிலிருந்தே கொடுபடவேண்டியது.

*தண்ணீர் கொடுப்பதற்காகிய சகல வேலைகளும் சங்கத்தின் பொறுப்பில் இருக்கவேண்டியது.*

135. இந்தப் பிரமாணங்கள் எடுத்தாளப்படத் தொடங்கும் காலத்தில் இருக்கிற அல்லது அதன்பின் உண்டாக்கப்படுகிற அல்லது அமைக்கப்படுகிற அல்லது கட்டப்படுகிற சகல பிரசித்த கேணிகள், நீர்நிலைகள், தொட்டிகள் நிலக்குளாய்கள், செய்நீர்ச்சுனைகள், மதகுகள், கிணறுகள், வாய்க்கால்கள், அருத்திகள், குளாய்கள், மற்றும் வேலைகளும் அந்த வேலைகளோடு சேர்ந்த சகல கட்டடங்கள் வேலைகள் தளபாடங்களும் நகராதிகார சங்கத்தின்மேல் பொறுப்பிக்கப்படும்.

*வடி கேணி முதலியவற்றைச் சங்கத்தார் கட்டிக்கொடுக்கலாம்.*

136. நகராதிகார எல்லைக்குள் இருக்கும் சனங்களுக்குக் காலத்துக்குக்காலம் அவசியம் என்று சங்கத்தால் காணப்படும் வடிகேணிகள், நீர்நிலைகள், மேல் வாய்க்கால்கள், அல்லது மற்றும் வேலைகளை அந்தச் சங்கத்தார் தானே செய்விக்கவும் செய்நீர்ச் சுனைகள் நிலக்குளாய்களை நிறுத்துவிக்கவும் குளாய்களைப் பதிக்கவும்பண்ணலாம்.

*தெருக்களை வெட்டவும் ஊரவர்களது காணிக் குட்பிரவேசிக்கவும் அதிகாரம்.*

137. அப்படிப்பட்ட யாதொரு குழாய் வைக்குமிடத்து சங்கத்தார் அவசியமென்று கண்டால் அதை யாதொரு தெரு அல்லது தெருவுக்காக விடப்பட்ட இடம் யாதொரு கட்டடம் அல்லது ஒரு கல்லறை அல்லது சூழ்சாந்தறை ஆகிய இவற்றுக்கு ஊடாக அல்லது குறுக்காக அல்லது கீழாகவும்; இன்னமும் எவ்வகைப்பட்ட அடைபட்ட காணி மற்றும் காணிகளுக்கும் ஊடாகவும் கீழாகவும் வைத்துக்கொண்டுபோகலாம். ஆனால் இப்படிப்பட்ட வேலையை இந்தப் பிரமாணத்தின்படி யாதொரு குடியானவர்களுடைய ஆதனத்தில் செய்யும்போது அந்த ஆதனத்தின் சொந்தக்காரனுக்கு நொத்தீசுகொடுத்து வேலை முடிந்தவுடன் அவனுக்கு நியாயமான நட்டம் கொடுக்கவேண்டியது சங்கத்தாருடைய கடமையாகும். அப்படிப்பட்ட நட்டத்தின் தொகையைப்பற்றி அல்லது அதைப் பிரிவிடுகிறதைப்பற்றியாதொரு வாக்குவாதம் உண்டேட்டால், அது பொலிசு நீதவானால் பொருப்பட விசாரித்து முடிவுகட்டப்படவேண்டியது. அவருடைய தீர்வைக்கு விரோதமாக சுப்பிரீங்கோட்டுக்கு அப்பல் கேட்கலாம்.

*ஒருவரும் தண்ணீரை அழுக்குப்படுத்தப்படாது.*

138. யாதொரு நீர்நிலை, தொட்டி, செய்நீரூற்று, நிலக்குழாய் அல்லது குழாய்கள் அல்லது நீர் கொடுத்தற்காகச் செய்யப்பட்ட மற்று வேலைகளிலுள்ள சலத்தை யாதொரு வகையாகப் பழுதுபடுத்த, கேடாக்க, அல்லது அழுக்குப்படுத்தக் கூடியதாக யாதொரு செய்கையையும் செய்யப்படாது. இன்னமும் எவர் ஒருவரும் அந்த வேலைகளை எந்த விதமாகவேனும் பழுதுபடுத்தவாவது சருவவாவது கூடாது.

*நிலக்குழாய் முதலியவற்றில் குளிக்க முழுகக் கூடாது.*

139. நகராதிகார எல்லைக்குள் உள்ள தெருக்கள், வீதிகள், அல்லது மற்றும் பிரசித்த கட்டடங்களில் சங்கத்தார் பொறுப்பில் இப்போதுள்ள அல்லது இனிமேற் கட்டப்படும் யாதொரு நீர்நிலை, நிலக்குழாய், செயநீரூற்று, தொட்டி, குழாய் அல்லது மற்றும் தண்ணீர் வேலைக்குரிய இடங்களில் அல்லது அவைகளுக்குச் சமீபமாக ஒருவரும் முழுகவாவது தங்கள் உடம்பின் யாதொரு பகுதியைக் கழுவவாவது யாதொரு ஆடுமாடு மற்றும் மிருகங்களையாயினும் யாதொரு வண்டில் சவாரிப் பொருள், புடவை, தட்டுமுட்டு, அல்லது மற்றும் பொருள்களையாயினும் கழுவவாவது கூடாது.

*வரிகொடுப்பவர்கள் வீட்டுப் பாவிப்புக்குத் தண்ணீரைச் செலவுகொடாமல் பாவிக்கலாம்.*

140. இந்த அதிகாரத்தில் 1 ம் பிரமாணத்திற் சொல்லிய வரியைக் கொடுப்பவர் எவரும் தனக்கும் தன் குடும்பத்துக்கும் வீட்டுப்பாவிப்புக்காக நகராதிகார சங்கத்தின் பிரசித்த நிலக்குழாய் அல்லது செய்நீரூற்றிலிருந்து அதுக்காக வேறு செலவுகொடாமல் தண்ணீர் பெற்றுக்கொள்ள உரித்துள்ளவர்கள் ஆவார்கள்.

*தண்ணீர் வாளிகளில் மாத்திரம் எடுத்துக்கொண்டு போகவேண்டியது.*

141. யாதொரு கான் அல்லது பக்கவாய்க்கால் அல்லது யாதொருவழி, அடிபாதை, அல்லது விசாலமான இடத்தின்மேல் விளாவண்ணமாக வாளிகளில் அல்லது வேறு தகுந்த ஏனங்களில் மாத்திரம் பிரசித்த நிலக்குழாய்களிலிருந்து தண்ணீர் எடுத்துக்கொண்டுபோகவேண்டியது.

*நீர்நிலைக்குழாய்களில் யாதொரு சயக்குழாய் முதலியவைகள் தொடுக்கப்படாது.*

142. யாதொரு சயக்குழாய், குழாய்குடல் அல்லது வேறெவ்விதமான யாதொரு குத்திரங்களைச் சொற்பகாலத்திற்கு அல்லது நீடிய காலத்திற்கு பிரசித்த காரணங்களுக்கு நகராதிகார சங்கத்தாருடைய உத்தரவில்லாமல் தொடுக்கப்படாது.

*வீட்டுப் பாவிப்புக்காக என்பது எதுவென்தை அடக்கமாட்டாதென்பது.*

143. வீட்டுப் பாவிப்புக்காகக் கொடுக்கப்படும் தண்ணீர் என்பது விற்பனவுக்காக அல்லது கூலிக்காக வைத்திருக்கும் குதிரை, ஆடுமாடுகளுக்கும் கரத்தைகள் வண்டில்களைக் கழுவதற்கும் பாவிக்கப்படுந் தண்ணீரையும் யாதொரு வியாபாரம் கைத்தொழில் அல்லது முயற்சிகளை நடத்துவதற்காகப் பாவிக்கப்படுந் தண்ணீரையும் செய்நீரூற்றுகள் நீர்தொட்டிகளுக்குப் பாவிக்கப்படுந் தண்ணீரையும் வடிவக்காக அல்லது யந்திரங்களுக்குப் பாவிக்கப்படுந் தண்ணீரையும் நீர்ப்பாய்ச்சலுக்காகப் பாவிக்கப்படுந் தண்ணீரையும் அடக்கமாட்டாது.

*குடியானவர்களுடைய சொந்தப் பாவிப்புக்காக தண்ணீர்வைக்கும்படி நகரசங்கத்தார் உத்தரவுபண்ணலாம்.*

144. யாதொரு வீட்டுச்சொந்தக்காரன் அல்லது குடியிருப்பவன் கேட்டால் அந்த வீட்டுப் பாவிப்புக்கு சங்கத்தார் நீதியென்று காணுகிற அவ்வளவு தண்ணீரை அவர்கள் விதிக்கும் பொருத்தனையின்படி வைத்துக்கொடுக்க சங்கத்தார் தங்கள் யுக்தப்பிரகாரம் உத்தரவுபண்ணலாம். இப்படி உத்தரவுபண்ணுங் காலத்து நகராதிகார சங்கத்தாருடைய தாய்க்குழாயிலிருந்து தண்ணீர் கொடுக்கவேண்டிய இடத்துக்குப் பொருத்தவேண்டிய குழாயும் தண்ணீர் சாதனமாக வைக்கவேண்டிய சிறுகுழாயும் அதற்கடுத்த தளபாடங்களும் நகராதிகார பகிரங்க வேலைத்தலைவருடைய பார்வையின்கீழ் நகரசங்க வேலையாட்களால் செய்துவைத்துக் கொடுக்கப்படவேண்டியதுமல்லாமல், அதற்காக வருஞ் செலவுகள் எல்லாம் அப்படித் தண்ணீர் தரும்படி கேட்பவரால் இறுக்கப்படவேண்டியது. இப்படித் தண்ணீர் கொடுப்பதற்காக மதிக்கப்படும் செலவுகளை அந்த வேலைகள் தொடங்குமுன் முற்பணமாகக் கொடுக்கும்படி சங்கத்தார் கேட்கலாம்.

*வீட்டுக்குள் குளிக்க அல்லது கழுவச் செய்யப்பட்ட நீர் கட்டடங்கள்.*

145. வீட்டுக்குள் குளிக்கிறதற்காக கழுவுகிறதற்காக அல்லது தண்ணீர் எந்துகிறதற்காக அல்லது தண்ணீர் விழும்படிக்காகச் செய்யப்பட்ட உட்கட்டடங்கள் வெளிக்கட்டடங்களுக்குப் பிறதீங்கலாகவும் தனிமையாகவு மிருக்கவேண்டும். இன்னும் அக்கட்டடங்கள் முழுகிறதற்காக கழுவுகிறதற்காக தண்ணீர் எந்துகிறதற்காக அல்லது தண்ணீர் விழும்படிக்காகச் செய்யப்படும் உட்கட்டடங்கள் அவ்வித இடங்களுக்கு மேலாக அல்லது உயரமாக விருக்கவேண்டும்.

*நீர்க் குழாய்களைக் கடனுக்காக நடுப்படுத்தக்கூடாது.*

146. தாய்க்குழாயோடு தொடுக்கும் குழாயாவது தண்ணீர் சுரக்கும் குழாயாவது அதற்குரிய தளபாடங்களாவது எவர் ஒருவருடைய கடனுக்காகவேனும் நடுப்படுத்தக்கூடியதாகாது.

*சங்கத்தாருடைய உத்தரவின்றித் தாய்க்குழாயோடு தொடுத்து யாதொரு குழாயை வீடுகளுக்குள் வைக்கப்படாது.*

147. சங்கத்தாருடைய தாய்க்குழாயிலிருந்து யாதொரு வீட்டுக்கு அல்லது இடத்துக்குத் தண்ணீர் கொண்டுபோவதற்காக யாதொரு குழாயைத் தொடுக்கவாவது தண்ணீர் சுரக்கும் குழாயைப் பதிக்கவாவது அல்லது உள்ள தண்ணீர்க்குழாயை மாற்ற அல்லது மறுத்துவிடவாவது சங்கத்தாரிடம் எழுத்துமூலமாய்ப் பெற்ற சம்மதமின்றி ஒருவருக்குங் கூடாது. இன்னமும் இப்படிக் குழாய் வைக்கும்போது சங்கவேலைக்காரரா யல்லாமலும் அந்தக் குழாய் போகவேண்டிய இடங்களைச் சங்கத்தார் அங்கீகரியாமலும் யாதொரு வேலை நடக்கவும் கூடாது.

*நகரசங்கத்தார் நஷ்டத்துக்கு உத்தரவாதிகளல்ல.*

148. நகரசங்கத்தார் தண்ணீர் வேலைகளுக்கு வேண்டியவைகளைச் செய்திருந்தாலும் அவ்வித குழாய், அளவுயந்திரம், துவாரமடைக்கும் குமிழ், அல்லது தொடுக்கப்பட்டவைகள் வெடித்தால், அல்லது அதன் மூலமாய் தண்ணீர் அதிகமாயோடினால் அந்த நஷ்டத்துக்கு சங்கத்தார் உத்தரவாதிகளல்ல. இன்னும் சம்மதியினால் அல்லது யாதொரு செய்கையினால் பிரசித்த தெருவுகளிலிருக்கும் பிரதான குழாய்களைவிட வேறு யாதொன்றுக்கும் அவர்கள் உத்தரவாதிகளல்ல.

*கூட்டமான வீடுகளுக்கு குழாய்கள் எவ்வித மிருக்கவேண்டும்.*

149. சங்கத்தார் மற்றப்படி அனுமதிசெய்தாலன்றி தண்ணீர் கொடுக்கப்பட்டிருக்கும் அல்லது இனிமேல் கொடுக்கப்படும் ஒவ்வொரு வீடு அல்லது இடத்துக்கும் அது அதுக்குப் புறம்பான கிளைக்குழாயிருத்தல் வேண்டும். ஒரு வீட்டுக்கு ஒன்றுக்குமேற்பட்ட கிளைக்குழாய்கள் இருக்கவும்படாது. அல்லது ஒரு வீட்டுக்குழாய் மற்றொரு வீட்டுக்கு குழாயோடு தொடுத்திருக்கவும் படாது.

*உத்தரவின்றி வைக்கப்பட்ட குழாய்களை எடுத்துப்போடும்படி கட்டளைபண்ணவும் செலவுகளை அறவிடவும் சங்கத்தாருக்கு அதிகாரமுண்டு.*

150. மேற்கண்ட பிரமாணங்களுக்கு மாறாக யாதொரு கிளைக்குழாயை அல்லது நீர்சுரக்கும் குழாயை எவரேனும் மாற்ற அல்லது நீட்ட அல்லது வைக்கச்சம்பவித்தால், அப்படிப்பட்ட குழாய்களை எடுத்துவிடும்படி கட்டளைபண்ண சங்கத்தாருக்கு அதிகாரமுண்டு. அப்படிச்செய்யும்படி கட்டளைபண்ண மூன்று நாளைக்குள் அந்தக் கட்டளை பண்ணப்பட்டவர் அதை எடுக்கத் தவறினால் சங்கத்தார் அதை எடுப்பித்து அதனால் வந்த செலவுகளை 1887 ம் ஆண்டின் நகராதிகாரக் கட்டளைச்சட்டத்தின் 281 ம் 282 ம் பிரிவுகளிற் சொல்லிய பிரகாரம் அக்கட்டளைச்சட்டத்தால் இறுக்கும்படி நியமிக்கப்பட்ட செலவுகளைப்போல அறிந்து தீர்மானித்து அந்தாளிடத்தில் அறவிடவேண்டியது.

*குழாய்களைத் தொடுத்தல்.*

151. சங்கத்தாரால் கொடுக்கப்படும் தண்ணீரைக் கொண்டுபோவதற்காகப் பாவிக்கப்படுகிற அல்லது அந்தத் தண்ணீரோடு சம்பந்தப்படுத்த வைத்திருக்கிற யாதொரு குழாய் மழைத் தண்ணீருக்காகப் பாவிக்கப்படும் யாதொரு தொட்டி வாளி அல்லது எவ்வகையான நீர்நிலையோடும் தொடுத்திருக்கப்படாது.

*கேணிகளுக்கு உருண்டையான மூடிகளிருக்க வேண்டும்.*

152. கட்டடங்களிலிருந்து வருகிற தண்ணீர் விழும் ஒவ்வொரு கேணிகளுக்கும் அங்கீகரிக்கப்பட்ட மாதிரியான சமநிறையுள்ள உருண்டையான மூடிகள் இருக்கவேண்டும். இன்னும் இவ்வுருண்டையான மூடி கேணியின் நீர்மட்டம் ஒன்றிருந்தால் அதன் வாய் அல்லது நீர் வடியும் மட்டத்துக்கு கீழ் இரண்டங்குலமாக இருக்கச் சம்பவித்தால் தண்ணீர் வருதலை நிறுத்தும்படி ஒழுங்குபடுத்த வேண்டும்.

*உட்கட்டிடக் குழாய்.*

ஒவ்வொரு கேணிக்குந் தண்ணீர் கொடுக்கிற உட்கட்டிடக் குழாய் அல்லது நிரப்புக்குழாய் அவ்வித கேணிகளின் நீர்மட்டத்துக்கு உயரமாகக் கட்டப்படவேண்டும்.

*தண்ணீர் வடிவு மட்டத்திலிருந்து செல்லுங்குழாய்.*

சகல கேணிகளின் தண்ணீர் வடிவு மட்டக்குழாய்கள் கட்டடங்களுக்கு வெளியாகக் கொண்டுவரப்பட வேண்டுவதுமல்லாமல், யாதொரு பொசிதலை லெகுவாகக் கண்டுபிடிக்கக்கூடிய தோற்றமான இடங்களில் முடிய வேண்டியது.

யாதொரு கேணியிலிருந்து புறப்படுகிற தண்ணீர் வடிவு மட்டக்குழாய்கள் யாதொரு கான் அல்லது கட்டுக்கான் உடன் அல்லது குளிக்கிறதற்காக அல்லது தண்ணீர் விழுகிறதற்காக அல்லது சவுக்கியத்தின் நிமித்தம் செய்யப்பட்ட வேறு யாதொரு கட்டடங்களின் கழிவு குழாயுடன் அல்லது வேறு யாதொரு கேணியிலிருந்து புறப்படுகிற தண்ணீர் வடிவு மட்டக்குழாய் உடன் தொடுக்கப்படாது. ஒவ்வொரு கேணிகளுக்கும் பிறதீங்கலான தண்ணீர் வடிவு மட்டக் குழாயிருக்க வேண்டும்.

*வெளிக்கட்டடக் குழாய்.*

153. தண்ணீர்க் குழாய்த் துவாரக்குமிழிலிருந்து வருகிற வெளி நீர்க்கட்டடம் ஒவ்வொன்றும் பொசிதலை லெகுவாகக் கண்டுபிடிக்கக்கூடிய வெளியான அல்லது தோற்றமான இடங்களில் இருக்கவேண்டும். யாதொரு காரணத்தின் நிமித்தம் வெளிக்கட்டடம் குமிழிலிருந்து வருகிற தண்ணீர் விழும் கேணிகள் அல்லது குழங்கள் அல்லது வேறு இடங்களின் உயர்ந்த தண்ணீர் மட்டத்துக்குக்கீழாக இருக்கக்கூடாது.

*நிலத்திற் செய்யப்படு தொட்டிகள் தண்ணீரை விட்டுவைக்கப் பாவிக்கப்படாது.*

154. நிலத்திலே பதிக்கப்பட்ட அல்லது வெட்டப்பட்ட யாதொரு தொட்டி சங்கத்தாரால் எழுத்து மூலமாக அனுமதிசெய்யப்பட்டாலன்றி சங்கத்தார் கொடுக்கும் தண்ணீரை விட்டுவைத்தற்காகப் பாவிக்கப்படாது.

*தண்ணீரை விட்டு வைக்கும் ஏனங்கள்.*

155. மரத்தால் செய்யப்பட்ட யாதொரு தொட்டி லோகவகையால் மூடப்பட்டிருந்தாலன்றி சங்கத்தார் கொடுக்குந் தண்ணீரை விடுவதற்காகப் பாவிக்கப்படாது.

*தண்ணீரை வீணாகச் செலவிடுதல்.*

156. ஒரு வீட்டில் குடியிருப்பவர் எவரும் அந்த வீட்டில் வைக்கப்பட்டிருக்கும் தொட்டி குழாய் அல்லது துவாரத்தின் வழியாகத் தண்ணீர் வீணாகப் போகவிடப்படாது. யாதொரு வீட்டில் அல்லது இடத்தில் உள்ள கிளைக்குழாய் தண்ணீர் சுரக்கும் குழாய், தொட்டி, துவாரம் அல்லது வேறு கருவியிலிருந்து தண்ணீர் ஒழுகிப் போவதுண்டானால் அந்த வீட்டின் அல்லது இடத்தின் சொந்தக்காரன் அல்லது குடியிருப்பவன் 24 மணித்தியாலத்துக்குள் அதைச் சங்கத்தாருக்கு அறிவிக்க வேண்டியது.

*தண்ணீர்ச் சரியீனமாகப் பாவிக்கப்பட்டால் அளவுயந்திரம் வைக்கவேண்டியது.*

157. யாதொரு வீட்டில் அல்லது இடத்தில் சங்கத்தாருடைய நீர்க்கட்டடங்களிலிருந்து வரும் தண்ணீர் அந்த வீட்டில் உள்ளவர்களல்லாத வேறுபேரால் பாவிக்கப்படுகிறதென்றுவது, வீட்டுப்பாவனைக்கல்லாத மறுகாரணங்களுக்காகப் படுகிறதென்றுவது, வீணாகப் போக்கப்படுகிறதென்றுவது, அல்லது ஒழுங்கீனமாய்ச் செலவிடப்படுகிறதென்றுவது, சங்கத்தார் நம்புவதற்கு இடம் இருந்தால் அந்த வீட்டில் அல்லது இடத்தில் வைக்கப்பட்டிருக்கும் குழாயில் ஒரு அளவு யந்திரத்தை வைப்பது சங்கத்துக்கு நியாயமாகும். அந்த வீட்டுத் தண்ணீர் வரிக்கு ரூபாவுக்கு இரண்டாயிரம் கலனுக்கு மேற்படச் செலவானதென்று அந்த யந்திரத்தைக்கொண்டு அறியப்படுமாயின், அப்படி மேற்படச் செலவாகும் தண்ணீருக்கு அந்தவீட்டுச் சொந்தக்காரன் அல்லது குடியிருப்பவன் ஒவ்வொரு ஆயிரம் கலனுக்கு ஒரு ரூபா வீதம் பணம் கொடுக்கவேண்டியது.

*தண்ணீர் பொருத்தனையுடன் கொடுக்கலாம்.*

சங்கத்தார் சரியென்று காணுகிற பொருத்தப்படியும் விதப்படியும் வீட்டுப்பாவிப்பல்லாத வேறு தேவைக்கு எவர் ஒருவருக்கும் தண்ணீர் கொடுக்க இத்தோடு சேர்க்கப்பட்டிருக்கும் அட்டவணையில் L. அட்சரமிடப்பட்ட மாதிரியில் சங்கத்தவரோடு பொருத்தனை செய்துகொள்வது சங்கத்தாருக்கு நீதியாகும்.

*சங்கத்தார் அளவு யந்திரங்களைக் கொடுக்கவேண்டியது.*

158. சங்கத்தார் அளவுயந்திரங்களைக் கொடுத்து அவைகளைப் பதிப்பிக்கவேண்டியது. சங்கத்தார் நீதியென்று காணுகிற வாடகையை அந்த அளவு யந்திரத்துக்காக அறவிட்டுக்கொள்ளலாம்.

*வருமதியான தொகைகளை எப்படி அறவிடவேண்டும்.*

159. முன்சொல்லிய இரண்டு துணைச்சட்டங்களுக்கு கீழாக அறவிடப்படவேண்டிய தொகைகள் 1881 ம் ஆண்டின் நகராதிகார சங்கத்தாரின் கட்டளைச்சட்டத்தின் 281 ம், 282 ம் பிரிவுகளிற் சொல்லிய பிரகாரம் அவ்வித கட்டளைச்சட்டத்தினால் அவ்வித தொகை கொடுக்கப்படும்படி கற்பிக்கப்பட்டதாக அறவிடப்பட வேண்டும்.

*அளவுயந்திரத்தைப் பாவிக்கிறதற்கு வாடகை.*

160. மூன்று மாதத்துக்கு ஒருமுறை முற்பணமாக மூன்று மாதத்திற்கு அல்லது மூன்று மாதத்தின் யாதொரு பகுதிக்கு அளவுயந்திரத்தைப் பாவிக்கும்படி இதன்கீழ்க் கண்டிருக்கிற வாடகை நகரசங்கத்தாருக்குக் கொடுக்கப்பட வேண்டும். அவ்வித மூன்று மாதத்தின் கெடுவை தைமாதம் முதற் தேதியிலும் சித்திரைமாதம் முதற்தேதியிலும் ஆடிமாதம் முதற் தேதியிலும் ஐப்பசி மாதம் முதற் தேதியிலும் தொடங்குகிறதென்று எண்ணப்படல் வேண்டும்.—

| கெடு அல்லது பகுதி. | | | அளவுயந்திர அங்குலம். | | | தொகை. ரூ. | ச. |
|---|---|---|---|---|---|---|---|
| 3 மாதம் | ... | ... | 3 | ... | ... | 35 | 0 |
| ” | ... | ... | 2 | ... | ... | 20 | 0 |
| ” | ... | ... | $1\frac{1}{2}$ | ... | ... | 15 | 0 |
| ” | ... | ... | 1 | ... | ... | 7 | 0 |
| ” | ... | ... | $\frac{3}{4}$ | ... | ... | 5 | 75 |
| ” | ... | ... | $\frac{1}{2}$ | ... | ... | 4 | 40 |
| ” | ... | ... | $\frac{3}{8}$ | ... | ... | 3 | 0 |

*மாதத்திற்கு ஒருமுறை அளவுயந்திரக் கணக்கெடுத்தல் வேண்டும்.*

161. ஒவ்வொரு மாதத்துக்கு ஒருமுறை அளவுயந்திரக் கணக்கெடுத்தல் வேண்டும். ஒரு அளவுயந்திரக் கணக்கெடுத்த பொழுது M. என்னும் அடையாளம் இடப்பட்ட மாதிரியில் குறிப்பெழுதி தண்ணீர் கொடுக்கிற இடங்களில் “வீட்டில் வாசம்பண்ணுபவன்” என்ற மேல் விலாசமிட்டுக்கொடுக்க வேண்டியது.

*அளவுயந்திரம் பழுதுபட்டிருந்தால்.*

162. அளவுயந்திரம் பழுதுபட்டிருக்குதென்று கண்டால் அல்லது பழுதுபார்க்கும்படி அல்லது மாற்றும்படி எடுத்துக்கொண்டுபோனால் இதைப்பற்றிய ஒரு குறிப்பு 30 ம் பிரிவில் சொல்லப்பட்ட குறிப்பில் எழுதவேண்டும். ஒரு புது அளவுயந்திரம் வைக்கும்போது அல்லது பழைய அளவுயந்திரத்தைத் திரும்ப வைக்கும்போது ஒரு இரண்டாங் குறிப்பு எழுதித் தண்ணீர் கொடுக்கிற இடங்களில் கொடுக்கவேண்டும்.

*அளவுயந்திரம் பழுதுபட்டிருந்தால் சுமட்டுமேனி கணக்கெடுக்கவேண்டும்.*

அளவுயந்திரம் பழுதுபட்டிருக்கும்போது தற்காலத்திற் செலவழியும் கணக்கு அல்லது அளவுயந்திரமில்லாமல் தண்ணீர் கொடுக்கும் கணக்கு அளவுயந்திரம் பழுதில்லாமலிருக்கும்போது இரண்டுமுறை கணக்கெடுத்த தவணையில் நாள்தோறும் செலவழித்த சுமட்டுமேனிப்படி கணக்கெடுக்க வேண்டியது.

*செலவழிந்த தண்ணீரின் பெறுமதி.*

163. முன்சொல்லிய சட்டங்களுக்கேற்க மூன்று மாதத்துக்குச் செலவழித்த தண்ணீரின் பெறுமதியை அறிந்து கணக்கு இட்டுக்கொள்ளவேண்டும்.

164. சென்ற மூன்று மாதக்கெடுவில் செலவழிந்த தண்ணீருக்கு இறுக்கவேண்டிய தொகையின் கணக்கு மூன்று மாதத்திற்கு ஒருமுறை கொடுக்க வேண்டியது.

அந்தக் கணக்கு அட்டவணையில் N. என்னும் அடையாளம் இடப்பட்ட மாதிரியில் இருக்கவேண்டியதுமல்லாமல், அவ்வித கணக்குக் கொடுத்த பதினைந்து நாளைக்குள் சரிவர அந்தத் தொகையைச் சங்கத்தாருக்கு இறுக்கவேண்டியது.

*பதினைந்து நாளைக்குள் பணம் இறுக்கவேண்டும்.*

165. அளவுயந்திரம் வைத்த சகல சமையங்களிலும் மூன்று மாதத்திற்கு ஒருமுறை முற்பணமாக அவ்வித அளவுயந்திரத்தின் வாடகைக்கணக்கு கொடுபடவேண்டியது. அக்கணக்கு அட்டவணையில் C. என்னும் அடையாள மிட்டப்பட்ட மாதிரியில் இறுக்கவேண்டியதுமல்லாமல், அதற்கு இறுக்கவேண்டிய தொகையை அவ்விதக் கணக்குக் கொடுத்த பதினைந்து நாளைக்குள் முழுதும் பணமாக நகரசங்கத்துக்கு இறுக்கவேண்டும்.

*சங்கத்தார் பரிசோதனை முதலியவற்றிற்காக அளவுயந்திரத்தை எடுக்கலாம்.*

166. சங்கத்தார் அளவுயந்திரங்களைச் சரிபார்ப்பதற்காக அல்லது சோதிப்பதற்காக அல்லது பழுதுபார்க்க அல்லது பதல்வைக்க அல்லது வீடுகளுக்குத் தண்ணீர் கொடுப்பதை நிறுத்த யாதொரு அளவுயந்திரத்தை எடுத்துப்போடலாம்.

*சங்கவேலைக்காரரே அளவுயந்திரங்களைப் பழுதுபார்க்கவேண்டியது.*

167. அளவுயந்திரங்களை சங்கத்து வேலைக்காரரால் அல்லது அவர்களுடைய கட்டளையின்றி மாற்றவாவது பழுதுபார்க்கவாவது கூடாது. வேணுமென்று அல்லது அசண்டையால் உண்டுபட்டவைகளைத்தவிர மற்ற எல்லாப்பழுதுகளும் செலவில்லாமல் சங்கத்தாராலே பார்த்துக்கொடுக்கப்படும். வேணுமென்று அல்லது அசண்டையினால் உண்டுபண்ணிய பழுதுகளைச் செவ்வைப்படுத்த அல்லது புதுப்பிக்க தண்ணீர் கொடுக்கப்படும் வீட்டுச்சொந்தக்காரன் அல்லது வீட்டில் இருப்பவன் சங்கத்தார் கட்டளைபண்ணும் பிரகாரம் செலவுகொடுக்க வேண்டும்.

*சங்கத்தார் தண்ணீர் வரவைத் தடுக்கலாம்.*

168. சங்கத்தார் அவசியமென்று காணுகிற மணித்தியாலங்களுக்கிடையில் தண்ணீர் வரவை நிறுத்த அல்லது வெட்டிவிடலாம்.

*தடுத்தற்குரிய காரணமாய் தண்ணீர் ஒழியுமாயின் சங்கத்தார் உத்தரவாதிகளல்ல.*

169. யாதொரு தற்செயல் காரணமாக அல்லது விசேஷ மழையின்மைகாரணமாக ஆவது அல்லது தடுத்தற்குரிய பிற ஏதுக்கள் காரணமாக தண்ணீரில்லாமல்போனால் நகராதிகார எல்லைக்குள் தண்ணீர் கொடுக்கத் தவறியதற்காக யாதொரு குற்றத்துக்கு அல்லது நட்டத்துக்கு சங்கத்தார் உளராகமாட்டார்கள்.

*தங்களுக்கென்று புறம்பான தண்ணீர்க்குழாய் வைப்பித்திருக்கும் வீட்டுக்காரர் முதலியவர்கள் மற்றவர்களுக்குத் தண்ணீர் கொடுக்கப்படாது.*

170. தண்ணீர் வைத்துக்கொடுக்கப்பட்டிருக்கிற யாதொரு வீட்டின் அல்லது இடத்தின் சொந்தக்காரர் அல்லது குடியிருப்பவர் வேறு ஒருவருக்கும் தண்ணீர் கொடுக்கவும்படாது, அல்லது அந்த வீட்டின் உள்ள குழாய் அல்லது தொட்டியிலிருந்து மறுபேரைத் தண்ணீர் எடுக்க உடன்படவும்படாது; ஆனால் நெருப்புப்பற்றிய காலங்களில் அந்த நெருப்பை அவிக்கவும் தண்ணீர் வைத்துக்கொடுக்கப்பட்டிருக்கிற பின்னொரு வீட்டுக்காரனுடைய குழாய்கள் அவனுடைய குற்றம் இல்லாமல் பழுதுபட்டிருந்தால் அவனுடைய பாவிப்புக்குத் தண்ணீர் கொடுக்கலாம்.

*தண்ணீரை அபாவனை பண்ணுவது குற்றம்.*

171. வீட்டுப்பாவிப்புக்காக வல்லாமல் வேறொரு நோக்கத்துக்காகவும் தண்ணீர் கொடுக்கப்படாத எவரும் சங்கத்தின் தண்ணீரை வீட்டுப்பாவிப்புக்கேயன்றி வேறொன்றுக்கும் பாவிக்கப்படாது.

*தண்ணீர் வைத்துக் கொடுக்கப்பட்டிருக்கும் வீடுகளுட் புகுந்து சோதனை செய்யும்படி சங்கத்தார் அதிகாரங் கொடுக்கலாம்.*

172. சங்கத்தாரால் எழுத்து மூலமாக அதிகாரம் கொடுக்கப்பட்டவர் எவரும் காலமே எட்டு மணிக்கும் சாயந்தரம் ஐந்து மணிக்கும் இடையில் யாதொரு வீட்டில் அல்லது இடத்தில் வைக்கப்பட்டிருக்கும் தண்ணீர் குழாய்கள், வேலைகள், தளபாடங்களைச் சோதிப்பதற்கும் தண்ணீரை அபாவனைபண்ணப்படுகிறதோ அல்லது வீணகச் செல்விடப்படுகிறதோ என்பதை அறிவதற்காக அந்த வீட்டுக்காரருக்கு அல்லது குடியிருப்பவருக்கு 1 மணித்தியாலம் அறிவித்தல் கொடுத்து அந்த வீட்டின் உள்ளே பிரவேசிக்கலாம். அப்படிப் பிரவேசிப்பவரைப் போதிய நியாயமின்றி உள்ளே விடாது தடுத்தால் அல்லது அவர் சோதனைசெய்வதற்கு அல்லது வீணகச் செலவாகும் தண்ணீரைத் தடுப்பதற்குப் போகும்போது அவரை அப்படிச் செய்யவிடாது மறித்தால் அந்த வீட்டுக்கு அல்லது இடத்துக்குக் கொடுக்கப்பட்டிருக்கும் தண்ணீரைச் சங்கத்தார் நிறுத்திவிடலாம்.

*பிரமாணங்களை மீறும் குற்றத்துக்காகத் தண்ணீரைக் கொடாது நிறுத்திவிடலாம்.*

173. தண்ணீர் வைத்துக்கொடுபட்டிருக்கிற யாதொரு வீடுடையவர் அல்லது குடியிருப்பவர் தண்ணீர் வரியைக் கொடாமல் அல்லது கொடுபடவேண்டிய தேதி தொடக்கம் பதினைந்து தினம்வரைக்கும் தவறினால் அல்லது அவர்கள் இந்த அதிகாரத்திற் சொல்லிய பிரமாணங்களுக்கு மாறாக யாதொன்றைச் செய்தால், அல்லது செய்வித்தால், அல்லது செய்ய இடங்கொடுத்தால், அல்லது தண்ணீரை வீண்போகாமல், அல்லது அபாவனைபண்ணுமல், அல்லது அளவுக்கு மிஞ்ச எடாமல், அல்லது அழுக்குப்படவிடாமல் தடுப்பதற்கு வேண்டிய உபாயங்களை வேறுமென்று செய்யாமல் விட்டால், அந்த வீடு அல்லது கட்டடத்துக்கு கொடுக்கப்பட்ட தண்ணீரைச் சங்கத்தார் நிறுத்திவிடலாம்.

*சங்கத்தலைவரால் அதிகாரம்பண்ணப்பட்டவர்கள் உள்ளே புகுந்து தண்ணீர்க்குழாய் முதலியவற்றை வெட்டிவிடலாம்.*

174. யாதொரு கட்டடம் அல்லது இடத்திற்குக் கொடுக்கப்படும் தண்ணீரை நிறுத்தும்படியும் குழாய்களை எடுக்கும்படியும் இந்த அதிகாரத்தால் சங்கத்தாருக்கு அதிகாரம் கொடுக்கப்பட்டுள்ள சகல வேலைகளிலும் தண்ணீர் கொடுக்கப்பட்ட வீட்டில் குடி இல்லாமற்போகுந் தருணங்களிலும் சங்கத்தாரால் அதிகாரம்பெற்றவர் எவரும் அவருடைய வேலைகாரரும் சொந்தக்காரர் யாருமிருந்தால் அவருக்கு அல்லது குடியிருப்பவருக்கு 6 மணித்தியால அறிவித்தல் கொடுத்து காலமே 8 மணிக்கும் பின்னேரம் 5 மணிக்கும் இடையில் அந்த இடங்களிற் புகுந்து சங்கத்தாருடைய தாய்க்குழாயில் தொடுத்து அந்த அந்த இடங்களுக்கு வைக்கப்பட்டிருக்கும் கிளைக் குழாய்களை வெட்டவும் சங்கத்தார் எடுத்துக்கொண்டுபோக உரித்துள்ள குழாய் அளவுபத்திரம் அல்லது தளபாடங்களை எடுத்துக்கொண்டுபோகவும் உரித்துண்டு.

*சொற் பொருள் விளக்கம்.*

175. இந்த அதிகாரத்தில் பாவிக்கப்படும் இடங்களில் தாய் குழல் என்பது நகராதி சங்கத்தாரது நீர்க்கட்டடமாகிய தடாகத்திலிருந்து கண்டிப் பட்டணத்துக்கு தண்ணீர் கொண்டுபோகும் குழாயையும் அதன் கிளைகளையும் கருதும், "கிளைக்குழாய்" என்பது தாய்க்குழாயில் இருந்து யாதொரு கட்டடம் அல்லது இடத்துக்கு தண்ணீர் போகும் வாசலில் அல்லது அதற்குச் சரியாக வைத்திருக்கும் தடைப்பெட்டிக்கு வைத்திருக்கும் குழாயைக் கருதும், "நீர்சுரக்கும் குழாய்" என்பது தடைப்பெட்டியிலிருந்து யாதொரு கட்டடம் அல்லது இடத்துக்குப்போகும் குழாயையும் அதன் கிளைகளையும் கருதும்.

---

## 13 ம் அதிகாரம்.

### தொந்தரவுகளைத் தடுப்பதும் ஊர் பாதுகாப்பின் வசதிகளைப்பற்றி.

*கக்கூசு மலங்களை அகற்றும் மாதிரி.*

176. எழுத்தின் மூலம் நகரவிசாரணை எல்லைக்குள்ளிருக்கும் கட்டடங்கள், அடைப்புகள், தோட்டங்கள், வீடுகளை உடைய சொந்தக்காரர் ஆட்சிபண்ணுகிறவர்களை தங்கள் கக்கூசை அல்லது குளியை சலமலங்களிருக்கு மிடத்தை அல்லது அந்த வீட்டுக்குச்சேர்ந்த அந்தப் பாவிளையுள்ள கட்டடங்கள், அடைப்புகள், தோட்டங்கள், நொத்திசில் காட்டியபடி குறிக்கப்பட்ட நேரத்துக்குள் கொண்டுபோகக் கேட்கவேண்டியது. எந்த நேரமும் சபாநாயகருக்குக் கேட்பது நீதியாயிருக்கும். நொத்திசுகொடுத்த மூன்று நாளைக்குள் அப்படிப்பட்ட சொந்தக்காறன் அல்லது ஆட்சிபண்ணுகிறவன் கேட்ட கேள்விக்கு இசையாவிட்டால் சபாநாயகர் அந்த வேலைகளைச் செய்து முடிப்பிக்க வேண்டும். அந்த வேலைக்குத் தேவையானபடி வேலைக்காறர், ஆயுதங்கள், காரியங்களோடு வீடு, பிறவீடு, கட்டடங்கள், அடைப்புகள், தோட்டங்களுக்குட்செல்ல அதிகாரமுண்டு. சொந்தக்காறன் அல்லது ஆட்சிபண்ணுகிறவன் செலவுகொடுக்கவேணும். அந்தத் தொகை இன்ன கட்டளைச்சட்டத்தினுல் விதிக்கப்பட்ட தென்பதை அறியும்பொருட்டு 1887 ம் ஆண்டு நகரவிசாரணைச் சங்கத்தின் 281 ம், 282 ம் பிரிவில் காட்டப்பட்டபடி விசாரித்து தீர்மானித்து அறவுபண்ணப்படும்.

*சொந்தக்கரன் வக்கையும் மண்ணையுங் கொடுக்கவேணும்.*

177. காய்ந்ததரைக் கக்கூசையுடைய சொந்தக்காறன் அந்தக் கக்கூசுக்கு வேண்டிய மண் வைக்கத்தக்கதாக தகுந்தவித வக்குக் கட்டுப்பட வேணும். போதியளவு காய்ந்த மண்ணை அல்லது அள்ளியக்கூடிய பதார்த்தத்தை உடைய சாமானை சேகரித்துவைக்கும்பொருட்டு கட்டப்பட்ட வக்குக் கொண்டுபோகத்தக்கதாகப் பிறம்பாக ஒரு வக்குக் கட்டவேணும்.

*சொந்தக்காறன் கக்கூசையும் வக்கையும் நல்ல நிலைபரத்தில் வைக்கவேணும்.*

178. காய்ந்ததரைக் கக்கூசையுடைய ஒவ்வொரு சொந்தக்காறனும் இரவில் எடுக்கப்பட்டு வக்கில் வைக்கப்படும் மலங்களை எப்பொழுதும் நல்ல நிலைபரத்திலும் சுகத்துக்கேற்ற மாதிரியிலும் வைக்கவேணும்.

*குத்தகைக்காறன் காய்ந்த மண் கொடுக்கவேணும்.*

179. ஒவ்வொரு தோட்டத்து குத்தகைக்காறனும் அல்லது ஆட்சிபண்ணுபவனும் காய்ந்த மண் கக்கூசை உடைய சொந்தக்காறனும் அல்லது குத்தகைக்காறனும் போதிய ஆயுதங்களோடு போதிய காய்ந்த மண் வைத்திருக்கவேணும்.

*ஆட்சிபண்ணுகிறவன் நாற்றமகற்றும் தூளைப்போடவேண்டும்.*

180. குத்தகைக்காறன் அல்லது ஆட்சிபண்ணுபவன் ஒழுக்கமான வழியிருக்கும்வேளை கெல்த் ஒப்பிசர் அவசியமென்று கண்டு செய்யும்படி கட்டளையிட்டால் வாளி பாவிக்கும் கக்கூசுக்குப் போதியளவு நாற்றம் தணிக்கும் தூளை தகுந்த பாத்திரத்தில் வைக்கும்படி கட்டளைபண்ணவேண்டும்.

*சொந்தக்காறன் அல்லது குத்தகைக்காறன் காய்ந்த மணலைப்போடவேணும்.*

181. ஒவ்வொரு ஒழுங்கை குத்தகைக்காறன் அல்லது சொந்தக்காறன் தோட்டத்திலுள்ள ஒவ்வொரு கக்கூசிலும் பலமுறையும் பூரணமாக மணலையும் தொற்று வியாதியை மாற்றும் தூள்களையும் பாவிக்க வேண்டும்.

*சொந்தக்காறன் வாளிகள் கொடுக்கவேணும்.*

182. வாளிபாவிக்கும் கக்கூசுள்ள ஒவ்வொரு வீட்டுக்காறனும் 12 வாவியர்க்கு அல்லது ஆட்சிபண்ணுபவர்க்கு 12 வாளிகளைக் கொடுக்கவேணும். 10 வயதுக்குட்பட்ட 2 பிள்ளைகளை ஒரு முழு ஆளாய்க் கவனிக்கலாம். சொல்லப்பட்ட வாளிகளை நல்லநிலைபரத்தில் வைக்கவேண்டும்.

*வீட்டுக்கு நூறு அடியுக்குள் கக்கூசு மலத்தைப் புதைக்கத் தடைபண்ணப்படுகிறது.*

183. எந்த ஆளும் கக்கூசு மலத்தை வீட்டுக்குள் கட்டிடத்துக்குள் அல்லது தோட்டம் தரவுகளுள் அல்லது நூறு அடிக்குள்ளிருக்கும் வீடு கிணறு ஆகியவைகளுக்குள் அடக்க அல்லது புதைக்கச் சம்மதித்தால் ஒரு குற்றத்துக்குட்படவேண்டும். நோட்டீசு கிடைத்தவுடன் கையில் அந்த மலத்தை சபாநாயகர் கட்டளைபண்ணும் இடத்துக்கு குறிக்கப்பட்ட நேரத்துக்குள் கொண்டுபோக வேணும். சொல்லப்பட்ட நேரத்துக்குள் செய்யத்தவறினால், சபாநாயகரும், மற்றும் உத்தியோகஸ்தர்களும், அல்லது அவரால் கட்டளைபண்ணப்பட்டுவரும் வேலையாட்களும் அந்த வீடு அல்லது கட்டிடம் தோட்டம் தரவுக்குட்சென்று செய்யவேண்டிய வேலையைச் செய்யலாம், செய்யத் தவறினால் செலவு கொடுக்கவேண்டிவரும், கட்டளைச்சட்டம் எவ்விதமாய்க் கொடுக்கத் தீர்மானிக்கிறதோ அந்தப் பிரகாரம் 1887 ம் ஆண்டின் நகரவிசாரணைச் சங்கத்தின் 281 ம், 282 ம் பிரிவில் காட்டியபடி அறவுபண்ணப்படும்.

*சொந்தக்காறரும் ஆட்சிபண்ணுகிறவர்களும் உத்தரவு பெற்றிருக்கிறவர்களை மாத்திரம் வேலைக்கு வைக்கவேணும்.*

184. தானுகப் பிறப்படுத்த விரும்புகிறவனும் அல்லது நகரவிசாரணை எல்லைக்குட்பட்டிருக்கிற சொந்தக்காறனும் அல்லது இந்த அதிகார 1 ம் துணைச்சட்டத்திற் காட்டியபடி சொல்லப்பட்ட வீடு நிலங்களின் கக்கூசு மலங்களைக் கொண்டுபோக விரும்புகிறவனும் வேலையைச் செய்து முடிக்க எண்ணுகிற நாளை அல்லது மணித்தியாலத்தைப்பற்றி சபாநாயகருக்கு முன் அறிவித்தல் கொடுக்கவேண்டும். அதின் பிரகாரம் சபாநாயகர் நகரவிசாரணை ஒப்பிசர் மேற்பார்வைக்குக்கீழ் அவ்வித சொந்தக்காறன் அல்லது ஆட்சிபண்ணுபவனுக்கு வேலைசெய்யும்படிக்கு உத்தரவு கொடுப்பார். சபாநாயகரால் உத்தரவுகொடுக்கப்பட்ட ஆளினாலன்றி மற்றவர்களைக்கொண்டு சொந்தக்காறன் வேலைசெய்விக்கக் கூடாது.

*இராமலங்களை நாள்விதம் எடுத்துப் போடவேணும்.*

185. வீடு கட்டிடம் நிலம் அல்லது நிலையான இடம் இந்தத் துணைச்சட்டத்தின் நடைபெறுதலிலிருந்து எழுத்தில் சபாநாயகரால் விலத்தப்பட்டாலன்றி, நகரவிசாரணை சங்கவித மதிப்பின்படி ஒவ்வொரு வீட்டின் கட்டிடத்தில் நிலத்தில் அல்லது தரவில் இல்லாமல் அழுக்குகளை அப்படிப்பட்ட வீடு கட்டிடங்கள் நிலங்கள் தரவிலிருந்து நாளுக்குநாள் ஒருமுறையாகுதல் கட்டுப்பாடு பண்ணின ஆளினால் எடுபடவேண்டியது. அப்படிக் கட்டுப்பாடுபண்ணின ஆள் பிறம்பான ஒத்த கைச்சீட்டுடன் ஒரு வீட்டுக்காறனுக்கு மேலாக அதில் ஆட்களை ஆட்சிபண்ணவிட்டால், அந்த வீட்டுச் சொந்தக்காறன் 1887 ம் ஆண்டின் 7 ம் இலக்கக் கட்டளைச்சட்டத்தின் பிரகாரம் இருக்கவேண்டும். சொந்தக்காறனுக்கும் ஆட்சிபண்ணுகிறவனுக்கும் இடையில் சச்சரவுவந்தால் சபாநாயகர் பார்த்துத் தீர்க்கவேண்டியது.

*நகரவிசாரணை சங்கத்தின் உத்தியோகஸ்தர் வேலை கொள்ளப்படவேண்டியது.*

186. 4 ம் அதிகாரத்தில் கொடுக்கப்பட்டு அந்தக் கூட்டத்தின் சபாநாயகரினால் அதிகாரம் பெற்ற உத்தரவை உடையவன் ஆராயிருந்தாலுஞ்சரி தோட்டங்களுக்குள்ளிருந்து அகற்றும் மகாந்தரத்துக்காக ஒருவனை வேலையில் ஏற்படுத்தினால் அவன் தனது பேரையும் மேல்விலாசத்தையும் அவனுடைய உத்தியோகஸ்தனின் வேலைகொள்ளப்பட்டவனின் பேரை கையுடனே சபாநாயகருக்கு எழுத்தில் கொடுப்பதுமன்றி, தோட்டங்களுக்குள் அப்படிப்பட்ட உத்தியோகஸ்தன் எல்லா மலத்தையும் ஒரு வாளியில் அல்லது அதற்குமேற்பட்ட வாளிகளா லகற்றிப்போட வேண்டியது.

*அளவுவாளிகளின் கணக்கு.*

187. ஒவ்வொரு அளவு வாளிகளும் மின்சாரந்தகட்டு இரும்பினால் பாரத்துக்குப் பத்து றாத்தலுக்கு மேற்படாமல் பின்னால் சொல்லப்படும் அளவின்படி அதாவது உயரத்தில் 16 இஞ்சும் வாய் அகலத்தில் 12 இஞ்சும் அகலத்தில் 9 இஞ்சுமாய் உண்டாக்கப்பட்டிருக்கவேண்டியது.

*மலத்தை அகற்றுகிறதற்குக் கொடுக்குஞ் சம்பளம்.*

188. அப்பெயர்ப்பட்ட ஒவ்வொருவனும் நகரவிசாரணை உத்தியோகஸ்தனும் மலத்தை அகற்றுகிறதில் வேலைகொள்ளப்படுவானுகில், அக்கூட்டத்திற்கு சபாநாயகரினால் ஒரு தொகையை முற்பணமாய் வருஷத்துக்கு 2 ரூபாய்க்கு மேற்படக் கூடாது. அப்படிப்பட்ட உத்தியோகஸ்தரினால் தோட்டங்களின் மலத்தை அகற்றிவைக்கும்பொருட்டு ஒவ்வொரு அளவுவாளிகளுங் கொடுக்கப்படும். கொடுக்கவேண்டிய தொகையை அந்த மாதத்தின் 10 ம் திகதியன்று அல்லது அதற்குமுன் கொடுக்கப்படாதிருந்தால், சபாநாயகர் பொலீஸ் மஸ்திருத்துக்கு றிப்போட்டுப்பண்ணி அவ்வாளியைப் பிறம்பாய் எடுப்பதுமன்றி பொலீஸ் நீதவானால் தெண்டமும் இறுக்கும்படி பண்ணப்படும்.

*உத்தரவுபெற்ற அழுக்குவாரி அல்லது இராமலம் அள்ளுவோன்.*

189. நகரக்கோட்டின் எல்லைகளுக்குள் உத்தரவுபெற்ற அழுக்குவாரி வேலைகொள்ளப்பட விரும்புகிற ஒவ்வொரு மனுஷனும் முதல் அனுபந்தத்தின் மாதிரியில் சொல்லியபடி உத்தரவைச் சபாநாயகரிடத்திலிருந்து பெற்றுக்கொள்ள வேண்டும்.

*கட்டளைபெறாத ஒருவனும் மலத்தை அகற்றப்படாது.*

190. கவுண்சில் சங்கத்தாரோடு ஒப்பந்தம்பண்ணுதவர்க்கும், கவுண்சில்சங்க உத்தியோகஸ்தராயிராதவர்க்கும் உத்தரவுபெறாத குப்பைவாரிக்கும் நகரவிசாரணை எல்லைக்குள்ளிருக்கும் இராமலங்களை அகற்றி வெளியில் கொண்டுபோக நீதியல்ல. இந்தத் துணைச்சட்டத்துக்குட்படக் கொடுத்த லைசென்சுகள் எல்லாம் ஒரு வருஷம் வரைக்கும் பெலனுள்ளதாயிருக்கும்.

*உத்தரவுபெற்ற அழுக்குவாரிகள் அழுக்கெடுத்த இடங்களின் டாப்பைக் கொடுக்கவேண்டும்.*

191. மேலே சொல்லப்பட்டபடி உத்தரவுபெற்ற எந்த மனுஷனும் காலத்துக்குக்காலம் தேவைப்பட்டபடி வீடுகளிலிருந்தும் காணிகளிலிருந்தும் அவனால் அகற்றிவிடப்பட்ட மலத்தைப்பற்றிய காரியங்களை சபாநாயகருக்குத் தெரிவிக்கவேண்டும்.

*சரியென்றொத்துக்கொள்ளப்பட்ட வண்டில்களில் அல்லது பாத்திரங்களில் மாத்திரம் மலத்தை அகற்றவேண்டும்.*

192. மலமானது வண்டில்களில் அல்லது இதற்கென்று செய்யப்பட்ட பாத்திரங்களில் செல்த் ஒப்பிசர் அல்லது அதைப்பற்றிச் சபாநாயகரினால் அதிகாரங் கொடுக்கப்பட்ட ஆளின் அனுமதிப்படி கொண்டுபோகப்பட வேண்டும். அப்படிப்பட்ட வண்டில்கள் பாத்திரங்கள் எல்லாக்காலத்திலும் பெலனுள்ளதும் தண்ணீர் பொசியக்கூடாததுமாயிருக்கவேண்டும்.

*மலத்தைப் பாவிக்கிறதற்கு முன் வண்டில்கள் சேட்டிபிக்கற்றைப் பற்றிக் கொள்ளவேண்டும்.*

193. அந்த வண்டில் இதற்குத் தகுதியானதென்று சபாநாயகரிலிருந்து அதிகாரம்பெற்ற வேறு மனுஷன் அல்லது செல்த் ஒப்பிசரிலிருந்து ஒரு சேட்டிபிக்கட்டை பெறுதற்குமுன் மலத்தை எடுக்கிறதற்கு யாதாமொரு வண்டிலையும் பாவிக்கப்படாது. அப்படிப்பட்ட சேட்டிபிக்கற்றை காலத்துக்குக்காலம் சபாநாயகருடைய கட்டளைப்படிக்கு புதுப்பித்து வைக்கவேண்டியது.

*சேட்டிபிக்கற்பெற்ற வண்டில்களுக்கு ஒரு டாப்பு இருக்கவேண்டும்.*

194. மலத்தைக் கொண்டுபோகிறதற்குத் தகுந்ததென்று சேற்றுபிக்கற் கொடுக்கப்பட்ட வண்டில்கள் எல்லாத்துக்கும் ஒரு டாப்பு இருக்கவேண்டும்.

*உத்தரவுபெற்றமனுஷன் உத்தரவுபத்திரத்தின் பிற்பக்கத்தில்உள்ளபிரமாணங்களினால் கட்டுப்பட்டவனுயிருக்கிறன்.*

195. ஒவ்வொரு உத்தரவுபெற்ற அழுக்குவாரியும் அவனுடைய உத்தரவுபத்திரத்தின் பிற்பக்கத்தி லெழுதப்பட்டிருக்கும் கட்டளைச்சட்டங்கள் நியாயப்பிரமாணங்களுக்குக் கீழ்ப்படிய வேண்டும். அப்படி நியாயப்பிரமாணங்கள் கட்டளைகள் அவனால் மீறப்படுகையினால் சபாநாயகர் அவனுடைய உத்தரவுபத்திரத்தை அவனிடமிருந்து எடுத்துக்கொள்ளுவார்.

196. யாதாமொரு மனுஷனும் மலத்தை ரோட்டுக்கூடாய் கொண்டுபோகும்போது வீண்பொழுதுபோக்கவுங் கூடாது அல்லது மலத்தை அடக்கிய பாத்திரத்தை பிரசித்த ரோட்டு வழிகளின் பக்கங்களில் ஒளித்துவைக்கவும்படாது.

*மாட்டு வண்டில் அல்லது குதிரை வண்டில மலத்தை அகற்றும்படி நிற்கப்படாது.*

197. மாட்டுவண்டில் இரட்டைச்சில்லுவண்டில் குதிரைச்சாறட்டு மலத்தை மதவின் அழுக்கை ஊத்தைக்குன்றுகளின் சேற்றை, கக்கூசின் அழுக்கை, அல்லது களிவுள்ள இடங்களிலுள்ளவைகளை அகற்றுகிறதற்கு அல்லது இந்த முகாந்தரத்துக்காக ஏற்றுக்கொள்ளுகிறதற்கு அப்படிப்பட்ட ஒரு வண்டிலை இரண்டு சில்லு வண்டிலை அல்லது குதிரைவண்டிலை, ஒரு பிரசித்த மண் தெருவில் வழியில் ஆட்கள் பயணம்பண்ணும் பிரசித்தமான தெருக்களில் நெடுநேரத்துக்கு யாதாமொரு மனுஷனும் அவைகளைத் தங்க அல்லது நிற்க விடப்படாது.

*மலத்தை அகற்ற வேண்டியது.*

198. மலமானது சபநாயகர் குறித்த பாதைகளின் வழியாய் அகற்றப்படவேண்டும்.

*மலமும் மற்றவைகளும் குறிக்கப்பட்ட இடங்களில் மாத்திரம் வைக்கப்பட வேண்டியது.*

199. யாதாமொரு மனுஷனும் சொல்லப்பட்ட கட்டளைச்சட்டத்தின் 1887 ம் ஆண்டின் 7 ம் கட்டளைச்சட்டத்தின் 172 ம் பக்கத்தில் சொல்லப்பட்டிருக்கும் இரா மலத்தை, சாணியை, வேறு அழுக்கை, தூசியை, ஊத்தையை, சாம்பலை, குப்பையை சொல்லப்பட்ட இடங்களை விட்டு வேறொரு இடத்திலும் குவித்துவைக்கப்படாது.

*வீட்டுக்காறன் குப்பை கஞ்சல்களை தகுதியான இடத்தில் வைக்கவேணும்.*

200. ஆராகுதலொருவன் சங்கத்தின் அழுக்கு வாரிகளினால் சாம்பல் குப்பை கூளங்கள் வேறு கஞ்சல்களை தோட்டங்களுக்குளிருந்து அகற்றுவிக்க விரும்புவானேயாகில் அப்பேற்பட்ட அழுக்குகளை மூடப்பட்ட வாளிகளில் பெட்டிகளில் அல்லது வக்குகளில் காற்பாதை அருகுகளின் தோட்டத்தின் வெளிப்பக்கத்தில் சங்கத்தால் குறிக்கப்பட்ட மணித்தியாலங்களுக்குள் நாட்டுப்போடவேண்டும். மேலும் அழுக்கு வாரிகளால் வக்குகளிலுள்ள பெட்டிகளிலுள்ள வாளிகளிலுள்ள அழுக்குகளை எடுத்து அரை மணித்தியாலத்துக்குற் புதைத்துப்போட்டு அப்பேற்பட்ட வாளிகளை பெட்டிகளை அவ்விடத்திலிருந்து எடுத்துப்போடவேண்டும். யாதாமொரு மனுஷனும் தெரு வீதிகளில் போடாதபடி சாம்பல் குப்பை கூளங்கள் கச்சல்களை மேலேசொல்லப்பட்ட வக்குகள் பெட்டிகள் மூடப்பட்ட வாளிகளுக்குள் வைக்கவேண்டும்.

*நகர விசாரணைச் சங்கக்கூலி அல்லது விசேஷ கூலி வைப்பட வேண்டியது.*

201. நகரவிசாரணை உத்தியோகஸ்தனின் மூலமாய் மலத்தை அகற்றவேண்டுமாக செய்யும் வேலை ஒரு நாட் கூலி அல்லது அதுக்கென்று ஒரு கூலிக்காரனைக் கொடுக்கவேண்டியது.

*மலம் அள்ளுகிறவனின் கடமை.*

202. நாட்கூலி செய்யவேண்டிய வேலைகளின் முறை பின்னால் காட்டப்பட்டிருக்கிறது.

நாள்வீதம் 15 நிமிஷத்துக்கு வீட்டுக்காறனுடைய தோட்டத்துக்குச் சென்று வேலைசெய்யவேண்டும். அவன் முதல் அறைகளுள்ள பாத்திரங்கள் சின்ன வாளிகளிலுள்ள மலங்களை எடுத்து சங்கத்தவர்களால் விதிக்கப்பட்ட அளவின் வாளிகளில் போடவேண்டும்.

(b) நாற்றத்தை நீக்கக்கூடிய தூளை வீட்டுக்காறன் கொடுத்தால் அவன் அதை வாங்கிப் போட்டு துப்பரவுபண்ணி சரியான இடங்களில் சாமான்களைத் திரும்ப வைக்கவேணும்.

*மலம் அள்ளுகிறவன் கடமை.*

(c) நியாயப்பிரமாணத்துக்குரிய வாளியை நிரப்பி ஒதுக்குமுள்ள இடத்தில் வைக்கவேண்டும். இராக்கூலி வந்து இலகுவாய்ப் பிளங்கத்தக்கதாய் வீட்டுக்காறனுடைய அனுமதிப்படி எடுக்கப்படவேண்டும்.

(d) காய்ந்த மண் பாவிக்கும் தொட்டிகளுக்கு காய்ந்த மண் போடவும் குடியிருக்கிறவனால் வைக்கப்பட்ட தென்னங்கயர்த் தூசியிருந்தால் அதைப் போடவும்.

(e) கக்கூசு அல்லது அறைகளைக் கூட்டித் துப்பரவுபண்ணவேண்டும்.

*நியமிக்கப்பட்ட கூலிக்காரனின் கடமை.*

203. ஒரு நியமிக்கப்பட்ட கூலியாளின் வேலைகள் பின்னால் சொல்லப்படுகிறது. கூலிக்காரனைக்கொண்டு ஒரு நாளைக்கு எட்டு மணித்தியாலத்துக்கு வேலைசெய்விக்க வேண்டியது. கேட்டுக்கொண்டவனுடைய முழுப்பொறுப்பிலும் இருக்கிறது. இந்தக் கூலிக்குக் குறித்த நேரம் வேலைகொடுத்து குறித்த நேரத்தில் போகும்படி விடப்படவேண்டும். இதைக் கேட்டுக்கொண்டவனுடன் ஒழுங்குபண்ணிக்கொள்ளவேண்டும். அவன் தன் முழு நேரத்தையும் கக்கூசு மலம் கழியும் இடங்களைத் துப்பரவுபண்ணிவைப்பதும் அதுக்குரிய தோட்டத்துக்குள் இருக்கும் அதுக்குள்ள இடங்களைப்பார்த்து வேலைசெய்யவேண்டும்.

*நியமிக்கப்பட்ட அல்லது நாட்கூலியின் சம்பளம்.*

204. சொல்லப்பட்ட நகரவிசாரணைச் சபாநாயகருக்கு அப்படிப்பட்ட கூலிக்காரனை விட்டு வேலைசெய்வித்ததுக்கு ஒரு நாள் முழுக்க நியமிக்கப்பட்ட கூலிக்காகக் கொடுக்கவேண்டிய வரி பின்னால் சொல்லப்படுகிறது. ஒரு நாட் கூலிக்கு மாதமொன்றுக்கு ஒரு ரூபாவும் அல்லது குறை மாதத்துக்குத்தக்கபடி கணக்குப்பார்த்துக் கொடுக்கப்படும். நியமிக்கப்பட்ட கூலிக்கு மாதமொன்றுக்கு பதினைந்து ரூபாவும் அல்லது குறைமாதத்துக்குத் தக்கபடி கொடுக்கப்படும்.

*முற்பணம் கொடுக்க வேண்டியது.*

205. இப்பேர்ப்பட்ட கொடுக்கல் எல்லாம் முற்பணமாகக் கொடுக்கவேண்டும். 204 ம் துணைச்சட்டத்தின்படி கொடுக்க உத்தரவாதியாகும் ஒவ்வொரு மனுஷனும் அப்படியே செய்யவேண்டும். அதாவது நாட்கூலி அல்லது நியமிக்கப்பட்ட கூலியின் வேலை தேவையில்லை. அதை விட்டுவிடப்போகிற திகதியையும் நகரவிசாரிப்புச் சபாநாயகருக்கு அறிவிக்கவேண்டும்.

*கொடுபடா விட்டால் அறவுபண்ணும் விதம்.*

206. 246 ம் கட்டளைச்சட்டத்தின்படி அந்த மாதத்தில் அல்லது மாதத்திலோர் பகுதிக்கு வரவேண்டிய தொகை பாக்கியாக நின்றால் அல்லது கேட்டு நியமித்த கூலியின் நாட்தொகுத்து 282 ம் பிரிவில் சொல்லப்பட்ட நகரவிசாரிப்பு 1887 ம் ஆண்டின் 7 ம் கட்டளைச்சட்டத்தின்படி அறவுபண்ணப்படும். கொடுக்கவேண்டிய பணத்தை மாதத்தின் 10 ம் திகதிக்குமுன் கொடுத்துப் போடவேண்டும்.

207. ஆராகுதலொருவன் சங்கத்தின் அழுக்குவாரிகளினால் தனது தோட்டங்களுக்குள்ளிருந்து சாம்பலை குப்பை கூளங்களை அல்லது வேறு கஞ்சல்களை அகற்றுவதற்கு விரும்புவானேயாகில், அவைகளைச் சங்கமானது காலத்துக்குக்காலம் அறிவித்தல்கொடுத்து குறிக்கப்படும் அப்படிப்பட்ட மணித்தியாலங்களில் மூடப்பட்ட வாளிகளில் பெட்டிகளில் அல்லது வேறு கட்டிடங்களில் அல்லது கற்தொட்டிகளில் அடிப்பாதைக்கு அப்புறத்தில் தன் தோட்டத்திலிருந்து கொண்டுபோய் வைத்திருக்கவேண்டும். சொல்லப்பட்ட வாளிகளை பெட்டிகளை அல்லது அப்படிப்பட்ட வக்குகளை அரைமணித்தியாலத்துக்குள் அழுக்குவாரிகள் வெறுமையாக்கினவுடன் எடுத்துப்போடவேண்டும். யாதாமொருவனும் மேலேசொல்லப்பட்ட வக்குகளில் பெட்டிகளில் மூடப்பட்ட வாளிகளிலன்றி எந்தத் தெருவிலும் சாம்பலை குப்பை கூளத்தை வைக்கப்படாது.

*வீட்டின் சொந்தக்காறன் வக்குகள் கட்ட வேண்டும்.*

208. கட்டிடம் உள்ள எவனும் அறைகள் அல்லது ஒப்புரவான இடம் இடங்களில் பிறம்பான பகுதிகளான கட்டிடங்களுக்கு குப்பை கூளம் அழுக்குப் போடும்படி மூடிஉள்ள வாளிகள் பெட்டிகள் கவறும் வக்குகள் கட்டிக்கொடுக்கவேண்டும்.

*பிரசித்த நிலத்தைப் பாவித்தல்.*

209. சபாநாயகரின் பிரசித்த நொத்திசின்படி நகரவிசாரணைக்கு உட்பட்ட பிரசித்த நிலத்தை யாதாமொரு பாவிப்புக்காக எடுக்கப்படாது.

*விருந்தையில் லாயம் கட்டப்படாது.*

210. ஒருவனும் தன்னுடைய வீட்டின் விருந்தையை அல்லது அந்தப் பாவிப்புக்குட்படாத வீட்டுக்கு முன்னாக அல்லது தெருவுக்கருகால் இருக்குமிடத்தில் ஆடுமாடு அல்லது வேறெந்த மிருகத்தையும் கட்டுகிறதற்குப் பாவிக்கப்படாது.

*குதிரைகளைத் தெருவில் துடைக்கப்படாது.*

211. யாதாமொருவனும் தெருக்களில் அல்லது தலைவரிசை நிலங்களில் ஒரு மிருகத்தையாகுதல் அல்லது வண்டியையாகுதல் துடைக்கவுங் கழுவவுங் கூடாது.

*செத்த மிருகத்தைப் புதைத்தல்.*

212. வீட்டை அல்லது தோட்டத்தை வைத்திருக்கிறவன் எவனும் ஆடுமாடு குதிரை பன்றி சாகுமேயாகில், அது செத்து நாலு மணித்தியாலத்துக்குள் அல்லது இராவில் செத்து இருக்குமேயாகில், விடிந்து நாலு மணித்தியாலத்துக்குள் செத்த மிருகத்தை நகரவிசாரணைச் சோதனைகாரனுக்கு அறிவித்து இதற்கென்று கட்டியிருக்கு மிடத்துக்குக் கொண்டுபோய்த் தாக்கவேண்டும். அல்லது சபாநாயகர் தீர்மானித்தபடி அதைத் தாட்டும் செலவு நகரசோதனைகாரனுக்குக் கொடுக்கவேண்டும்.

*நட்டம்செய்யும் மரத்தைத் தறித்து விடுதல்.*

213. நகரவிசாரணை எல்லைக்குள் ஏதாகுதல் மரம், கொப்பு, பழம் மனுஷர் குடியிருக்கும் வீட்டில் அல்லது கட்டிடத்தில் விழுந்து குடியிருப்பவர்களுக்குத் தீங்குசெய்யுமென்று கண்டால் அல்லது தெருவில் தாக்கக்கண்டால் சபாநாயகர் எழுத்துமூலம் வீட்டுக்காரருக்கு அறிவித்தல் கொடுத்தால் அம்மரத்தின் கொப்பை 24 மணித்தியாலத்துக்குள் தறித்துப்போடவேண்டும். தறிக்கத் தவறினால், சபாநாயகர் அல்லது உத்தரவுபெற்ற வேலையாட்கள் யாரும் உட்பிரவேசித்து அந்த வேலையைச் செய்வித்து குடியிருக்கிறவனிடம் நகரவிசாரணை 1887 ம் ஆண்டின் கட்டளைச் சட்டத்தின்படி 281 ம், 282 ம் பிரிவுகளில் சொல்லப்பட்டபடி அறவுபண்ணப்படும்.

214. பின்னால் சொல்லப்படுகிற செய்கைகள் ஒன்றையும் நியாயத்தின்படி ஒருவனும் செய்யப்படாது:—

(1) 25 அடி நீட்டான மரத்தை அல்லது அந்தப் பொருளையும் அதின் அடியை இன்னொரு வண்டியில் தொடாமல் அல்லது பக்குவமாக்காமல் ஒரு வண்டியிலும் ஏற்றிக்கொண்டு போகப்படாது.

(2) 20 அடிஉள்ள அந்த மரத்தையும் பொருளையும் இன்னொரு மனுஷன் காவாமல் கொண்டு போகப்படாது.

(3) இரும்புச்சிலாகைகளை வண்டில்களில் கட்டாமலும் அப்படிப்பட்ட சிலாகைகளைச் சத்தம்போடாமலும் கொண்டுபோக வேண்டும்.

(4) வண்டியின் அடியிலிருந்து விறகு பீப்பா வேறு எந்தச் சாமானையும் 6 அடிக்கு மேற்படக் கொண்டுபோகப்படாது.

(5) விறகு, மரம், பீப்பா எந்தச்சாமானையும் அருகுகளில் பிடைப்பாக இருக்க வில்லுக்கப்பால் வண்டியில் கொண்டுபோகப்படாது.

*தவறினமாய்ப் பாரமேற்றின வண்டிலெல்லாம் மறிக்கப்பட வேண்டும்.*

215. மேலே சொல்லப்பட்ட துணைச்சட்டத்துக்கு விரோதமாய் சொல்லப்பட்ட மரத்தையாகுதல் சாமான்களையாகுதல் ஏற்றிக்கொண்டுபோவானேயாகில், நகரவிசாரணைப் பொலிச உத்தியோகஸ்தன் மறிக்கிறதற்கு ஞாயமுள்ளவனாயிருக்கிறான். கொண்டுபோகிறதற்கு வண்டியிலே அப்படிப்பட்ட சாமான்களை ஏற்றியிருந்தால் சொல்லப்பட்ட துணைச்சட்டத்தின்படி ஒன்றும் செய்யப்படாது.

*கவலையீனமாய்ச் சாமான்களைக் கொண்டுபோகும் மாதிரி.*

216. யாதாமொரு வண்டியை அல்லது ஒற்றைமாட்டுக்கரத்தையை பிரசித்த றோட்டில் குப்பை கல்லுச்சுண்ணாம்பு பச்சைக்கல்லு கொட்டுண்ணுதபடிக்கு வடிவாய்க் கட்டிக்கொண்டு போகவேண்டும் அல்லது கட்டிக்கொண்டு போகக்கூடாது.

*குறிக்கப்பட்ட றோட்டுகளால் பாரமான வண்டில்களைக் கொண்டுபோகப்படாது.*

217. யாதாமொரு மனுஷனும் மாட்டுவண்டில் அல்லது எந்தவண்டில்கள் என்றாலுஞ்சரி பாரமான சாமான்களை யேற்றி வெடிகோட்டன் அல்லது வெடி மெக்கா றோட்டுகளால் கொண்டுபோகப்படாது.

*கற்பாறையில் அல்லது தனிவிசை நிலத்தில் வண்டில்கள் குதிரைகள் நிற்கப்படாது.*

218. யாதாமொரு மனுஷனும் எந்த வகையான வண்டியையும் பயணக்காரர்போகும்படி விடப்பட்டிருக்கும் சிற்றடிப்பாதையினருகில் அல்லது றோட்டினருகில் ஒரு வண்டியையும் இருக்கவும் ஓட்டவும் தள்ளவும்படாது. யாதாமொரு மனுஷனும் அப்படிப்பட்ட சிற்றடிப்பாதைகளின் அருகுகள் அல்லது றோட்டின் அருகுகளில் நெடுகஉள்ளதாய் அல்லது இல்லாததான மாட்டுலாயம் குதிரை லாயம் சாமான்களை விற்கும் மேடையை அதாவது கால்நடைப் பயணக்காரர் வண்டில்கள் போகிறதற்கு தடையாயிருக்கும்படி செய்யப்படாது.

*மாடுகளைச் சிற்றடிப்பாதைகளில் கொண்டுபோகப்படாது.*

219. யாதாமொரு மனுஷனும் நியாயப்பிரமாணத்தின்படி ஏதொரு மிருகத்தையாகுதல் ஆடுமாட்டையாகுதல் குத்திரவண்டில்கள் அல்லது அவ்விதமான எந்த வண்டில்களையும் காற்பயணக்காரருக்கென்று விடப்பட்ட சிற்றடிப்பாதைகளில் பாவிக்கப்படாது.

*றோட்டுகளைச் சேர்ந்திருக்கும் வீடுகளின் வெளிச்சுவர்.*

220. பிரசித்தமான றோட்டுகளைத் தொடுத்திருக்கும் வீடுகள் தோட்டங்களின் வெளிச்சுவர்களெல்லாம் சுத்தமாய் பழுதுபார்த்து வைத்திருக்கப்படவேண்டும்.

*ஒட்டவேண்டியவைகளை உத்தரவு பண்ணப்பட்ட இடங்களில் ஒட்டவேணும்.*

221. யாதாமொரு மனுஷனும் நகரவிசாரணைகாறனால் குறிக்கப்பட்ட இடத்தையன்றி வேறு தோட்டங்களிலிருக்கும் மரங்களிலாவது வீடுகளிலாவது கட்டிடங்களிலாவது எந்தச் சுவரிலாவது தூண்களிலாவது அறிவிப்பு பிரசித்தபத்திரங்கள் ஒன்றையும் ஒட்டப்படாது.

*மாடுபிடித்தல்.*

222. எந்த மனுஷனுடையதாயிருந்தாலும் ஞாயப்பிரமாணத்தின்படி சபாநாயகரினதிகாரம் பெற்று பிடிக்கும்படி எந்த மாடு, ஆடு, குதிரை, மிருகம் என்றாலுஞ்சரி கட்டப்பட்டதாய் அல்லது தவறினமாய்த் தாரத்தப்பட்டதாய் நகரவிசாரிப்பு எந்தப் பிரசித்த றோட்டிலிருக்குமேயாகில், பிடிபடவேண்டும். அப்படிப்பட்ட மிருகம் கட்டப்பட்ட எந்த வண்டிலுக்கு உரியதாயிருந்தாலுஞ்சரி அல்லது பாரமேற்றப்பட்டதாய் அல்லது பாரமேற்றப்படாததாயிருந்தாலுஞ்சரி பிடிக்கப்பட்ட ஒவ்வொரு மிருகமும் கையுடனே மேற்சொல்லப்பட்டபடி பொலிச உத்தியோகஸ்தன் வசத்தில் அல்லது கண்டிப் பொலிசு ஸ்டேசன் பொறுப்பில் கொடுபடவேண்டும். அப்படிப்பட்ட உத்தியோகஸ்தன் கையுடனே சபாநாயகருக்குப் பிடித்ததைப்பற்றி திப்போட்பண்ணவேணும். சபாநாயகர் றெப்பொடுத்துக் கிடைத்தவுடன் அந்த மிருகத்துக்கு உரித்தில்லையென்று கண்டால், பக்குவமாய் மாட்டை வைத்துப்பராமரித்து வளக்கப்படி பிடிப்பைப்பற்றி பிரசித்தப்படுத்தவேண்டும். சொல்லப்பட்டபடி யாதாமொரு மிருகமும் பிடிக்கப்பட்டால் சொந்தக்காரனுக்குக் கொடுத்துப்போடவேணும் நகரவிசாரிப்புச் சங்கத்துக்கு ஒரு ரூபாய் கொடுத்துப்போடவேணும். ஒவ்வொரு நாளைக்கும் 50 சதம் கொடுத்துப்போடவேணும். அதை அந்த உத்தியோகஸ்தன் தன் பொறுப்பில் வைத்திருக்கலாம். அப்படிப்பட்ட மிருகத்துக்கு உடமை இல்லையென்று கண்டால், பத்து நாளைக்குள் பிரசித்த ஏலத்தில் அந்த மாட்டை விற்று பாவித்த நாள் செலவையும் எடுத்துக்கொண்டு மிச்சத்தை விற்பனவின் செலவுக்கு சங்கத்தாருக்குக் கொடுத்துப் போடவேண்டும்.

## 14 ம் அதிகாரம்.

*வைசூரி அல்லது பேதிநோய்க்காரரை ஆஸ்பத்திரிக்குக் கொண்டுபோகவேண்டும்.*

223. ஆராகுதல் வைசூரி பேதி வேறு தொற்றுவியாதிகளில் வருத்தப்படுவோனேயாகில் மற்ற வீட்டுக்காரர்களிலிருந்து அவனைப் பிறம்பாக்க வேண்டும். கலோனியல் சேர்ஜன் அல்லது கெல்த் ஒப்பிசர் இதனால் வரும் தீங்கை மற்றவர்களுக்கு அறிவித்து சபாநாயகரால் குறிக்கப்பட்டிருக்கும் தனிவீட்டுக்கு அல்லது பிரசித்த ஆஸ்பத்திரிக்குக் கொண்டுபோக வேண்டும்.

*வருத்தக்காரரை ஒரு இடத்திலிருந்து மறுஇடத்துக்கு அகற்றுவது.*

224. சபாநாயகரினால் அப்படிப்பட்ட மனுஷனை ஏதாகுதலொரு இடத்துக்குக் கொண்டு போக அல்லது சிநேகிதர்கள் தெரிந்துகொண்டால் அனுப்புவதற்காக சொல்லப்பட்ட கலோனியல் சேர்ஜன் அல்லது கெல்த் ஒப்பிசர் யாதாமொரு தடைப்படுத்தக் கூடாது. அந்த இடம் பிரசித்த ஆஸ்பத்திரி அல்லது தனிவீடாயிருக்கின்றது.

*சபாநாயகரால் கட்டளை கொடுத்தாலொழிய அகற்றப்படாது.*

225. சபாநாயகரினால் ஒழுங்குபண்ணப்பட்ட துணைச்சட்டத்தி னுத்தரவினாலன்றி வைசூரி பேதி அல்லது எந்தத் தொற்றுநோயினும் வருத்தப்படுமோர் மனுஷனை அப்படிப்பட்ட எந்த வீட்டிலிருந்தும் யாதாமொரு இடத்துக்கு அகற்றப்படாது.

*ஆஸ்பத்திரிகளைக் கட்டுப்பாட்டில் வைத்திருக்க வேண்டும்.*

226. சபாநாயகரினால் குறிக்கப்பட்ட எல்லா ஆஸ்பத்திரிகளும் தனிவீடுகளும் வைசூரி பேதி வேறு தொற்றுநோய்களினால் வருந்துஞ் சனங்களை ஏற்றுக்கொள்ளு மிடமாய் பாவிக்கப்பட்டால் காவல்போடப்படவேண்டும். அங்கே இதற்கென்று நியமிக்கப்பட்டவர்களை அல்லாது மற்றவர்களொருவரும் உள்ளேபோகவர எந்த முகாந்தரத்துக்காகுதல் டாக்குத்தரி னுத்தரவில்லாமல் ஆஸ்பத்திரி அல்லது தனிவீட்டில் போகவிடப்படாது.

*ஆஸ்பத்திரியை விட்டுப்போக ஒரு பிணியாளிக்கு வைத்தியனுடைய செட்டிபிக்கற் வேணும்.*

227. அப்படிப்பட்ட ஒரு ஆஸ்பத்திரியை அல்லது வீட்டை வைத்தியனுடைய பொறுப்பிலிருக்கும் பிணியாளி புறப்படுகிறதற்குத் தகுதியுள்ளவனென்று செட்டிபிக்கற்றைப் பெறும் வரையிலும் அவ்விடத்தைவிட்டுப் போகவிடப்படாது.

*பிணியாளிகள் முழுகும் இடங்களைத் தடைசெய்யவேண்டியது.*

228. சுகமில்லாதவனை பிரசித்தமான இடங்களில் குளிக்க முழுக விடப்படாது. அதற்கென்று குறிக்கப்பட்ட இடங்களில் மாத்திரம் அவர்கள் முழுகவேண்டியது.

*பிணியாளிகளை அகற்றின பிற்பாடு தொற்றுநோயுள்ள வீடுகளைக் காவலில் வைக்கவேண்டியது.*

229. வைசூரியில் அல்லது பேதியில் அல்லது வேறு தொத்துநோய்களில் வருத்தப்படுகிறவனை ஒரு வீட்டிலிருந்து அவசியமென்று கண்டு அகற்றினால் அப்பரவுபடுத்துகிறதற்கு சபாநாயகரினால் அல்லது கலோனியல் சேர்ஜனினால் அல்லது கெல்த் ஒப்பிசரினால் அவசியமென்று கண்டால், 7 நாளைக்குள் சபாநாயகர் அல்லது கலோனியல் சேர்ஜன் அல்லது கெல்த்ஒப்பிசர் போதுமென்று நினைக்கிற அளவில் கட்டுப்பாட்டில் வைக்கவேண்டும். அப்படிப்பட்ட கட்டிடத்தில் என்ன முகாந்தரத்துக்காகுதல் சொல்லப்பட்ட கலோனியல் சேர்ஜன் அல்லது கெல்த் ஒப்பிசரின் உத்தரவில்லாமல் உள்ளே போகவும் வரவும் கூடாது. மேலே சொல்லப்பட்டபடி உள்ளேயிருப்பவர்களின் தாபரிப்புக்காக அவசியமென்று கண்டால் சங்கம் கொடுக்கவேண்டும்.

*தொற்றுநோயுள்ள வீடுகளை தனியே வைக்கவேணும்.*

230. சபாநாயகரினால் அல்லது கலோனியல் சேர்ஜனினால் அவசியமென்று காணப்படுமேயாகில் காவலில்வைக்கும் வீட்டைச்சுற்றி வேலிபோட வேண்டும். அல்லது அவ்விதமாய் சபாநாயகர் கலோனியல் சேர்ஜன் கெல்த் ஒப்பிசர் அப்படிப்பட்ட கட்டிடத்துக்குப்போகும் றோட்டுத் தெருவழிகளை அடைக்க வேண்டும்.

*தொற்றுவீடுகளுக்குக்கிட்ட சனக்கூட்டங்கள் தடைபண்ணப்படவேண்டும்.*

231. பேதி வைசூரி வேறெந்தத் தொற்றுநோய்களும் பரம்புங்காலங்களில் பிரசித்த ஆஸ்பத்திரி காவலுக்காக கட்டப்படும் எந்த இடங்களிலாகுதல் ஆட்கள் கூட்டத்தைத் தடைப்படுத்துகிறதற்கு அல்லது நகரவிசாரணை உத்தியோகஸ்தரினால் தடைபண்ண அதிகாரமிருக்கிறது.

*சவக்குழியின் ஆழம்.*

232. வைசூரி பேதி வேறெந்தத் தொத்துநோயினும் செத்த பிணங்கள் 6 அடிக்குக் குறையாத தாழ்பத்தில் தாழ்க்கப்படவேண்டும்.

*கலோனியல் சேர்ஜன்.*

233. இந்த அதிகாரத்தில் கலோனியல் சேர்ஜன் என்று பாவிக்கிறதின் கருத்து கண்டியில் கவண்மேந்தில் வேலையாயிருக்கும் சீனியர் சிவில்மெடிக்கல் ஒப்பிசர்.

---

## 15 ம் அதிகாரம்.

### உத்தரவுச்சீட்டுப்பெறும் வண்டிகளையிட்ட துணைச்சட்டங்கள்.

*வண்டிகள் சோதனைசெய்பவரை நியமித்தல்.*

234. தக்க அதிகாரி காலத்திற்குக்காலம், கரத்தைகளையும் கோச்சுவண்டிகளையும் சோதனை பண்ணும்பொருட்டு சோதனைகாரரை நியமிப்பார். இவ்விதமாய் நியமிக்கப்படும் சோதனைகாரர் தங்கள் சோதனைக்குட்பட்ட தெருவீதிகளில் ஓடும் கரத்தைகளினதும் கோச்சுவண்டிகளினதும் நிலைபரத்தைப்பற்றித் தக்கவதிகாரிக்கு அறிவிக்கவேண்டும். இவ்விதமான அறிவித்தல்களைச் சோதனைகாரர் தக்க அதிகாரியால் நியமிக்கப்படும் காலங்களில் அனுப்பவேண்டும். அதிகாரி தேவையெனக்காணும் வேளைகளில் விசேஷமான அறிவித்தலைக் கேட்கக்கூடும்.

*சோதனைகாரரின் அறிவித்தல் முழுவிபரிப்புகளையு மடக்கியிருக்கவேண்டும்.*

235. கரத்தைகள் கோச்சுவண்டிகள் சோதனைசெய்யும் சோதனைகாரரின் அறிவித்தல், கரத்தைகளிலும் கோச்சுவண்டிகளிலும் எழுதப்பட்டிருக்கும் இலக்கத்தை தெளிவாய்க்காட்டி, அக்கரத்தைகளினதும் கோச்சுவண்டிகளினதும் தெளிவான நிலைபரத்தையும், அவைகளை இழுப்பதற்காய்ப் பாவிக்கப்படும் குதிரை அல்லது வேறு மிருகங்களின் நிலைபரத்தையும், குதிரை அல்லது குதிரைகளின் திட்டமானமான உயரத்தை குதிரை உடுப்பின் நிலைபரத்தையும் இத்துணைச்சட்டத்தில் சொல்லிய பிரகாரம் யாவர்க்கும் தெளிவாய்த் தோற்றும்படி கரத்தை அல்லது கோச்சுவண்டி வைத்திருக்க வேண்டுமென்று சொல்லப்பட்ட விளம்பரத்தின் நிலைபரத்தையும்பற்றித் தெளிவாய் காட்டவேண்டும்.

*கரத்தைகளைச் சோதனை செய்யும் பொருட்டு சோதனைகாரர் வீடுவாசல் கரத்தைகள் தங்குமிடங்களுட் பிரவேசிப்பது.*

236. இவ்விதமாய் நியமிக்கப்பட்ட சோதனைகாரன் தனது சோதனைக்குட்பட்ட வல்லது ஓடும்படி உத்தரவுபெற்ற எந்த தெருவீதிகளில் அல்லது லாயங்களுள் உட்பிரவேசித்து, அவ்விடங்களிலிருக்கும் கரத்தைகள் அல்லது கோச்சுவண்டிகளின் உத்தரவுச்சீட்டையும் அவ்வண்டிகளில் பாவிக்கும்படி வைத்திருக்கும் குதிரைகளையும் அவைகளின் உடுப்புகளையும் தனது சோதனைக்காய் தெரிவிக்கும்படி கேட்க ஞாயமுண்டு. அவ்லாயத்தின் பொறுப்பாயிருக்கு மெவனாகுதல் இவ்விதமான சோதனை நேரத்தில் சோதனைகாரனுக்கு ஞாயமான உதவி செய்யத் தவறுங்கால் அவன் குற்றச்சாட்டிற் கேதுவாயிருப்பான்.

**சோதனைகாரனுல் நிச்சையப்படுத்தாத வண்டிக்கு உத்தரவில்லை என்பது.**

237. பிரயாணருக்குப் பத்திரமென அல்லது மேற்சொல்லிய கட்டளைச்சட்டத்திலுமித் துணைச்சட்டத்திலும் தேவையானவை யெல்லாம் ஒப்பேற்றப்பட்டிருக்கிறதென்பதாய் சோதனைகாரன் நிச்சையப்படுத்தினுலல்லாது அவ்வண்டிக்கு அல்லது கோச்சு வண்டிக்கு உத்தரவு கொடுபடாது.

**நிச்சையப்பத்திரம் கேட்குமுன் தன் எண்ணத்தைப்பற்றி அறிவித்தல் பண்ணவேண்டும்.**

238. காத்தையினலல்லது கோச்சு வண்டியின் ஒவ்வொரு சொந்தக்காரனும் நிச்சையப்பத்திரம் கேட்குமுன் அப்படியான தன்னுடைய எண்ணத்தைப்பற்றித் தக்கதத்துவகாரனுக்குத் தெரிவிக்கவேண்டும். அவர் கேள்விக்காரனுடைய பெயரையும் அவனுக்கு விதிக்கப்படும் இலக்கத்தையும் ஓர் பதிவுப் புத்தகத்தில் பதிவுசெய்தபின்மேல், அவ்வறிவித்தல் பத்திரத்தின் பின்பக்கத்தில் காத்தைக் கிடப்படும் இலக்கத்தை எழுத்திலும் இலக்கத்திலும் எழுதியபின் அவ்வறிவித்தல் பத்திரத்தைக் கேள்விக்காரனுக்குத் திரும்பக் கொடுக்க வேண்டும். இப்படியான மேற்குறிப்பு தக்க வதிகாரியால் தத்துவங் கொடுக்கப்பட்ட ஒருவரால் கைபொப்ப மிட்டிருக்கவேண்டும்.

**ஆட்களின் தொகையை காண்பிக்கவேணும்.**

239. காத்தையில் அல்லது கோச்சில் எத்தனை ஆட்களை ஏற்றிக்கொண்டுபோக கூடும் என்றதை உறுதிபத்திரத்தில் காத்தைச்சோதினைபண்ணுகிறவர் விபரிக்க வேண்டியது.

**ஒவ்வொரு காத்தைக்கு மிரெண்டு விளக்குகளிருக்கவேண்டியது.**

240. உத்தரவுச்சீட்டுப்பெற்ற ஒவ்வொரு காத்தையும் எல்லா நேரங்களிலும் வெளிச்சம் கொளுத்துவதர்க்க யத்தமாய்க் காத்தை ஓடுபடவினிருபுறத்திலும் நல்லதும் போதியதுமான இரண்டு விளக்குகள் வைத்திருந்து, அக்காத்தை சாயந்தரம் 6 மணிக்கும் மறு நாட்காலை ஐந்தரை மணிக்கு மிடையில் பாவிக்கப்படுமானுல விளக்குகளில் வெளிச்சமிடவேண்டும்.

**பாவிக்காத நிலைமையிலிருக்கப்பட்ட காத்தைகளை பாவிக்க கூடாது.**

241. உத்தரவுசீட்டு பெற்ற காத்தை அல்லது கோச்சு அல்லது அவைகளை இழுக்கும் மிருகம் அல்லது அதைச்சேர்ந்த உடுப்பு முதலியவை பாவிக்க கூடாது நிலைமையில் இருக்குமேயாகில், அக்காத்தையை அல்லது அதைச்சேர்ந்த மிருகம் முதலியவை பாவிக்க அல்லது பாவிப்புக்கும் சொந்தக்கார இடம் கொடுக்க கூடாது. இன்னும், ஏறும ஆட்களின் பவுத்திரத்தையும் மிருகத்தை கஷ்டமில்லாமல் பாவிப்பையும் கவனிக்கவேண்டியது.

**பிரதி உத்தரவுச் சீட்டொன்று யாவர்க்கும் தெரியத்தக்கதாய் காத்தையில் வைத்திருக்கவேண்டும்.**

242. காற்றுமழையிலிருந்து பாதுகார்க்கும்பொருட்டு கண்ணடிபோட்டு மட்டையிட்டுத் தக்க வதிகாரியால் கொடுக்கப்பட்ட உத்தரவுச் சீட்டில பிரதிச் சீட்டொன்றை ஒவ்வொரு காத்தை அல்லது கோச்சு வண்டியில யாவர்க்கும் தெரியக்கூடிய விதமாய் வைத்திருக்கவேண்டும்.

**கூலிக்காத்தைகளில் ஏற்றக்கூடிய பிரயாணிகளிவ்வளவென ஓர் விளம்பரம் போடவேண்டும்.**

243. காத்தை அல்லது கோச்சு வண்டி ஒட்டுபவனேனுமவனுடைய உதவிக்காரரேனும் ஏற்றுவதர்க்கு உத்தரவுபெற்ற ஆட்களின் தொகை போட்டவோர் அறிவித்தல் யாவர்க்கும் தெரியக்கூடிய விதமாய் ஒவ்வொரு காத்தையிலும் வைத்திருக்கவேண்டும். அவ்விதமான அறிவித்தல்கள் தப்பாவாயும் தேவையான வேளைகளில் புதுப்பித்தும் வைக்கவேண்டும். ஒவ்வொரு காத்தையிலும் அல்லது கோச்சு வண்டியிலும் உத்தரவுச் சீட்டில் சொல்லப்பட்ட கணக்குக்கு மேற்பட ஆட்கள் ஏற்றப்படாது, அன்றியும் காத்தை ஓட்டுபவன் உத்தரவுச்சீட்டிற்காட்டிய முழுத்தொகையான ஆட்களை ஏற்றவும் மறுதலிக்கவுங் கூடாது.

**நிச்சயப்பத்திரம் கொடுக்கப்படாததிர்க்கு சோதனைகாரன் ஞாயம்காட்டவேண்டும்.**

244. இருநூற்றி முப்பத்தேழாம் பிலக்கத் துணைச்சட்டத்திற் சொல்லிய நிச்சையச் சீட்டுக் கொடுக்கச் சோதனைகாரன் மறுதலிக்கில் அவன் அதர்க்கு ஞாயம் தக்க வதிகாரிக்கு எழுத்தில் கொடுக்கவேண்டியதுமன்றிக், கேள்விக்காரன் நிச்சையச்சீட்டுப் பெற்றுக்கொள்ளாததர்க்குக் காரணமாயிருந்த குறைபாடுகளை நிறைவேற்றும்பொருட்டுத் தன்னுடைய அறிவித்தலின் பிரதிச் சீட்டொன்றைக் கொடுக்கவேண்டும்.

**துணைச்சட்டத்தில் சொல்லியவைகளை மீறுங்கால் சொந்தக்காரனும் காத்தை ஓட்டுபவனும் உத்தரவாதியாவார்**

245. தங்கள் காத்தைகளில் அல்லது கோச்சு வண்டியிற் பாவிக்கும் குதிரைகள் அல்லது மற்றுந் தளபாடங்கள், துணைச்சட்டத்திற் சொல்லியவற்றிற்கு மாறாய் ஏதவும் குறைபாடாகவும், உத்தரவுபண்ணப்பட்ட கணக்குக்கு மேற்பட பிரயாணிகளை ஏற்றும்பொழுது, காத்தையை அல்லது கோச்சு வண்டியை இழுக்க முடியாத மிருகங்களைப் பாவிக்கும்பொழுது வல்லது காத்தையிற் கட்டியிருக்கும் மிருகங்களைக் கொடுமையாய் பாவிக்கும்பொழுதும், சொந்தக்காரனும் காத்தை ஓட்டுபவனும் உத்தரவாதியாவார்கள். உத்தரவின்படி ஏற்றக்கூடிய தொகையான ஆட்களை ஏற்றியிருக்கும்பொழுது அக்காத்தைக்குள் அல்லது கோச்சுவண்டிக்குள் வேறொருவன் புகுவானேயானுல் துணைச்சட்டத்திற்கு விரோதமெனக் குற்றஞ்சாட்டப்பட்டுத் தண்டிக்கப்படுவதர்க்கு ஏதுவாயிருப்பான்.

**காத்தைஓட்டுபவனெவனும் தகுமை உள்ளவனுனல் உத்தரவுச் சீட்டுப் பெற்றிருக்க வேண்டும்.**

246. உத்தரவுச்சீட்டுப்பெற்ற காத்தைகள் ஓட்டுபவர்களின் திறமையைப்பற்றிய அத்தாட்சி வேணுமென்பதாய் தக்க வதிகாரி கேட்பார். காத்தை ஓட்டுவதற்குத் திறமையுள்ளவனென அவருடைய மனத்திருப்திப்பட அத்தாட்சி கண்டதன்மேல் அப்படிக்கொத்த ஒருவனுக்கு உத்தரவுச்சீட்டுக் கொடுப்பார். அப்படி உத்தரவுச்சீட்டுக் கொடுக்குமுன் அதர்க்கென வைத்திருக்கு மோர் பதிவுப்புத்தகத்தில் பதிவுசெய்யப்படும். உத்தரவுச்சீட்டுப்பெற்ற ஒருவனல்லாமல் வேறொருவனும் உத்தரவுச்சீட்டுப்பெற்ற வொரு காத்தையை ஓட்ட அல்லது பொறுப்பிலிருக்கவும் படாது.

**துணைச்சட்டங்களில் சொல்லியவைகளை தவறுங்கால் குற்றஞ்சாட்டப்படுவார்கள்.**

247. இத்துணைச்சட்டத்திற் சொல்லியவற்றிற்கு விரோதமாய் நடப்பதைக் காண்கிற சோதனைகாரன் அக்காத்தை அல்லது கோச்சு வண்டி ஓட்டுபவனுக்கும் சொந்தக்காரனுக்கும் விரோதமாய் கோட்டில் ஓர் குற்றச்சாட்டு கொண்டுவருவதும், குற்றச்சாட்டை ஓர் முடிவான தீர்ப்புக்குக் கொண்டுவருவது மவர் கடமை.

**எதுவிதமான குற்றச்சாட்டிற்கும் சொந்தக்காரனும் ஓட்டுபவனும் உத்தரவாதியாவார்.**

248. காத்தையிலல்லது கோச்சு வண்டியிற் தெளிவாய் காட்டியிருக்கவேண்டுமென்று இத்துணைச்சட்டத்திற் சொல்லப்பட்ட இலக்கம், அறிவித்தல், அல்லது எழுத்துகள் மறைபட்டு, அழியப்பட்டு, அல்லது மாற்றப்பட்டிருந்தால் காத்தைச் சொந்தக்காரனும் அக்காத்தையை ஓட்டுபவனும் குற்றஞ்சாட்டப்படுவார்கள்.

**கோச்சுவண்டியில் பிரயாணம்பண்ணும் ஒவ்வொரு பிரயாணியும் 28 றுத்தல் பாரமுள்ள சாமான் கொண்டுபோகக் கூடும்.**

249. உத்தரவுச்சீட்டுப்பெற்ற கோச்சுவண்டியிற் பிரயாணம்செய்யு மொவ்வொரு பிரயாணியும் 28 இறுத்தலுக்கு மேற்படாத பாரமுள்ள பிரயாணச்சாமான் கொண்டுபோகக் கூடும். அப்படியல்லாது ஒவ்வொரு பிரயாணி 28 இறுத்தலுக்கு மேற்பட்ட பயணச்சாமான் கொண்டுபோம்பொழுது அவ்விதமாய் கூடும் பாரத்தில் ஒரு அந்தர் பாரத்திற்கு ஒரு பிரயாணி விதமாய் கணக்கெடுத்து பிரயாணிகள் குறைத்து ஏற்றவேண்டும். மேற்சொல்லிய நிபந்தனைகளின்படியல்லாது உத்தரவுச்சீட்டுப்பெற்ற கோச்சுவண்டியில் தானியச் சாக்கு முதலான வேறு சாமான்களை எவ்விதத்திலும் ஏற்றப்படாது.

**காரியக்காரரும் கோச்சுவண்டி ஓட்டுபவரும் பதிவுசெய்யப்படவேண்டும்**

250. கோச்சு வண்டிகளோடும் வீதிகளிலுள்ள பல கோச்சுக் கந்தோர்களிலுமுள்ள காரியக்காரர்களினதும் கோச்சுவண்டி ஓட்டுபவர்களினதும் முழுப் பெயரும் விலாசமுங் கொடுத்து தக்க வதிகாரியினது கந்தோரில் பதிவுசெய்விக்கவேண்டியது கோச்சுவண்டிச் சொந்தக்காரரின் கடமை,

251. புகைவண்டி அல்லது ஆவியினால் அல்லது மின்சாரத்தினால் ஓட்டப்படும் வேறுவித வண்டிகளெதுவும், அவைகள் ஓடும் இடங்களிலுள்ள சனங்களுக்கு மோசமில்லாமலும் வியாபார முயற்சியில் திரிபவர்களையும் மற்றும் நிபந்தனைகளையும் கவனத்தில்வைத்து அவற்றிற்கு இடையூறில்லாத விதமாய் ஓடவேண்டும், அல்லது தக்க வதிகாரியிடத்தில் அவைகளை ஓட்டுவதற்கு வல்லமை உடையவனென நிச்சயபத்திரம் பெற்றிருந்தாலல்லாது, இவ்விதமான வண்டிகளை ஓட்டப்படாது.

*உத்தரவுச்சீட்டுப்பெறும் கரத்தைகளை வகுப்பு செய்தல்.*

252. தக்கவதிகாரி கோச்சுவண்டி, பாரக்கரத்தை, மாடுகட்டிய சவாரிக்கரத்தை அல்லாத மற்றும் வண்டிகளை முதல் அல்லது இரெண்டாவது என வகுப்புச் செய்யவும் ஒவ்வொரு கரத்தையிலும் ஏறக்கூடிய பிரயாணிகளின் கணக்கையும் நிர்மானஞ்செய்யக்கூடும். தக்க வதிகாரி ஒவ்வொரு கரத்தையினது உத்தரவுச்சீட்டில் கரத்தை இன்ன வகுப்பைச் சேர்ந்ததெனவும் அதின்மேல் ஏறக்கூடிய பிரயாணிகளின் கணக்கையும் குறிக்கும்படி செய்யவேண்டும்.

*கரத்தைகள் தங்குமிடங்களிலிருந்து கூலிக்குவிடவேண்டும்.*

253. உத்தரவுச்சீட்டுப்பெற்ற வெந்தக் கரத்தையையாவும் பின்னால் திட்டம்பண்ணியபடி தவிர கரத்தைகள் தங்கும்படி குறித்த விடங்களிலிருந்து வல்லாது கூலிக்கோடச் சொந்தக்காரன் அல்லது கரத்தை ஓட்டுபவன் விடப்படாது.

*கரத்தைகள் தங்குவதற்கான இடங்களை சங்கம் நியமிப்பது.*

254. சங்கமானது காலத்திற்குக்காலம் உத்தரவுபெற்ற கரத்தைகள் நிற்பதற்கான பிரசித்த இடங்களை நியமிக்கவும் என்னேரத்திலாவது அவைகளை நிறுத்தவும் அல்லது வேறிடத்திற்கு மாற்றுவதற்கும் கூடும்.

தற்காலத்தில் பாவிலைக்காயுள்ள வண்டிகள் தங்குவதற்கான பிரசித்த விடங்களாவன:—

1. வாட்டுத்தெருவில் உத்தரவுபெற்ற குதிரைக்கரத்தைகட்கு.
2. வாட்டுத்தெருவில் உத்தரவுபெற்ற கைக்கரத்தைகட்கு.
3. கோர்க்தெருவில் உத்தரவுபெற்ற வக்கிக்கரத்தைகட்கும் சவாரிக்கரத்தைகட்கும்.
4. கோட்டுக்கொடலைத்தெருவில் உத்தரவுபெற்ற கைக்கரத்தைகட்கு.
5. கட்டுகெஸ்தாட்டைப் பாலத்திற்குச் சமீபத்தில்.
6. திருக்கணுமலைத்தெரு வடபக்கத் தொங்கலில்.

*வண்டிகள் தங்குவதற்கான பிரசித்த இடங்கள் திறப்பது*

255. வண்டிகள் தங்குவதற்கானவோர் பிரசித்த விடம் நியமிக்கப்படும்பொழுது தக்க வதிகாரி ஓர் குறித்த திகதியில் அவ்விடம் பிரசித்த பாவிலைக்காய் திறபடுமெனக்கூறிய வோர் பிரசித்தம் அவ்விடத்திற் செய்யவேண்டும். கூலிக்கென உத்தரவுச்சீட்டுப்பெற்ற எந்தக் கரத்தையாவது அத்திகதி துவக்கம் அவ்விதமான பிரசித்த விடங்களிலிருந்து அல்லது சொந்தக்காரனின் வீட்டில் அல்லது வேலைத்தலத்திலிருந்து வல்லாது கூலிக்கு விடப்படாது.

*கரத்தைகள் தங்கவேண்டிய தூரம்.*

256. வண்டிகள் தங்கு மோர் பிரசித்த மேடையில் ஒவ்வொரு நாலு கரத்தைகட்கிடையில் பிரயாணிகள் கால்நடையாய் செல்லும்படி குறைந்த கணக்கில் எட்டடி தூரமான இடம் விடவேண்டியது.

*கரத்தைகள் நிற்கவேண்டிய வொழுங்கு.*

257. கரத்தைகள் தங்கும் பிரசித்தமான இடத்தில் ஓர் கரத்தை வரும்போது பின்பக்கமாய் சென்று முன்நிற்கிற கரத்தைகளெல்லாவற்றிற்கும்பின் தங்கல்வேண்டும். அவ்விதமாய் கரத்தைகளெல்லாம் ஒன்றின்பின் ஒன்றாய் ஒரேவரிசையில் நிற்கவேண்டும்.

*கரத்தை ஓட்டுபவன் கரத்தையை விட்டுப் பிரியப்படாது.*

258. உத்தரவுச்சீட்டுப்பெற்ற கூலிக்கரத்தைகளெல்லாம் கூலியமராதிருக்கும் வேளைகளில், அல்லது கூலியமர்ந்து இளைப்பாறுவதற்கென சொற்ப நேரமொழிய மற்றும்படி காலை ஆறரை மணி நேரத்தில் வண்டிகள் தங்கும் பிரசித்த இடத்திற்குக் கொண்டுபோக வேண்டும். கூலிக்கரத்தைகள் பிரசித்த விடத்திற் தங்கிநிற்கும்பொழுது ஓட்டுபவன் அவற்றைவிட்டுப் பிரியப்படாது.

*கரத்தை உட்புறத்தில் கூலி அட்டவணை வைத்திருக்கவேண்டும்.*

259. அந்தந்தக் காலத்தில் நடைபெற்றுவருகிற கூலி அட்டவணை ஓர் தடிப்பான மட்டையில் அல்லது தகட்டில் வரையப்பட்டுக் கூலிக்கோடும் ஒவ்வொரு கரத்தையிலும் நன்றாய்த் தெரியக்கூடிய வோர் பக்கத்தில் வைக்கப்பட்டிருக்க வேண்டும். அப்படியாய் வைக்கப்பெற்ற மட்டை அல்லது தகடு அக்கரத்தை கூலிக்கமைந்திருக்கும் நேரமெல்லாம் அப்படியாய் வைக்கப்பட்டும் எழுத்துக்கள் வாசிக்கக்கூடிய விதமாயும் அிப்படா திருக்கவேண்டும்.

260. பின்காட்டியபடி கூலிகொடுத்தல் வேண்டும். மாட்டுக்கரத்தைகளையல்லாது, பிரதானமான ஒழுங்குசெய்தாலன்றி மற்றும்படி தூரக்கணக்காய் கூலி வாங்கப்படாது:—

| | காலை ஆறுமணிக்கும் சாயந்தரம் ஏழு மணிக்கு மிடையில். | | சாயந்தரம் 7 மணிக்கும் மறுநாட் காலை ஆறு மணிக்கு மிடையில். |
|---|---|---|---|
| | ரூ. ச. | | ரூ. ச. |
| ஒரு குதிரை இழுக்கும் முதல் வகுப்புக் கரத்தைக்கு காலை ஆறு மணியிலிருந்து சாயந்தரம் ஏழு மணி மட்டும் ... ... | 5 0 | ... | — |
| அடுத்த ஆறு மணி நேரத்திற்கு ... ... | 2 50 | ... | 3 20 |
| முதல் ஒரு மணித்தியாலத்திற்கு ... ... | 1 20 | ... | 1 50 |
| அதன்பின் ஒவ்வொரு மணித்தியாலத்திற்கு ... | 0 30 | ... | 0 35 |
| முதல் அரை மணித்தியாலத்திற்கு ... ... | 0 60 | ... | 0 75 |
| ஒரு குதிரை இழுக்கும் இரெண்டாம் வகுப்புக் கரத்தைக்கு காலை ஆறு மணி துவக்கம் சாயந்தரம் ஏழு மணி மட்டும் ... ... ... | 4 0 | ... | |
| அடுத்து ஆறு மணி நேரத்திற்கு ... ... | 2 0 | ... | 2 50 |
| முதல் ஒரு மணித்தியாலத்திற்கு ... ... | 1 0 | ... | 1 25 |
| அதன்பின் ஒவ்வொரு மணித்தியாலத்திற்கு ... | 0 25 | ... | 0 30 |
| முதல் அரை மணித்தியாலத்திற்கு ... ... | 0 50 | ... | 0 60 |
| இரண்டு குதிரைகள் இழுக்கும் கரத்தைக்கு ஒரு குதிரை இழுக்கிற கரத்தையின் வீதத்துடன் அதில் இன்னும் அரைப்பங்கு கூட்டிக்கொடுக்க வேண்டும். | | | |
| ஒரு மாடு இழுக்கும் கரத்தைக்கு, ஒரு மணித்தியாலத்திற்கு வல்லது அதற்குள் எவ்வளவு நேரத்திற்கும்... | 0 25 | ... | 0 30 |
| ஒரு கட்டை தூரத்திற்கு ... ... | 0 8 | ... | 0 10 |
| முதல் வகுப்பு கைக்கரத்தைக்கு:—முதல் அரை மணித்தியாலத்திற்கு அல்லது அதற்குள் எவ்வளவுநேரத்திற்கும் ... ... ... | 0 30 | ... | 0 35 |
| அடுத்து அரை மணித்தியாலத்திற்கு வல்லது அதற்குள் எவ்வளவு நேரத்திற்கும் ... ... | 0 15 | ... | 0 20 |

| | காலை ஆறு மணிக்கும் சாயந்தரம் ஏழு மணிக்கு மிடையில். ரூ. ச. | | சாயந்தரம் 7 மணிக்கும் மறுநாட் காலை ஆறு மணிக்கு மிடையில். ரூ. ச. |
|---|---|---|---|
| இரண்டாம் வகுப்புக்கரத்தைக்கு, முதல் அரை மணித்தியாலம் அல்லது அதற்குள் எவ்வளவு நேரத்திற்கும் | 0 25 | ... | 0 30 |
| அடுத்து அரை மணித்தியாலத்திற்கு அல்லது அதற்குள் எவ்வளவு நேரத்திற்கும் ... ... | 0 25 | ... | 0 30 |
| அதற்குப் பின்வரும் ஒரு அரை மணித்தியாலத்திற்கு அல்லது அதற்குள் எவ்வளவு நேரத்திற்கும் ... | 0 10 | ... | 0 15 |
| மேட்டுத்தெருவில் எவ்விடத்திருந்தாவது பிறவுண்றிக்தெரு, வாட்தெரு, அல்லது கச்சேரித்தெரு, அல்லது இந்தத் தெருக்களுள் எவ்விடத்திருந்தும், கச்சேரித் தெருவிற்கும், மேட்டுத்தெரு தொங்கல் மட்டும் எந்தத் தெருவிலிருந்தாகுதல் மேற்சொல்லிய எந்தத் தெருவில் எந்த இடத்திற்காவது இந்த எல்லைகளுள் ஒரு பயணத்திற்கு :— | | | |
| முதல் வகுப்புக் கைக்கரத்தைக்கு ... | 0 15 | ... | 0 20 |
| இரண்டாம் வகுப்புக் கைக்கரத்தைக்கு | 0 10 | ... | 0 15 |
| ஒரு குதிரை இழுக்கும் வக்கிகரத்தைக்கு :— | | | |
| முதல் அரை மணித்தியாலத்திற்கு | 0 40 | ... | 0 55 |
| அடுத்த அரை மணித்தியாலத்திற்கு ... | 0 40 | ... | 0 55 |
| அடுத்த ஒரு மணித்தியாலத்திற்கு அல்லது அதற்குள் எவ்வளவு நேரத்திற்கும் ... ... | 0 40 | ... | 0 55 |
| அடுத்துவரும் ஒவ்வொரு மணிநேரத்திற்கு அல்லது அதற்குள் எவ்வளவு நேரத்திற்கும் ... | 0 16 | ... | 0 26 |
| ஒரு மாடு இழுக்கும் வக்கிகரத்தைக்கு மேற்குறித்த வீதத்தில் அரைவாசி கொடுக்கவேண்டும். | | | |

*கூலிக்கரத்தைகளைக் கூலிக்குவிட வேண்டியது கடமை.*

261. கூலியமராது சொந்தக்காரன் வீட்டில், கரத்தைகள் தங்குமிடத்தில், அல்லது வேறெந்த இடத்திலாவது நிற்கும் உத்தரவுச்சீட்டுப்பெற்ற கரத்தைகளை யாராவது கூலிக்கு விடும்படி கேட்டால் எந்நேரத்திலாவது அக்கரத்தைகளைக் கூலிக்கு விடுவது சொந்தக்காரனது அல்லது ஓட்டுபவனது கடமையாகும். அப்படி செய்யத்தவறுவதற்குப் போதிய ஞாயம் காட்டவேண்டும். நகரசங்க வெல்லைக்குள் கரத்தைகள் செல்லக்கூடிய எந்தத் தெருவிலிருந்து வேறெந்த தெருவுக்கும் போகவேண்டுமென்றாலும் கொண்டுபோக வேண்டும்.

*உடன்படிக்கை.*

அப்படியாய் கூலிக்கு விடாதது நீதியென்பதற்கு சொந்தக்காரனாவது ஓட்டுபவனாவது போதிய அத்தாட்சி காட்டவேண்டும். கூலிக்குக் கரத்தை கேட்பவர் கூலிக்கடவுடன் கட்டளைச் சட்டத்தின் பிரகாரம் கூலியைக் கொடுக்கவேண்டும். கரத்தையைப் பாவிக்குமுன் கேட்டாலும் கொடுக்கவேண்டும்.

*பாவிப்புக்குதவாத வண்டில்கள், வண்டிகள் தங்குமிடங்களுட்பிரவேசிக்கப்படாது.*

262. உத்தரவுபெற்ற வெந்தக் குதிரைக்கரத்தையும் அவத்தமாய் அல்லது பழுதாய் அல்லது வேறெதுவும் வகையில் பிரயாணிகளின் இருப்பிடத்திற்கும் வசதிக்கும் தகாதவிதமாய் இருந்தால், வண்டில்கள் தங்குமெந்தப் பிரசித்த விடத்திற்குள்ளும் உட்படவிடப்படாது.

*கூலிக்கரத்தைகளை தெருவில் தரிக்கப்படாது.*

263. உத்தரவடைந்த குதிரைவண்டிக்காறனெவனுவது, பிரயாணிகளை இறக்குவதற்காகவல்லது ஏற்றிக்கொள்ளும் நோக்கத்திற்காகவேயன்றி, எந்த தெருவிலாகுதல் அல்லது வேறொரு வண்டிக்குப் பக்கமாகவாகுதல் தனது வண்டியைத் தரிக்க வல்லது நிற்பாட்டக்கூடாது, அல்லது வேறெந்தக் குதிரை வண்டிக்காறனையுமாவது யாரையும் ஏற்றிக்கொள்ளுதலையும் அல்லது இறக்குதலையுமாவது தடைபண்ணவாகுதல், அல்லது வேறெந்த உத்தரவுபெற்ற வண்டிக்காரன் கூலிவாங்குகிறதை வேணுமென்று தடைபண்ணவும் அல்லது தடைபண்ணத் தெண்டிக்கவும் கூடாது.

*உத்தரவுப்பத்திரம்.*

264. கூலிக்கு விடும் குதிரைக்கரத்தைச் சொந்தக்காரனுக்குக் கொடுபடும் உத்தரவு, கரத்தைக் சட்டளைச்சட்டத்துச் செடூலிலுள்ள B என்னும் பத்திரத்தில் இருக்கவேண்டும். அப்படியான உத்தரவை வேறொருவன்பேரில் சாட்டுதல்பண்ணக்கூடாது. அக்கிராசனர் தமது எண்ணத்தில் தகுதியெனக் காணில், ஏற்றதெனக் காணும் நிருவாகசங்கமைய ஒரு விசேஷ உத்தரவுவைச்சேர்ந்த அல்லது விசேஷ பொருத்தத்தில் மாத்திரம் கூலிக்குவிட வென்றிருக்கும் குதிரைக்கரத்தைக்காவது கொடுப்பதும், அப்படியான கரத்தைச் சொந்தக்காரனையும், கரத்தை ஓட்டுபவனையும் முன்னே குறிக்கப்பட்ட இந்தப் பிரிவின் ஆணைப்பிரமாணங்களின் அதிகாரத்திருந்து விலக்குதலும் அக்கிராசனருக்கு நீதியாகும். இவ்வண்ணமாய் விசேஷ உத்தரவுபெற்ற கரத்தைவண்டிகள் தங்கும் பிரசித்த விடத்திற் குட்பிரவேசிக்கப்படாது.

*கரத்தைக்காரன் ஒரு சட்டையும் அணிந்து உத்தரவின் இலக்கமுடைய தகடுமொன்று கொண்டுபோதல்வேண்டும்.*

265. உத்தரவுபெற்ற குதிரைக்கரத்தைக்காறனெவ்வருவனும் ஒரு அங்கியல்லது சட்டையுமணிந்து தக்கவதிகாரியால் கொடுக்கப்பட்ட கரத்தைக்காறனின் உத்தரவின் இலக்கமிடப்பட்ட தகடு கொண்டுபோதல் வேண்டும்.

*ஒரு கரத்தையின் தளபாடத்தை உறுதிப்பத்திரம் பெறுவதற்காய் வேறொரு கரத்தைமேல் வைத்திருப்பது.*

266. சோதனைகாரனின் உறுதிப்பத்திரம்பெற்ற ஒரு குதிரைக்கரத்தையின் அல்லது கோச்சுவண்டியின் தளபாடங்களின் பின் காண்பவைகளில் எவற்றையாவது உறுதிப்பத்திரம் பெறுதற்காய் வேறொரு குதிரைக்கரத்தையில் அல்லது கோச்சுவண்டிமேல் வைத்திருந்தால் சொந்தக்காரன் குற்றவாளியாவான் :—

| | |
|---|---|
| விளக்குகள் | மெத்தைகள் |
| கண்ணாடிபோட்ட உத்தரவு | கூடாரம் அல்லது மூடி. |

*குதிரை முதலியன பூட்டாத கரத்தையொன்றும் பாதையில் விட்டிருக்கப்படாது.*

267. எந்தப் பிரசித்த ரோட்டு அல்லது தெருவிலும் தற்செயலாய் உடைந்துபோனவொழிய மாடு அல்லது குதிரைபூட்டாத உத்தரவுபெற்ற கரத்தைகளை விடப்படாது. இவ்விதமாய் உடைந்த கரத்தைகளை எடுப்பதற்காய் வேண்டிய நேரத்திற்குமேல்விடக்கூடாது. இவ்விதமான ஒழுங்கு வண்டிகள் தங்குவதற்கான இடங்கள் ஏற்படுத்துமுன் நிறைவேற்றப்படாது.

*கரத்தையில் கண்டெடுக்கும் சாமான்கள்.*

268. கூலிக்குப் பிடித்த கரத்தையில் யாராகிலும் தன் சாமானெதுவையும் மறதியாய் எடுக்காது விட்டுப்போகச் சம்பவித்தால், அவற்றைக் கண்டெடுத்த பன்னிரெண்டு மணித்தியாலத்திற்குள் கரத்தைச் சொந்தக்காரனுவது ஓட்டுபவனுவது அச்சாமானை இருந்தவிதமே சமீபத்திலிருக்

னும் பொலிசு ஸ்டேஷனில் சொந்தக்காரனவற்றை திரும்ப எடுப்பதற்காய் வைக்கவேண்டும். இவ்விதமாய் வைக்கப்பெறும் பொன் வெள்ளி நகைகளல்லாத மற்றுஞ் சாமான்களைப் பெற்றுக் கொள்ளுஞ் சொந்தக்காரன் அவற்றை அவ்விடத்தில் பவுத்திரத்தில் வைத்த வண்டிச் சொந்தக்காரன் அல்லது ஓட்டுபவனுக்குச் சாமானைப் பெற்றுக்கொள்ளுமுன் 25 சதம் நன்கொடை கொடுக்கவேண்டும். இவ்விதமாய் கண்டெடுக்கப்படுஞ் சாமான்கள் பொன் வெள்ளி நகையாயிருக்கச் சம்பவித்தால், அவற்றின் சொந்தக்காரன், கரத்தைச்சொந்தக்காரனுக்கு வல்லது ஓட்டுபவனுக்கு ஒரு ரூபா நன்கொடை புரியவேண்டும். இவ்விதமாய் கரத்தைகளில் கண்டெடுத்து சமிபத்திலிருக்கும் பொலிசு ஸ்டேஷனில் வைக்கப்பட்ட சாமான்களை அவைகளை வைத்த ஒரு மாசத்திற்குள் சொந்தக்காரன் தேடிப்போகத் தவறுங்கால், பிரசித்த பத்திரிகை ஒன்றில் விளம்பரஞ் செய்து அவற்றை பிரசித்த ஏலத்தில் விற்கப்படும். இவ்விதமாய் விற்றுவரும் பணம் அவற்றை விற்பதற்கான செலவு நீக்கி மிகுதி சங்கத்தின் பொதுவான வரும்படியோடு சேர்க்கப்படும்.

---

## 16 ம் அதிகாரம்.

*பிரசித்தமான முழுகுமிடம்.*

269. பிரசித்தமான வெளியான இடங்களில் முழுகிறதற்காக பாவிக்கப்படுகின்ற ஒவ்வொரு கிணறும் 2 அடி உயரத்துக்குக் குறையாமல் பாதுகாப்பான சுவரைக்கட்டியிருப்பதுமன்றி, நிலத்திலிருந்து மேற்பரப்புக்குக் கீழே சொல்லப்பட்ட சுவரானது வெளிப்பக்கத்துக்கு 2 அடி நாலுக்கு சீமேந்து போடப்பட்டிருக்கவேண்டும்.

*தண்ணீரைப் பாயவிடவேண்டும்.*

270. அப்படிப்பட்ட பிரசித்தமான கிணற்றை சுற்றியிருக்கும் நிலம் சரிவாகவும் தண்ணீர் ஓடக்கட்டப்பட்டிருக்கும் மதவுக்கூடாய் வெளிப்படப்படும்படி விடவேணும்.

*கிணறுகளில் சீலைகள் தோய்க்கப்படக்கூடாது.*

271. ஞாயப்பிரமாணத்தின்படி யாதாமொரு பொருளையென்றாலும் உடுப்புகள் பாய்கள் என்றாலுஞ்சரி பிரசித்த கிணற்றுக்குக்கிட்ட களுவத் தோய்க்கப்படக்கூடாது.

*வாளிகளுக்கு மைபூசவேண்டும்.*

272. மேற்சொல்லப்பட்ட பிரசித்த கிணறுகளில் முழுகுகிறதற்காக பாவிக்கப்படும் வாளிகள் வருஷம் ஒருமுறை மைபூசப்பட்டு நாள் வீதம் சுத்தப்படுத்தப்படவேண்டும்.

*வருத்தமுள்ளவன் ஒருவனும் முழுகப்படாது.*

273. கிரந்தி அல்லது தொத்துவியாதிக்காறர் அல்லது அதிலிருந்து கொஞ்சஞ் சுகமடைந்தவர்கள் அப்படிப்பட்ட பிரசித்தமான கிணற்றின் தண்ணீரை முழுக்குக் குளிப்பு கழுவுதலுக்குப் பாவிக்கப்படாது, அல்லது முழுகுகிறதற்காய் சங்கம் பிறம்பாக வைத்திருக்கும் எந்த இடத்திலும் தண்ணீர் எடுக்கப்படாது.

*கட்டளைச்சட்டங்களை கவனிக்கத் தவறுகிற குத்தகைகாறனுக்குக் குற்றம்.*

274. அப்படிப்பட்ட பிரசித்த கிணற்றையுடைய சொந்தக்காறன் அல்லது குத்தகைகாறன் மேலே சொல்லப்பட்ட துணைச்சட்டங்களுக்கு தாங்களிணங்கி நடப்பதுமல்லாமல், இவைகளை மீறி நடக்கவிடவும்படாது.

*வாவியில் முழுகுகிறது விலக்கப்பட்டிருக்கிறது.*

275. யாதாமொரு மனுஷனும் கண்டி வாவியின் எந்தப் பகுதியிலும் அல்லது வாவியூற்றிருக்கும் பாலத்துக்குக்கிட்ட முழுகிறதற்கு ஆக விடப்பட்ட இடத்தைத் தவிர குளிக்கவும் முழுகவுங் கூடாது.

*மீன் பிடிக்கப்படாது.*

276. கண்டி வாவியில் அல்லது உடவற்கலாக் குண்டேனின் அல்லது டனுமதுவா ஓயாவுக்குக்கிட்ட அல்லது வேலைகளுக்காகச் சேகரித்து வைத்திருக்கும் தண்ணீர் தடாகத்தின் சபாநாயகரின் உத்தரவின்றி யாதாமொருவனும் மீன்பிடிக்கப்படாது.

*வாவிகளில் மிருகங்களைக் கழுவப்படாது.*

277. யாதாமொரு மனுஷனும் கண்டி வாவியில் அல்லது முழுகுகிறதற்கு விடப்பட்ட இடத்தில் அல்லது முழுகுமிடத்துக்கு சொல்லுமாற்றில் ஆடுமாடு குதிரை பன்றி செம்மறி அல்லது வேறெந்த மிருகங்களையும் அல்லது உடுப்புகள் பாய்களை எந்தப் பொருள்களையும் ஞாயப்பிரமாணத்தின்படி கழுவப்படாது, அல்லது கொண்டுபோகவுஞ் செலுத்தவும் அல்லது அப்படிப்பட்ட மிருகத்தை எந்த முகாந்தரத்துக்காகுதல் சொல்லப்பட்ட வாவியில் அப்படிப்பட்ட முழுகும் இடங்களில் ஆறுகளில் கொண்டுபோகப்படாது.

---

## 17 ம் அதிகாரம்.

### வழிகாட்டிகளுக் குரியது.

*உத்தரவுபெற்ற வழிகாட்டிகள் சட்டை அணிய வேண்டும்.*

278. ஒவ்வொரு உத்தரவுபெற்ற வழிகாட்டியும் 1887 ம் ஆண்டின் 15 ம் இலக்கக் கட்டளைச் சட்டத்தின்படி கறுத்த நீல கோட்டு நீல றேந்தை பிடித்ததாயும் சொல்லப்பட்ட சட்டளைச்சட்டத்தின் 5 ம் பிரிவில் கேட்டுக்கொண்டபடி முத்திரையையும் வலதுமார்பில் அணிந்திருக்கவேண்டியது. அந்த சட்டை நகரவிசாரணைச் சங்கத்தினால் செலவின்றி கொடுக்கப்பட்டிருக்கவேணும். லைசென்ஸ் தவணை முடிவுபெறும்பொழுது சங்கத்துக்குத் திரும்பி அதைக்கொடுத்துப் போடவேணும் அல்லது புதிய கோட்டுச்சட்டை கொடுக்குமுந்தி அதைக் கொடுத்துப்போடவேண்டும்.

*பொக்கற் றெஜிஸ்றரைக் கொண்டுதிரியு வேண்டும்.*

279. கூலிக்குப்பிடிக்கிறவர்களும் பொலிசு உத்தியோகஸ்தர் கவுன்சில் உத்தியோகஸ்தர் பார்க்கும்படி ஒவ்வொரு உத்தரவுபெற்ற வழிகாட்டியும் தன்னுடன் ஒரு பொக்கற்றெஜிஸ்றரைக் கொண்டுதிரியவேண்டும். இந்த வழிகாட்டி லைசென்ஸ் வாங்கும்பொழுது சங்கத்தவர்களிடம் ஒரு பொக்கற் றெஜிஸ்றரை வாங்கிக்கொள்ளவேணும். செலவில்லாமல் கொடுபடும். அந்த றெஜிஸ்றரை சபாநாயகர் சொல்லும் முறையாய் வைத்துக்கொள்ளவேண்டும்.

280. பின்னால் சொல்லப்படும் சம்பளத்தை ஞாயப்பிரமாணத்தின்படி ஒவ்வொரு உத்தரவு பெற்ற வழிகாட்டியும் அப்படிப்பட்ட வழிகாட்டியின் ஊழியங்களைத் தேவைப்பட்ட எந்த மனுஷனிடத்திலிருந்தும் வாங்க உரித்துள்ளவனாயிருக்கிறான் :—

| | சதம். |
|---|---|
| முதல் மணித்தியாலத்துக்கு அல்லது அங்குள்ள பகுதிக்கு ... | 50 |
| ஒவ்வொரு மேற்பட்ட மணித்தியாலத்துக்கு அல்லது அங்குள்ள பகுதிக்கு | 25 |

---

## 18 ம் அதிகாரம்.

*எங்கே தாட்கப்பட்ச் சுடப்படவேண்டியது.*

281. 1862 ம் ஆண்டின் 12 ம் இலக்கத்தின்படி சவக்காலையாகப் பாவிக்கும்படி பிரசித்தமபண்ணின இடத்திலும் சவக்காலையின் சுடுகாடுமாயிருக்கவேண்டுமென்று 1894 ம் ஆண்டின் 2 ம் இலக்கத்தின்படி சங்கத்தவர்களால் காட்டப்பட்ட இடத்திலன்றியும் வேறுமிடத்தில் ஒருவரும் கவுன்சல் உத்தரவின்றித் தாட்கவுஞ் சுடவுங் கூடாது.

*தாட்கிற சுடுகிற இடங்கள் பதிவுபண்ணப்பட்டு காவலாளனுடைய பேர் எழுதப்பட்டிருக்கவேண்டும்.*

282. ஆராகுதொரு மனுஷன் சுடுகிறதற்கு அல்லது தாட்கிறதற்கு உரித்துள்ளவனாயிருந்தால் சபாநாயகருக்கு எழுதிக் கேட்டு அதைப் பதிந்துகொள்ளவேண்டும். அந்த நிலத்தை வைத்திருக்கிறவனுடைய பேரையும் அந்த நிலத்தை சேர்வேயர் அளந்த படத்தையும் வைத்திருக்கவேண்டும். அப்படிப்பட்ட பெட்டிசத்தில் காவலாளென்று பெயர்கொண்ட மனுஷன் அவனுடைய வேலையையும் கடமைகளையும் அவனுடைய விருப்பத்துக்கு ஏற்றுக்கொள்ளவேண்டியது.

*அதற்குக் காவலாளின்பேர் சொல்லப்படாவிட்டால் காவலாளன் யார்.*

283. காவலாளுக்கு பேரிடப்படாவிட்டால் அல்லது அப்படிப் பேரிடப்பட்ட காவலாளன் மேலே சொல்லப்பட்ட விதமாய் பெட்டிசத்தில் கையெழுத்துப்போடாமலிருப்பானாகில், எப்போ சுடுகிற அல்லது தாட்கிற நிலத்தின் பதிவுக்குப் பெட்டிசங்கொடுத்தவன் அந்த நிலத்தைக் காவல்பண்ணுகிறவனும் அங்கே சொல்லப்பட்ட கட்டளைச்சட்டங்களை மீறுவானேயாகில் அவனே உத்தரவாதியுமாயிருப்பான்.

*காவலாள் செத்தால் புதிய பதிவு தேவை.*

284. சுடுகிற அல்லது தாட்கிற இடத்தின் காவலாளி மரணத்தினால் அல்லது ஏலாததன்மையினால் தன் கடமையை நிறைவேற்றுமலிருப்பானேயானால், இந்த அதிகாரத்திலிருக்கும் துணைச்சட்டத்தின்படி பதிவுபண்ணும்படி பெட்டிசங் கொடுபடவேண்டும். அப்படிப்பட்ட பெட்டிசத்துக்கு முடிவுவந்து பதிவுபட்டாலொழிய அந்த நிலத்தில் சுடவுந் தாட்கவுங் கூடாது. சபாநாயகரின் குறித்த உத்தரவில்லாமல் அல்லது கெல்த் ஒபிசரை அறியாமல் இவைகளைச் செய்யப்படாது.

*தாட்கிறதற்கு முன் சேட்டிபிக்கற் வேணும்.*

285. 1895 ம் ஆண்டின் பிறப்பு இறப்புப் பதிவின்படி சேட்டிபிக்கற் கொண்டுவந்தாலொழிய சுடவுந் தாட்கவுங் கூடாது. அந்த சேட்டிபிக்கற் தாட்கிற அல்லது சுடுகிற இடத்தில் காவலாளிக்குக் கொடுக்கவேண்டும்.

*காவலாள் றெஜிஸ்டரை வைத்திருக்கவேண்டும்.*

286. நகரவிசாரணைக்குட்பட்ட ஒவ்வொரு சுடுகிற தாட்கிற நிலத்தில் காவலாளியின் கடமையும் தாட்கிற சுடுகிறவர்களைப்பற்றியும் ஒரு றெஜிஸ்டரை வைத்துக்கொள்ளவேண்டும். சபாநாயகர் சொல்லியபடி அவனதை வைத்திருந்து அந்த றெஜிஸ்டரின் ஒரு கொப்பியை நகரவிசாரணைக் கந்தோருக்கு 24 மணித்தியாலத்துக்குள் கொடுக்கவேண்டும்.

*சபாநாயகர் சுடுகிற தாட்கிற இடங்களைச் சோதனைபண்ணலாம்.*

287. ஞாயப்பிரமாணத்தின்படிக்கு சபாநாயகர் இந்த முகாந்தரத்துக்காக எந்த மனுஷனும் அவரால் எழுத்தில் வல்லமைபெற்றிருந்தால் எந்த நேரத்திலும் எந்தச் சுடுகிற தாட்கிற நிலத்தையும் அதைச்சேர்ந்த புத்தகங்கள் உறுதிகளையும் சோதித்துப்பார்க்கவேண்டும்.

*நிலங்களைச் சுத்தமாய் வைத்திருக்கவேண்டும்.*

288. தாட்கிற அல்லது சுடுகிற ஒவ்வொரு காவலாளியின் கடமை சபாநாயகரின் மனத்திருத்திக்கு நல்ல நிலைபரத்திலும் சுத்தமாயும் வைத்திருக்கவேண்டும்.

*சம்பளம் சபாநாயகரினால் ஏற்றுக்கொள்ளப்படவேண்டும்.*

289. சபாநாயகரின் ஏற்றுக்கொள்ளுகிறதற்காக தாட்கிற சுடுகிற நிலத்தின் ஒவ்வொரு காவலாளியும் சுடுகிற தாட்கிற சம்பளத்தின் சட்டத்தைக் கொடுக்கவேண்டும். அப்படிப்பட்ட சம்பளம் சபாநாயகரினால் ஏற்றுக்கொள்ளப்பட்டால் வாங்கலாம்.

*தாட்கிற இடங்கள் சுவரினால் அல்லது வேலிகளினால் அடைபட்டிருக்கவேண்டும்.*

290. ஒவ்வொரு சுடுகிற தாட்கிற நிலமும் சபாநாயகரின் திருத்திக்கு திறமான சுவர் அல்லது வேலி போடப்பட்டிருக்கப்படவேண்டும்.

*பிரேதங்கள் பொதுவான பிரேதக்குழியில் அல்லது றெஜிஸ்றர் பண்ணப்பட்ட சவக்காலையில் அடக்கம்பண்ணப்படும்.*

291. கண்டி மாகாணத்துக்கென்று புறம்பாக சவக்காலை அல்லது சுடுகாடு இல்லாவிட்டால் ஒவ்வொருதருடைய பிரேதமும் பொதுவான சவக்காலையில் அடக்கம்பண்ணப்படும் அல்லது சுடப்படும்.

*நகரவிசாரணை எல்லைக்கப்பால் அடக்கம்பண்ண உத்தரவுபெறவேண்டியது.*

292. நகரவிசாரணை சபாநாயகருக்கு அல்லது அவரில்லாத வேளையில் கவுன்சலின் சக்கிடுத்தாருடைய உத்தரவின்றி கண்டி மாகாணத்துக்குள் மரித்த ஒருவனை அந்த எல்லைக்கப்பால் அடக்கம்பண்ணவாகுதல் சுடவாகுதல் கூடாது. அடக்கம்பண்ணப்படுகிறதற்கு கேட்டனுப்பிய பெட்டிசத்துக்கு மறுமொழி சொல்ல சபாநாயகர் அல்லது சக்கிடுத்தார் 6 மணித்தியாலத்துக்குள் தவறினால், எந்தசவக்காலை சுடுகாட்டிலாகுதல் அடக்கம்பண்ண யாருக்கும் ஞாயமுண்டு.

---

## 19 ம் அதிகாரம்.

*ஈட்டுக்காறன் ஈட்டைப் பதியவேண்டும்.*

293. நகரசங்கத்தின் அசைவற்ற ஆதனத்தையும் ஈடுபிடிக்கு மெவனும் அல்லது அவனுடைய உருமைக்காறர்களை அல்லது அப்படிப்பட்ட ஈட்டுக்காறன் காலஞ்செல்ல நியாயப்பிரமாணத்தின்படி அப்படிப்பட்ட காலஞ்சென்ற ஈட்டுக்காறனுக்காக வருபவன் சங்கத்தின் கந்தோரில் அப்படிப்பட்ட ஈட்டைப் பதியில் அல்லது அப்படிப்பட்ட ஈட்டை உடையவன் எவனும் அதைப் பதிய விரும்பினால், அவனல்ல அவனுடைய காரியகாறன் அப்படி ஈடுவைக்கப்பட்ட காணியின் சொந்தக்காறனின் அல்லது ஈடுவைத்தவனின் பேரையும் மேல்விலாசத்தையும் தன்னுடைய பெயரையும் அத்துடன் கொடுத்து இன்னும் சொந்த ஆதனத்தின் சில குறிப்புகளையும் அவசியமென்று காணப்பட்டால் கொடுக்கவேண்டும். அப்படிப்பட்ட மனுஷனால் செலவு சதம் 50 கொடுக்கப்பட்டால், சங்கமானது மேலே சொல்லப்பட்ட குறிப்புகளை சங்கத்தின் கந்தோரில் இருக்கும் புத்தகத்தில் பதிந்து வைக்கப்படும்.

*றெஜிஸ்றரைச் சோதிக்கலாம்.*

294. அப்படிப்பட்ட ஒவ்வொரு றெஜிஸ்றரும் சங்கத்தின் ஆபிசின் மணித்தியாலங்களில் எந்த நேரத்திலுஞ் சங்கத்துக்கு 25 சதம் கொடுக்கப்படுமேயாகில் பார்க்க விரும்புகிறவன் எவனும் டாப்புகளைச் சோதனைபண்ணலாம்.

*நடுக்கட்டலைப்பற்றிச் சங்கம் நொத்திசு கொடுக்கவேண்டும்.*

295. இந்த அதிகாரத்தில் 1 ம் துணைச்சட்டத்தில் கொடுக்கப்பட்டபடி ஏதாகுதொரு ஆதனத்தைப்பற்றி ஏதேனப்படிப்பட்ட றெஜிஸ்றர்பண்ணப்பட்ட ஈடு 1887 ம் ஆண்டின் 7 ம் இலக்கத்தின் 149 ம் பிரிவின் நகரவிசாரணைச்சங்கத்தின் கட்டளைச்சட்டத்தின்படி நடுக்கட்டப்படுமேயாகில், சொல்லப்பட்ட 51 ம் பிரிவின் 151 ம் பிரிவின் கட்டளைச்சட்டத்தின்படி அந்த ஆதனத்தை விற்பனவுக்கு 14 நாளைக்குமுன் பிரசித்தப்படுத்தவேண்டும். தபாலில் அல்லது அப்படிப்பட்ட றெஜிஸ்டர்பண்ணப்பட்ட நோட்டிசையும் சொல்லப்பட்ட நடுக்கட்டலையும் வருமதியாயிருந்த வரியின் தொகையை அறவுபண்ண அல்லது நடுக்கட்ட ஆதனத்தைப்பற்றி எழுத்தில் கொடுக்கவேண்டும்.

ஈட்டுக்காறன் வரியின் மிகுதிப்பணத்தைக் கொடுக்கலாம்.

296. அப்படிப்பட்ட அந்த ஈட்டுக்காறனும் அல்லது உரித்தாளிகளும் அல்லது அவர்களில் யாரென்றாலும் சங்கத்துக்கு மேலேசொல்லப்பட்டு நடுக்கட்டப்பட்ட காணியை விற்குமுன் எந்த நேரத்திலும் வரிப்பணத்தில் கொடுக்கவேண்டிய தொகையிருந்தால் அல்லது நடுக்கட்டின செலவு இருக்குமானால், அப்படிப்பட்ட ஆதனத்தின் சொந்தக்காறன் அல்லது ஈட்டுக்காறன் கொடுக்குமதியாயிருந்தால், அப்படிப்பட்ட பணத்தைக் கொடுக்கும் வேளையில் நடுக்கட்டின ஆதனத்தை விட்டுவிடலாம்.

---

## 20 ம் அதிகாரம்.

### 1887 ம் ஆண்டு 7 ம் சட்டத்தின் 122 ம் பிரிவைதிருத்திய 1896 ம் ஆண்டு 1 ம் சட்டத்தின் 20 ம் பிரிவின் பிரகாரம் செய்யப்பட்ட இதன் கீழ் காண்கிற அணைச்சட்டங்கள் கோதம்பை மாவால் பாண் சுடுகிற வீடுகளை மாத்திரம் குறிக்கும்.

297. ஒவ்வொரு பாண் சுடுகிற வீட்டையும் நன்றாக காற்று உள்ளே வீசக்கூடியதாகவும் வெளிச்சமுள்ளதாகவும் இருக்கவேண்டும். அதின் சுவர்கள் சாந்தால் பூசப்பட்டதாகவும் சுண்ணாம்பால் வெள்ளையடிக்கப்பட்டதாகவுமிருக்கவேண்டும். அதின் நிலம் சிமெந்தியால் பூசப்பட்டதாகவும் அவ்விடத்தில் கானுகள் தேவையான மட்டில் கட்டியிருக்கவும் வேண்டும்.

298. எந்த பாண் சுடுகிற வீட்டையாவது ஒரு குழி கக்கூசிலிருந்து அல்லது ஒரு மக்கிலிருந்து 30 அடி தூரத்துள்ளாக இருக்கப்படாது, அல்லது அவ்விடங்களிலிருந்து வரப்பட்ட நாற்றங்கள் படக்கூடிய ஓர் இடத்தில் இருக்கக்கூடாது.

299. பாண்சுடுகிறதற்காக பாவிக்கப்படுகிற ஓர் வீட்டை மனிதர் குடியிருக்கும் வாசஸ்தானமாக அல்லது வேறு எந்தக்காரணத்திற்காகவாவது பாவிக்கக்கூடாது.

300. பாண்சுடுகிற வீட்டில் பாவிக்கப்படுகிற அல்லது அதைச்சேர்ந்த சகல சாமான் தளபாடங்களையும் துப்பரவாக வைக்கவேண்டும்.

301 பாண்செய்கிறதற்கு சேர்க்கப்படுகிற மா தண்ணீர் மற்றும் பதார்த்தங்கள் நல்லதாகவும் தீனுக்கு தகுதியாகவுமிருக்கவேண்டும்.

302. பாண்சுடுகிற வீட்டிலும் அதைச்சேர்ந்த இடத்திலும் இருக்கப்பட்ட சகல அழுக்கு, ஊத்தை, குப்பை, முதலியவை தாமசமில்லாமல் நீக்கவேண்டும். கான்களை தண்ணீர்விட்டு கழுவவும் வேண்டும்.

303. தொத்துவியாதி அல்லது அருவருப்புள்ள வியாதி பிடித்திருக்கப்பட்டவரை அல்லது அவ்விதவியாதிக்காரனை புதுக்க சாந்துப்பண்ணினவரை அல்லது குளிக்காமல் கழுவாமல் அழுக்காயிருக்கப்பட்டவரை பாண்சுடுகிற வீட்டில் வேலைக்கு வைக்கக்கூடாது.

304. ஒவ்வொரு பாண்சுடுகிற வீட்டையும் அதில் நடத்தப்படுகிற வேலையையும் நகரசங்கத்தலைவர் அல்லது சௌக்கிய விசாரணை உத்தியோகஸ்தர் அல்லது சங்கத்தலைவரால் உத்தரவு பெற்றவர் பார்வையிடுகிறதற்கு எப்போதும் திறந்திருக்க வேண்டும்.

---

## 21 ம் அதிகாரம்.

அறிவித்தலை கொடுக்கவேண்டியது.

305. மேலே சொல்லப்பட்ட அணைச்சட்டங்களின்படி வீட்டின் கட்டடமுள்ள அல்லது நிலமுள்ள இடத்தை உடையவனுக்கு அல்லது குடியிருப்பவனுக்கும் அறிவித்தல் தேவையாயிருக்குமேயானால், அப்படிப்பட்ட அறிவித்தலை அப்படிப்பட்ட வீட்டில் குடியிருப்பவனுக்கு கொடுக்கலாம். அல்லது அவனுடைய குடும்பத்தின் வேலைக்காரனுக்கு அல்லது ஒருபராந்த அங்கத்தவனுக்குக் கொடுக்கலாம். அறிவித்தல் கொடுக்கப்படாவிட்டால், அல்லது அங்கே ஒருவன் குடியிருக்காவிட்டால், அப்படிப்பட்ட வீட்டின் கட்டடத்தில் அல்லது காணியின் வெளியரங்கமான பகுதியில் ஒட்டிவிடலாம்.

அணைச்சட்டங்களை மீறுகிறவர்களுக்குத் தெண்டம்.

306. இங்கே சேர்க்கப்பட்ட எந்த அணைச்சட்டங்களையும் அல்லது இனிமேல் நியாயப்பிரமாணத்தின்படி அப்படிப்பட்ட அணைச்சட்டங்களினால் குற்றமென்று விளங்கப்படுத்தி அல்லது தடைப்படுத்தின ஒரு செய்கையைச் செய்தால், அல்லது அப்படிப்பட்ட அணைச்சட்டத்தின்படி சொல்லப்பட்டவைகளைச் செய்யத்தவறினால், அப்படிப்பட்டவன் எவனும் 20 ரூபாய்க்கு மேற்படாத தெண்டத்தை கொடுக்கக் குற்றவாளியாய்க் காணப்படுவான். இன்னுமவன் கட்டளையை மீறி வருவானேயாகில், ஒரு நாளைக்குப் பத்து ரூபாய் வீதம் அப்படிப்பட்ட மீறுதலுக்கு சபாநாயகரினால் அறிவித்தல் கொடுக்கப்பட்டு ஒவ்வொரு நாளும் 10 ரூபாய் வீதம் அவனுக்குக் குற்றம் போடப்படும். சபாநாயகரினால் உத்தரவு கொடுக்கப்பட்டாலன்றி அணைச்சட்டத்தின் மீறுதலுக்கு கோட்டார் ஒரு வழக்கையும் ஏற்றுக்கொள்ள மாட்டார்கள்.

---

மாதிரி A. (அதிகாரம் 11 அணைச்சட்டம் 11) கண்டி நகர விசாரணைச்சங்கம்.

இந்தக் கருமத்தில் ———.

இன்னானுக்கு ———.

நீ இந்தச் சங்கத்தின் முன் அல்லது சங்கத்தின் கொம்மிற்றிக் கூட்டத்துக்கு முன் உன்காரியத்துக்குத் தகுந்தபடி ——— வெளிப்படவேண்டும் (சந்திக்கு மிடத்தையும் இதில் எழுது). இல ——— மணிநேரம் ——— 190 ——— மேலே சொல்லப்பட்ட கருமத்தில் சாட்சி சொல்ல.

சபாநாயகரின் கட்டளைப்படி,

———

சக்கிறெத்தார்.

நகர விசாரணை ஆபீசு,

கண்டி, 190 —— ம் ஆண்டு ——— மீ —— ந் உ.

நிர்ணய நகரவிசாரணைச் சங்கத்தின் 138 ம் பிரிவில் தேவைப்பட்டபடி.

மாதிரி B. (அதிகாரம் 3 அணைச்சட்டம் 37) கட்டளைச்சட்ட இலக்கம் 7, 1887.

இன்னாருக்கு ———.

| தெரு. | வீட்டின் இலக்கம். | சொந்தக்காரன். | குடியிருப்பவன். | வருஷ வாடகை விலை. | குறிப்புகள். இங்கே சொல் ஆரால் பழுதுபார்க்கப்பட்டு வைக்கப்பட்டிருந்ததென்றும் வரி கொடுக்கப்பட்டதென்றும். |
|---|---|---|---|---|---|
| | | | | | A. பழுதுபார்த்த செலவு ஆரால் பொறுக்கப்பட்டது ——— காரியத்துக்குத் தகுந்தபடி சமக்காரரோ சமக்காரியோ.<br>B. பிரசித்த விதங்கள் வரிகள் ஆரால் கொடுக்கப்பட்டது ——— காரியத்துக்குத் தகுந்தபடி சமக்காரரோ சமக்காரியோ. |

கண்டி, 190 —— ம் ஆண்டு ——— மீ — ந் உ.

கையெழுத்து ———.

138. வரிக்கு அல்லது வரிகளுக்கு உட்டிருக்கும் அந்த வீடும் கட்டிடமும் காணியும் நகர விசாரணைச் சங்கமான து வருஷாந்த மதிப்பை எடுக்க உதவியாக நியாயத்தின்படி சபாநாயகர் அப்படிப்பட்ட வீடுகள் கட்டிடங்கள் அல்லது காணிகளில் குடியிருப்பவர்கள் சொந்தக்காரர்கள் வருஷாந்த தொகை அல்லது வாடகை நிர்ணயக் கொடுக்கவேண்டும். அப்படிப்பட்ட முகாந்தரத்துக்கும் சபாநாயகருக்கு நியாயமாக இருக்கும் அல்லது அந்த முகாந்தரத்துக்கும் நியமிக்கப்பட்டவனுக்கும் பொழுது காரித்துப் பொழுதுபடும் அந்த நேரத்துக்குள்ளும் அப்படிப்பட்ட வீடுகள் கட்டிடங்கள் காணிகளுக்குள் உட்புகுந்து சோதனைபண்ணலாம். கேட்டுக்கொண்ட நாள் தொடக்கம் ஒரு கிழமைக்குள் அந்த நிர்ணயக் கொடுக்க அலைத்தட்டினால் அல்லது கொடுக்கத் தவறும் எவனும் அல்லது ஆரும் ஒருதன் அறிந்து தப்பிதமான நிர்ணயப் பிழையாகக் கொடுத்தால் அல்லது சபாநாயகர் அல்லது மேலே சொல்லப்பட்ட நியமிக்கப்பட்ட ஒருவன் தேவையான காலத்தில் உட்பிரவேசித்த அப்படிப்பட்ட வீட்டைக் காணியைக் கட்டிடத்தை அளவுபண்ணச் சோதனைபண்ணத் தடைப்படுத்தினால் 50 ரூபாவுக்கு மேற்படாத குற்றத்தைப்பெற பாத்திரவாளுயிருக்கிறான்.

மேலே சொல்லப்பட்ட பெயர் ——— இந்தத் திகதியிலிருந்து ஒரு கிழமைக்குள் நிர்ணய இங்கே தேவைப்பட்டபடி முடித்துக்கொடுக்கவேண்டும்.

சபாநாயகரின் கட்டளைப்படி,

நகரவிசாரணை ஆபீசு,
கண்டி, 190 —— ம் ஆண்டு ——— மீ —— ந் உ.

———
சக்கிரேத்தார்.

---

மாதிரி C. அதிகாரம் 3 அணைச்சட்டம் 38.

நகரவிசாரணைச் சங்கத்தின் 146 ம் பிரிவில் தேவைப்பட்ட செடுலின் 1887 ம் ஆண்டின் 7 ம் இலக்கத்தின் கட்டளைச்சட்டம்.

குடியிருப்பவன் ———.
தெரு ———.
வீட்டிலக்கம் ———.
வண்டில் திருக்கல் அல்லது றிக்சா மற்ற எந்த விதமான சாரேட்டுகளின் இலக்கம்.
எந்த விதமான வண்டில்கள் அல்லது திருக்கல்களின் இலக்கம்.
றிக்சோவின் இலக்கம்.
குதிரைகள், பேணிகள், கோவேறுகழுதைகள் இலக்கம்.
வண்டிமாடுகள், கழுதைகள் இலக்கம்.
உச இஞ்சி அகலமுள்ள கில்லுகளையுடைய பின்னைகள் வண்டில்களின் இலக்கம்.

———
இருப்பவனின் கையெழுத்து.

கண்டி, 190 —— ம் ஆண்டு ——— மீ —— ந் உ.

128. நகரவிசாரணைச் சங்கத்துக்கு நியாயப்பிரமாணத்தின்படி எக்கிக்கியூற்றிவ் சங்கத்தில் மகாராசாவின் உத்தரவின்படி வல்லமைகொடுக்கப்பட்டவர்களால் நகரவிசாரணைக்குள் பாவிக்கலாகும் அல்லது வைத்திருக்கப்படும் கழுதைகள், வண்டில்மாடுகள், கோவேறுகழுதைகள், பேணிகள், திருக்கல்கள், வண்டில்கள், சாரேட்டுகள்மேல் வரிவைக்க வல்லமையுண்டு.

145. சபாநாயகர் நகரவிசாரணைக் கந்தோரில் வைக்கப்பட்டிருக்கும் புத்தகத்தின் வித்தியாசமான கோடுகளுக்குள் காலத்துக்குக்காலம் ஆயித்தமாக்கி பதிவுபண்ணவேண்டும். அதில் உருத்துள்ளவர்கள் எவரும் சோதனைபண்ணவிடலாம். 128 ம் பிரிவின் கீழ் அவர்கள் வரிகொடுக்க கடமைப்பட்டிருக்கிறார்கள், வண்டில் மிருகங்கள் கணிக்கப்பட்ட வரியின் தொகை.

146. அப்படிப்பட்ட இடாப்பை சபாநாயகர் உண்டுபண்ண உதவிசெய்ய சபாநாயகர் அல்லது அவரால் வல்லமை கொடுக்கப்பட்ட எந்த உத்தியோகஸ்தனும் அப்படிப்பட்ட வரியை கொடுக்கவேண்டிய எவனுக்கும் சபாநாயகர் வரிகொடுக்க அவசியமென்று தீர்மானித்தால் ஒரு செடூலில் வண்டில்களைப் பற்றியும் வைத்திருக்கும் மிருகங்களைப்பற்றியும் விபரமாய் நிரப்பி அனுப்பவேண்டும்.

• அந்தச் செடூலை எழுதி நிரப்பி கையெழுத்துப்போட்டு திகதியும்போட்டு அது அனுப்பப்பட்ட ஒவ்வொருவரும் வரிகொடுக்க உடந்தையிருந்தாலும்சரி இல்லாவிட்டாலும்சரி நகரவிசாரணைக் கந்தோருக்கு திருப்பி அனுப்பவேண்டும். பெற்றுக்கொண்ட நாள்தொடுத்து அந்தச் செடூலை ஒரு கிழமைக்குள் அனுப்ப அல்லது நிரப்ப கவலையீனம்பண்ணினால், அலைத்தட்டினால், விட்டுவிட்டால், அல்லது அறிந்துக்கொண்டு தவறீனமான நிர்ணயக்கொடுத்தால் 50 ரூபா மேற்படாத குற்றம் கொடுக்கவேண்டும்.

மேலே சொல்லப்பட்டவன் ஒரு கிழமைக்குள் செடூலை தேவைப்படி நிரப்பி அனுப்பவேண்டும்.

சபாநாயகரின் கட்டளைப்படி,

கண்டி, நகரவிசாரணைக் கந்தோர்,
190 —— ம் ஆண்டு ——— மீ —— ந் உ

———
சக்கிரேத்தார்,

கொடுத்த திகதி, 190— ம் ஆண்டு ——— மீ —— ந் உ.

மாதிரி D.—அதிகாரம் 3 அணைச்சட்டம் 40

| தொத்தாரியின் பெயர். | டாப்பில் சேர்ந்த கிளாக்குகளின் தொகை. | கிளாக்குகளின் பெயர். | டாப்பில் சேர்ந்த திகதி. | டாப்பில் சேர்ந்த கிளாக்குகள் சேவித்த காலம். |
|---|---|---|---|---|
| | | | | |

மேலே சொல்லப்பட்ட தேள்வைப்பட்ட நிற்றேணை 15 நாளைக்குள் நிரப்பி அனுப்பவேண்டும்.

சபாநாயகரின் கட்டளைபடி,

———

சக்கிறேத்தார்.

கண்டி, நகரவிசாரணைச் சங்கம்,
190— ம் ஆண் ———— மீ —— ந் உ.

---

மாதிரி E.—அதிகாரம் 6 அணைச்சட்டம் 65.
சந்தை லாய லைசென்ஸ்

இலக்கம் ——.

———— இலக்கமுள்ள லாயத்தை எடுக்க இங்கே வல்லமைப்பெற்றிருக்கிறவன் ———— விற்பனவுக்காக பிரசித்த சந்தையில் ———— மாதமொன்றுக்கு வாடைப்பணம் ரூபா ———— இந்த லைசென்ஸின் பின்பக்கத்தில் எழுதப்பட்டிருக்கும் பொருத்தனைகளுக்குள் உடன்பட்டிருக்கிறான்.

இந்த லைசென்ஸ் நகரவிசாரணைச் சங்கத்தின் விருப்பத்தின்படி நடைபெறலாம்.

கண்டிப்பகுதியில் திகதிபண்ணின நாளில்
190— ம் ஆண் ———— மீ —— ந் உ.

———

நகரவிசாரணைச்சங்க சக்கிறேத்தார்.

---

லைசென்ஸ் கொடுக்கப்பட்ட பொருத்தனைகள்.

1. ஒரு தொகைரூபா ———— பிணையாகக் கட்டப்படவேண்டும், இந்தப் பொருத்தனைகளின்படி வாடை கொடுக்காவிட்டால் கட்டப்பட்ட தொகை இளக்கவேண்டும்.
2. மாதாந்த வாடை முற்பணமாக ஒழுங்காய்க் கொடுக்கவேண்டும்.
3. லைசென்ஸை மாற்றக்கூடாது.
4. லைசென்ஸ் 6 ம் அதிகாரத் அணைச்சட்டத்தின்படிக்கும் 7 ம் அதிகாரத்தின் 18 ம் அணைச்சட்டத்தின்படிக்கும் சந்தைப்பிரமாணக் கட்டளைச்சட்டம் இவைகளின்படி உறுதிபண்ணப்படவேண்டும்.

நான் அதேக பொருத்தனைகளுக்கு இணங்குகிறேன்.

———

லைசென்ஸ்காரனின் கையெழுத்து.

கண்டி, 190 —— ம் ஆண்டு ——— மீ —— ந் உ.

---

மாதிரி F.—அதிகாரம் 7 அணைச்சட்டம் 91.

கண்டி, 190 —— ம் ஆண்டு ———— மீ —— ந் உ.

உத்தரவு ————.
இலக்கம் ————.
கொண்டுபோவோன் ———— பின்னால் விபரிக்கப்படும் மிருகங்களைக்கொள்ள உத்தரவுண்டு.
விபரம் ———— நிறம் ———— வயது ———— வருஷங்கள் ———— மாதங்கள்.
வலதுபக்கத்தின் குறிச்சூடு ————.
இடதுபக்கத்திற் குறி ————.
குறிப்புகள் ————.
மாட்டிப்பவன் கையெழுத்து ————.

———

சோதிப்பவன் கையெழுத்து.

---

மாதிரி G.—அதிகாரம் 7 அணைச்சட்டம் 99.

இந்த கொலைசெய்த நான் ———— மாட்டின் தலை சோதனைபண்ணின பிற்பாடு ———— மாடுகட்டுமிற வீட்டின் இலக்கம் ———— அவனால் இறச்சி கொண்டுபோன வண்டியின் இலக்கம்.

———

மாடடிக்கிற வீட்டுக்காரன்.

கண்டி, 190 —— ம் ஆண்டு ———— மீ —— ந் உ.

### மாதிரி H (அதிகாரம் 7 அணைச்சட்டம் 102.)

19 —— ம் ஆு —— மீ —— ந் உ.
மாட்டுச்சே... இ...

| விபரம். | நிறம். | வயசு. | குட்டுக் குறிகள். | | மாடு அடித்தவன் பெயர். | குறிப்பு. |
|---|---|---|---|---|---|---|
| | | | வலது பக்கம். | இடது பக்கம். | | |
| | | | | | | |

### I மாதிரி வாசகம்.

நாய்களினது ரிஜிஸ்டர் பதிவின் உறுதிப்பத்திரம்.

பகுதியின் நம்பர் ——

ரிஜிஸ்டர்பண்ணியதின் நம்பர் ——.

இத்தால் உறுதிப்படுத்துவது யாதெனில் —— வீட்டில் குடியிருக்கும் —— இதன் கீழ் இலட்சணங்காட்டியிருக்கிற ஒரு நாய் இன்றையத்தினம் இந்தக் கந்தோரில் ரிஜிஸ்டர்பண்ணியதற்குரிய முதல் ரூபாய் ஒன்று கொடுத்துவிட்டது.

நாயின் இலட்சணம்.

சாதி ——.
ஆணோ பெண்ணோ ——
நிறம் ——.
இவ்வுறுதிப்பத்திரம் பங்குனிமாசம் 31 ந் தேதிவரைக்குஞ் செல்லும்.

நகரசங்கக் கந்தோரில்,
கண்டி 19 —— ம் ஆு —— மீ —— ந் உ.

சக்கடுத்தார்.

### அநுபந்தம்.—J. மாதிரி வாசகம்.

நாய்களைப்பற்றிய அணைப்பிரமாணங்களின்படி கொடுக்கவேண்டிய கணக்கு.

வீட்டு நம்பர் ——.
வீதி ——.
வீட்டில் குடியிருப்பவருடைய பெயர் ——.

| வைத்திருக்கும் நாய்களின் இலக்கம். | விபரம் | | | | சொந்தக்காரன் பெயர். | முதல் கொடுக்கிற தேதி. |
|---|---|---|---|---|---|---|
| | சாதி. | ஆணோ பெண்ணோ. | நிறம். | விசேஷ குறிப்பு. | | |
| | | | | | | பங்குனிமீ 31 ந் தேதி அல்லது அதற்கு முன். |

கொடுத்த தேதி ——.
கண்டி, 19 —— ம் ஆு —— மீ —— ந் தேதி.

குடியிருப்பவர் கையெழுத்து.

மேலே பெயர் கண்டிருக்கும் வீட்டில் குடியிருப்பவர் மேற்கண்ட கணக்குக் கடதாசியை ஒரு கிழமைக்குள் எழுதி அனுப்பும்படி கேட்கப்படுகின்றான். அப்படிச்செய்யக் கவனயீனமாய்த் தவறுகிறவர் 20 ரூபாய் அபராதத்திற்குட்படுவார்.

சங்கத்தலைவரின் கட்டளைப்படி,

நகரசங்கத்துக் கந்தோர்,
கண்டி, 1 —— ம் ஆு —— மீ —— ந் உ.

சக்கடுத்தார்.

### மாதிரி K (அதிகாரம் 11, அணைச்சட்டம 125.)

சேர்பனவுக்கு லீவு —— இடம் ——
இந்த 19 —— ம் ஆு மார்கழிமாதம் 31 தேதி வரைக்கும்.

### மாதிரி O. (அதிகாரம 13 அணைச்சட்டம 189.)

லைசன்சு.

—— உடைய —— அழுக்குவாரியின் வேலைகளைச்செய்கிறதற்கு கண்டியின் சபாநாயகரால் உத்தரவு கொடுக்கப்பட்டது.

சபாநாயகரின் கட்டளைப்படி.

நகரவிசாரணைச் சங்கம்,
கண்டி, 19 —— ம் ஆு —— மீ —— ந் உ.

சக்கடுத்தார்.

கட்டளைகள்.

இந்தக் கட்டளைக்கு மீறிநடக்கிறவன் எவனோ அவன் அக்கிராசனாதிபதியினால் தெண்டம் அடிக்கப்படுவான். இந்த லைசன்சு கைக்கொண்டவன் இரா 10 மணி வரைக்கும் விடிய 3 மணி வரைக்கும் சுத்தப்படுத்த வேண்டும். அந்த அழுக்கை நகரசங்கத்தார் சொன்னபடி இடத்தில் புதைக்க வேண்டும்.

## L.—அட்டவணை.

1. வீட்டுப் பாவனைக்கல்லாமல் வேறு காரணங்களின் நிமித்தம் அளவுயந்திரத்தின்பேரால் ———— வீட்டுக்குத் தண்ணீர் கொடுப்பதற்கு ———— ஒரு திறத்தவராகவும் கண்டி நகர சங்கத்தாருக்காக சங்கத்தலைவர் மற்றத் திறத்தவராகவும் செய்துகொண்ட பொருத்தனை.

2. வீட்டுப் பாவனைக்கல்லாமல் வேறு காரணங்களுக்கு முன்சொன்ன வீட்டுக்குத் தண்ணீர் பெற்றுக்கொள்வதற்கு உத்தரவுபெற்றதின் நிமித்தம் வீட்டுச் சொந்தக்காரன் இத்தால் இதன்கீழ் கண்டிருக்கிற பொருத்தனைகளுக்கு உடன்படுகிறான் :—

(a) அங்குல அளவு யந்திரத்தால் தண்ணீர் கொடுபடவேண்டியது.
(b) அவ்வித அளவுயந்திரத்தின் வாடகைக்காக கண்டி நகரசங்கத்தாருக்கு முற்பணமாக மூன்றுமாதத்திற்கு அல்லது அதன் ஒரு பகுதிக்கு ரூபாய் ———— சொந்தக்காரன் இறுக்க அல்லது இறுக்கும்படி ஒழுங்குபண்ண வேண்டும்.
(c) ஒவ்வொரு மாதமும் பெற்றுக்கொண்ட தண்ணீரின் தொகைக்கு ஆயிரங்கலனுக்கு ———— ரூபா வீதம் கண்டி நகரசங்கத்தாருக்குச் சொந்தக்காரன் இறுக்க அல்லது இறுக்கும்படி ஒழுங்குபண்ண வேண்டும். 190 —— ஆண்டு ———— மாதம் முதலாந் தேதி முதல் இறுப்பனவு செய்யவேண்டும்.

3. இறுக்கவேண்டிய தேதி முதல் பதினைந்து நாளைக்குள் நகரசங்கத்தாருக்கு அளவுயந்திரத்தின் வாடகை அல்லது செலவு இறுக்காவிட்டால் பிறதீங்கலாகத் தண்ணீர் பெற்றுக்கொள்வதின் உரித்தை இழந்துபோக வேண்டுவதுமல்லாமல் தண்ணீர் கொடுத்தலையும் சங்கத்தார் நிறுத்தலாம்.

4. 1896 ம் ஆண்டின் 19 ம் இலக்கச்சட்டத்துக்கு இணைக்கப்பட்ட 12 ம் அதிகாரத்தின் சட்டங்கள் அல்லது அவைகளுக்குப் பதிலாக வைக்கப்பட்ட துணைச்சட்டங்கள் இத்தப் பொருத்தனையின் ஒரு பகுதியாக ஏற்றுக்கொள்ளப்படுவதுமல்லாமல் அதன் திறத்தவரையும் கட்டுப்படுத்தும்.

5. திறத்தவர்கள் ஒரு பகுதியாரால் அதை அழிக்க அவர்களுக்கு நோக்கம் இருக்குதென்று ஏழு நாளைக்குமுன் மற்றத்திறத்தவருக்கு அறிவித்தல் கொடுப்பதினால் அப்பொருத்தனையை அழித்துப்போடலாம். அவ்விதமாக அதை அழிக்கச் சம்பவித்தால் வீட்டுச் சொந்தக்காறன் அல்லது அதில் குடியிருப்பவன் புதுப் பொருத்தனை செய்யப்படும் வரையில் பிறதீங்கலாகத் தண்ணீர் பெற்றுக்கொள்ளுகையின் பிரயோசனத்துக்கு உரித்துள்ளவனாயிருக்கமாட்டான்.

---

## M.—கண்டி நகரசங்கம்.

நம்பர் —— ——.
—— —— வீட்டில் குடியிருப்பவனுக்கு வீட்டு நம்பர்.

| குறிப்பு நம்பர். | தண்ணீர்க்கணக்கு. | |
|---|---|---|
| | கணக்கெடுத்தது ————.<br>கணக்கெடுத்தது —— ——.<br>செலவழித்த கலன் ————<br>வரையில் ————.<br><br>190 —— ம் ஆண்டு ———— மீ —— திகதி. | கலன்.<br><br><br><br>கையொப்பம் ———— |

---

## N.—கண்டி நகரசங்கம்;

நம்பர் —— ——.

நகரசங்க கந்தோர்,
190 —— ம் ஆண்டு ———— மீ —— திகதி.

———— இலக்க —— அங்குல அளவுயந்திரத்தின்பேரால் செலவழித்த தண்ணீரின் கணக்கு ———— யில் அளவுயந்திரத்தில் கணக்கிட்ட கலன் ———— யில்.

| | | | | |
|---|---|---|---|---|
| அளவுயந்திரத்தில் கணக்கிட்ட கலன் | | ... | ... | |
| செலவழித்த தண்ணீர் கலன் பெற்றுக்கொள்ளக்கூடிய தண்ணீர் | | | ... | |
| மேலதிகமான கலன் | ... | ... | ... | |

| | | | | |
|---|---|---|---|---|
| அளவுயந்திரத்தின் பாவிப்புக்கு | ... | ... | ... | ரூபா |
| அதிகம் பெற்றுக்கொண்ட ஒவ்வொரு 2,000 ம் கலனுக்கு | | | ... | „ |
| முன் கொடுபட்ட கணக்கின்பேரால் | ... | ... | ... | „ |
| | | | | ரூபா |

————
கண்டி நகரசங்கக் கணக்கன்,

————
பணம் பற்றிக்கொண்டது.

————
கண்டி நகரசங்க காரியஸ்தன்.

---

H. C. COTTLE, GOVERNMENT PRINTER, COLOMBO, CEYLON.